செம்மண்

நிலம் 1 துகள் 23 வள்ளுவர் ஆண்டு 2051, 19 - 25 மார்கழி 2020 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-

நான் எதையும் மறைக்கவில்லை மனம் திறக்கிறார் சத்தியமூர்த்தி

■ சந்திப்பு: **பிரேம்** ■

கொரோனா பற்றி "நான் எதையும் மறைக்கவில்லை" என்கிறார் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி. அண்மையில் மருதனார்மடத்தில் கண்டறியப்பட்ட கொரோனா தொற்றுக் கொத்தணியில் பாதிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்காட்ட அவர் முற்பட்டார் என்கிற சர்ச்சை கிளம்பியது. இதற்காக ஊடகங்கள் அவரை வசைபாடின.

கொரோனா பற்றிய தகவல்களை மறைப்பது குற்றம் என்று கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவரான தரைப் படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவிக்குமளவிற்கு இந்த விவகாரம் பரபரப்பாக்கப்பட்டது. கடந்த சனிக்கிழமை பிற்பகலில் **31** பேருக்கு தொற்று ஏற் பட்டிருக்கின்றது என்று உள்ளகத் தகவல்களை வைத்துச் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்ட நிலையில் அன்றைய தினம் **6** பேருக்கு மட்டுமே தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக சத்திய மூர்த்தி அறிவித்திருந்தமையே இந்தச் சர்ச்சைகளின் அடிநாதம்.

அவரது இந்த அறிவிப்பால் முதலில் **31** பேருக் குத் தொற்று என்று செய்தி வெளியிட்ட ஊடகங்கள் அதனை உடனடியாகத் திருத்திவெளியிடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. ஆனால் மறுநாள் ஞாயிற் றுக்கிழமை கொழும்பில் இருந்து வெளியிடப்பட்ட தொற்றாளர்கள் பட்டியலில் சனிக்கிழமை சோதனை களில் **36** பேருக்குத் தொற்று ஏற்பட்டது என்று தெரி விக்கப்பட்டதும், சத்தியமூர்த்தி உண்மையை மறைக்கப்பார்த்தார் என்கிற குற்றச்சாட்டு வெடித்துக் கிளம்பியது. தாம் முதலில் வெளி யிட்ட செய்தியில் தவறில்லை என்பதை நிரூ பிப்பதற்கு ஊடகங்கள் இந்தக் குற்றச்சாட்டைத் தமது கையில் எடுத்துக்கொண்டன.

இது பற்றியும் இன்றைய கொரோனா நில வரங்கள் தொடர்பிலும் செம்மண் அவரை அணுகியபோது தனது பணிச் சுமைக்கு மத்தி யிலும் உடனடியாக இணக்கம் தெரிவித்து இன்முகத்துடனும் பொறுமையுடனும் உரை யாடினார்.

கே: வடக்கில் கொரோனாவின் உண்மை நிலவரம் என்ன?

ப: மருதனார்மடக் கொத்தணி மூலமான தொற்றாளர்கள் தினசரி கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

ஆகவே, தொற்றை இல்லாமல் செய்வதற்கு சமூக இடைவெளி, முகக் கவசம் போன்ற சுகாதார நடைமுறைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

நாங்கள் ஒரு இலக்கு (ராக்கெட்) சனத் தொகையைக் குறிவைத்துப் பரிசோதனை களைச் செய்கிறோம். அப்படி இலக்கு வைக் கப்படாத இடங்களில் இருப்பவர்களுக்கும் தொற்றுப் பரவி மறைந்து போகலாம் அல்லது அதிலிருந்து மேலும் மேலும் பரவி புதிய தொற் றாளர்களும் கண்டுபிடிக்கப்படலாம்.

வடக்கில் இதுவரைக்கும் அனேகமான வர்களில் கொரோனாத் தொற்று வடக்கில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தவில்லை. ஆனால் வயதானவர்கள் சுவாச நோய் போன்ற வற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொற்று ஏற்படும்போது பெரும் விளைவுகள் ஏற்படலாம்.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்படக் கூடியவர்களைப் பாதுகாப்பது என்றால் எல்லோ ருமே அதற்கு ஒத்துழைக்க வேண்டும். தொற் றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு அது மிக முக்கியம்.

சுகாதாரத் துறையினரின் அறிவுறுத் தல்களை பின்பற்றுவதன் மூலம் மேலும் தொற்று பரவாமல் தடுக்கலாம்...

4

ஒடுக்கப்பட்ட மக்களின் நீதி செத்துப் போனதால் தான் நீதிமன்றமே தீப்பிடித்துக் கொண்டது.

18

தென்னிலங்கை ஆயுர்வேதப் பாணி களின் வருகை ஓய்ந்தபாடில்லை

5

தன்னால் முடியாது என்று தெரிந்தும் வாழ்க்கையுடன் போராடுகிறார்.

12

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிரீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்

தேர்தலையும் தாண்டி...!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அடுத்த கூட்டத்தொடர் எதிர்வரும் பங்குனி (மார்ச்) மாதம் இடம் பெறவுள்ள நிலையில் அது பற்றிய கதையாடல்கள் இப் போதே தொடங்கிவிட்டன. இந்தக் கூட்டத் தொடரை தமிழர் தரப்பு ஒரே கொள்கையுடன் அணுகுவதற்கான காய்நகர்த்தல்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் முன்னெடுத்துள்ளார் என்று செய்திகள் வெளி வந்துள்ளன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடனும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரனுட னும் அவர் இது தொடர்பில் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்தினார் என்றும் அந்தச் செய்திகள் தெரிவித்தன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2015ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இருந்து கொழும்பு விலகிக்கொண்டு விட்டதாக அறி விக்கப்பட்டுள்ள நிலையில் வரவிருக்கும் கூட்டத்தொடர் மிக முக்கியமானதாக இருக்கும் என்பதில் மாற்றுக்கருத் தில்லை. திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட பேரினவாத, மனிதாபிமானமற்ற அடக்குமுறைப் போரால் பாதிக்கப் பட்ட தரப்பான தமிழர்களுக்கு நிலைமாறுகால நீதியைப் பெற்றுத்தரும் ஒரு வழியாக இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. எனவே தமிழர்களுக்கு இயல்பாகவே அதன் மீது ஒரு ஈர்ப்பும் பிடிப்பும் நம்பிக்கையும் இருந்தன.

உண்மையில் 2013ஆம் ஆண்டு மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் முதன் முத லில் நிறைவேற்றப்பட்டபோது அது ஒரு மிகப் பெரிய வெற்றி என்று தமிழர்கள் தரப்பில் பார்க்கப்பட்டது. உலக நாடுகள் இணைந்து தமிழர்களின் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைத் தந்துவிடப்போகின்றன என்கிற எதிர்பார்ப்பை அது ஏற்படுத்தியது. இதன் தாக்கம் அடுத்து வந்த பல தேர்தல்களிலும் கணிசமான தாக்கத் தைச் செலுத்தியதையும் மறந்துவிடமுடியாது.

2013ஆம் ஆண்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் ராஜபக்சக்களே ஆட்சியில் அதிகாரத்தில் இருந்தார்கள். அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஏற்கவில்லை. 2015ஆம் ஆண்டுத் தீர்மானம் 2013ஆம் ஆண்டுத் தீர்மானத்தை வழிமொழிந்து நிறைவேற்றப்பட்ட ஒன்றே. அதனை நிறைவேற்றுவதாக கொழும்பு ஆட்சியாளர்கள் இணை அனுசரணை வழங்கியமையே அதில் தனித்துவ மானது. அப்போது ரணில் - மைத்திரி கூட்டு ஆட்சியிலி ருந்தது. பின்னர் அந்தக் கூட்டும் தீர்மானத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்தவில்லை.

இப்போது அந்தத் தீர்மானத்தில் இருந்து இலங்கை அரசு விலகிக்கொண்டதால், மேற்குலகினது அழுத்தம் அதன் மீது அதிகரிக்கும் என்கிற கணிப்பில் எதிர்வரும் பங்குனி மாத ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வு மீது தமிழர்களுக்கு அக்கறை ஏற்படுவதில் தவறில்லை. ஆனால், கடந்த 7 வருடங்களில் ஐ.நா. தீர்மானத்தால் சாதிக்க முடியாததை அது அடுத்த ஆண்டில் சாதித்து விடும் என்கிற ரீதியில் மக்கள் ஏமாற்றப்படாமல் இருக்க வேண்டும்.

இப்போதே தொடங்கிவிட்ட ஐ.நா. அமர்வு தொடர் பான கதையாடல்கள் தேர்தலில் வாக்கு வேட்டையாடும் உத்திகளில் ஒன்றாக நகர்த்தப்படாமல், இன நலன் சார்ந்து முன்னெடுக்கப்படும் காய்நகர்த்தலாக அமையவேண்டும். அதற்கான பொறுப்பும் கடமையும் தமிழ்த் தேசிய அர சியலுக்குத் தலைமை தாங்குவதாகத் தம்மை நாடாளு மன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு இருக்கின்றது.

ஐ.நா. மூலம் இலங்கை அரசு மீது கொடுக்கப்படும் அழுத்தத்திற்கு கடந்த காலங்களில் என்ன பயன் என்பது எம் எல்லோருக்கும் தெரியும். அந்த அழுத்தம் மட்டுமே ராஜபக்சக்களைத் தீர்வை நோக்கி உந்தித் தள்ளும் என்று எடுத்துக்கொள்ள முடியாது. எனவே ஐ.நா. கூட்டத் தொடரையும் தாண்டி இன நலன்களுக்கான நடவடிக்கை கள் விரிவுபடுத்தப்படவேண்டும். பரிகார நீதியை நோக் கிய நகர்வுகளை தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைந்து நகர்த்துவதற்கான கொள்கை இணக்கத்தை எட்ட முயற்சிக்கவேண்டும். ஐ.நா. கூட்டத்தொடர் அதற்கான முதற்படியாக வேண்டுமானால் இருக்கலாமே தவிர, அதுவே இலக்கானதாக இருக்கமுடியாது. அப்படியல்லாத எந்தவொரு முயற்சியும் தேர்தலை இலக்காகக் கொண்ட காய்நகர்த்தலாகவே பார்க்கப்படும்.

கே: இங்கே ஏற்பட்டிருப்பது ஒரு சமூ கத் தொற்றுத்தானே, அப்படியிருக்கும்போது அது ஏன் கொத்தணிப் பரவல் என்கிற சொல் லாடலின் கீழ் மறைக்கப்படுகின்றது?

ப: கொத்தணிப் பரவல் என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் பலருக்கும் காணப் படுவது.

கே: அதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், ஏற்பட்டிருப்பது ஒரு சமூகத் தொற் றாகத் தோன்றுமிடத்து அதனை அந்தப் பதத்தில் பயன்படுத்தாமல் ஏன் கொத்தணி என்று குறிப்பிடுகிறார்கள்?

ப: மருதனார்மடம் கொத்தணி கண்டு பிடிக்கப்பட்டு ஒருசில நாள்களேதான் ஆகி யிருக்கிறது. இன்னும் சில நாள்கள் தொடர்ச்சியாகப் பரிசோதிக்கப்படும்பொழுது இரண்டு விதமான முடிவுகள் கிடைக்கலாம். ஒன்று இத்தோடு தொற்றுப் பரவல் கட்டுக் குள் வந்துவிடலாம் அல்லது இன்னும் பல ரிடமும் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்படலாம். எனவே சமூகத் தொற்று என்று சொல்வதற்கு இன்னும் ஒரு சில தினங்கள் அல்லது வாரங்கள் செல்லவேண் டும். இப்போதைக்கு ஒரு கொத்தணியைக் கண்டுபிடித்திருக்கிறோம் என்பதே உண்மை.

கே: மருதனார்மடத்தில் முதலில் கண்ட றியப்பட்ட நபருக்கு தொற்று எப்படி ஏற் பட்டது என்பது கண்டறியப்பட்டு விட்டதா?

ப: அதை உறுதிப்படுத்த முடியாத நிலையே இருக்கின்றது. தொற்று ஏற்பட்ட நபர் குறிப்பிட்ட ஒரு இடத்திற்குப் போய் வருபவரில்லை, குறிப்பிட்ட சிலரோடு மட் டும் பழகி வருபவருமல்லர். அவருடைய பயணங்களும் நடைமுறைகளும் கடும் சிக்கல் தன்மைகளோடு இருப்பதால் அவ ருக்கு தொற்று எப்படி ஏற்பட்டது என்பதை உறுதிப்படுத்த முடியாத நிலைதான் இருக்கி றது.

கே: மருதனார்மடம் கொத்தணிக்குப் பின்னர் பி.சி.ஆர். சோதனைக்காகப் பெறப் படும் மாதிரிகளின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கில் அதிகரித்திருக்கிறது. ஏற்கனவே 2 ஆயிரம் வரையான மாதிரிகள் சோத னைக்காகக் காத்திருக்கின்றன என்று கேள் விப்படுகின்றோம். இத்தகையதொரு நிலை யில் பெருமளவு மாதிரிகளை விரைவாகச் சோதிக்கக்கூடிய வசதிகள் போதியளவில் இங்கு இருக்கின்றனவா?

ப: வடக்கில் தினசரி 500 பரிசோதனை கள் செய்யப்படுகின்றன. இங்கு இப்போது இருக்கும் தொற்றின் அளவோடு ஒப்பிடும் போது இலங்கையின் சராசரிப்படி போது மானதாகத்தான் இருக்கிறது. ஏனைய நாடுகளோடு ஒப்பிட்டு இதைப் பார்க்க முடியாது. இலங்கையின் ஆளணி வளம் உபகரணங்களின் வளங்களோடு ஒப்பிட் டுப் பார்க்கும்போது நிலமையைச் சமாளிக் கக்கூடிய வகையில் இருக்கின்றது. எடுக்கப் படுகின்ற மாதிரிகளை இரண்டு அல்லது மூன்று நாள்களில் பரிசோதிக்கக்கூடிய தாகவே இருக்கின்றது.

இந்தப் பரிசோதனைகள் அனைத்தும் மத்திய கண்காணிப்பு நிலையத்தின் ஊடா கத்தான் செய்யப்படுகின்றன. அளவுக்கதிக மான மாதிரிகள் ஒரே நாளில் பெறப்பட்டால் மத்திய கண்காணிப்பு நிலையம் அதனை அனுராதபுரத்துடன் அல்லது மட்டக்களப்பு போன்ற வேறு இடத்திலுள்ள ஆய்வகத்தில் பரிசோதிக்க அனுப்பலாம்.

அதேநேரம் எமது ஆளணியை அதி கரித்து பரிசோதனைகளின் எண்ணிக்கையை இன்னும் அதிகரிப்பதற்கான வசதிகளும் இருக்கின்றன.

கே: நீங்கள் ஒரு மருத்துவ அதிகாரி என்ற வகையில் மருதனார்மடம் கொத் தணியால் ஏற்பட்டிருக்கக்கூடிய தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கக் கூடிய மிகச் சிறந்த நடவடிக்கைகள் என்று எவற்றைக் கருதுகிறீர்கள்? ஏற்கனவே எடுக் கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளின் மீதான பார்வையை, விமர்சனத்தை நான் கேட்க வில்லை. கொரோனாவைக் கட்டுப்படுத்து வதற்கு எடுக்கப்படக்கூடிய மிகச் சிறந்த நடவடிக்கைகள் எவை?

ப: கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுக்கும்போது பலவிடயங்களையும் பார்க்கவேண்டும். மக்கள் ஒன்றுகூடுவதைத் தடுப்பது, அவர்களது அன்றாடச் செயற் பாடுகளைக் கட்டுப்படுத்துவது, சமூக ஊடாட்டங்களை முடக்குவது என்பவற் றால் வேறு பல பெரும் விளைவுகளும் வரக்கூடும். மக்கள் ஏற்கனவே ஈடுபட்டுக் கொண்டிருந்த செயற்பாடுகளைக் கட்டுப் படுத்தும்போது பல உளவியல் தாக்கங்கள் ஏற்படக்கூடும்.

கொரோனா தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அதேநேரம் மக்களின் உடல், உள ஆரோக்கியத்தையும் பேண வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அதற்கு இன்னும் கூடுதலான வழிவகைகளை நாம் கையாள வேண்டும். கொரோனா மீது மக்களுக்கு பயம் ஏற்படுவதைக் குறைக்கும் அதே நேரம் தொற்றுப் பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

அதாவது பொது மக்களுக்கும் கொரோனா கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடு வோருக்கும் இடையில் நல்லதொரு சம நிலையும் நல்ல தொடர்பாடலும் இருக்க வேண்டும். உதாரணமாகச் சுகாதாரத் தினைக்களத்தினர், பொதுச் சுகாதார அதி காரிகள், காவல்துறை, சட்டங்களைக் கண் காணிக்கும் நீதிமன்றங்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு இடையிலான தொடர் பாடல் நெருக்கடியற்றதாக, இயல்பானதாக இருக்கவேண்டும். அதாவது சட்டங்கள் ஊடாகக் கட்டுப்படுத்துவது என்பதைத் தாண்டி மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடை முறைகளுக்கு ஊடாக பரவலைக் கட்டுப் படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஊடகங்களைப் பயன்படுத்து வது அதற்கானதொரு வழியாக இருக்க லாம்.

தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக கொரோனா குறித்து அதியுச்ச பயத்தை ஏற்படுத்தக்கூடாது. கொரோனா பற்றிய உண்மையான தகவல்கள் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும். மாறாக அதிகளவு பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய விடயங்க ளைத் தவிர்க்கவேண்டும்.

தடுப்பாளர்களும் மக்களும் ஒன்றிணைந் தால்தான் இதனைத் தடுக்கலாம்.

கே: அத்தகையதொரு சூழல் இங்கு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக நினைக்கிறீர் களா?

ப: அதற்கான பல முயற்சிகள் எடுக்கப் பட்டுவருகின்றன.

கே: அந்த முயற்சிகளுக்கு எவையெல் லாம் தடையாக இருக்கின்றன என்று நினைக் கிறீர்கள்?

ப: எமது பகுதிகளில் ஊடகங்களும் சமூக ஊடகங்களும் அறம் சார்ந்தவையாக இல்லை. அது மக்களுக்கு உண்மைகள் போய்ச் சேர்வதற்குத் தடையாக அமைய லாம். உதாரணமாக தொற்றுக்குள்ளான ஒருவர் பற்றி தேவைக்கதிமான விவரங் களை ஊடகங்கள் வெளியிடும்போது அப் படித் தங்களுக்கும் ஏற்பட்டுவிடுமோ என் கிற அச்சத்திலேயே சந்தேகத்திற்குரியவர் கள் தங்களைத் தாங்களாகவே வெளிப் படுத்தி பரிசோதனைகளைச் செய்யாமல் பின்னடித்துவிடக்கூடிய வாய்ப்புக்களை இந்த நிலைமை ஏற்படுத்துகின்றது.

தொடக்கத்தில் கொரோனாத் தொற்றா ளர்களைப் பெரும் குற்றவாளிகள் போன்று இந்த ஊடகங்கள் காட்டியமை ஒரு பெருந் தவறு. யாழ்ப்பாணத்திற்கு வந்த மதப் போத கர் ஒருவருக்குத் தொற்று இருந்தமையை அடுத்து அவரையொரு தீயவராகக் இந்த ஊடகங்கள் காட்டின. அதனால் பதற்றம், பயம், எம்மையும் குற்றவாளியாக்கிவிடு வார்களோ என்கிற அச்சம் எல்லாம் மக் களுக்கு ஏற்பட்டு அவர்கள் ஓடி ஒளிக்கப் பார்க்கிறார்கள்.

எனவே எல்லோருமே அவதானமாக இருக்கவேண்டும். அப்படியில்லை என் றால், நாம் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி விட்டோம் என்று நினைக்கின்றபோது அது மறைந்திருந்து எதிர்பாராத நேரத்தில் மீண்டும் வெளிப்படலாம். தொற்று ஏற்பட் டால் விரைவாக அவர்களைத் தனிமைப் படுத்தி, பரிசோதனைகளைச் செய்து, குணப் படுத்த நடவடிக்கை எடுப்பதற்குரிய சூழலை எல்லோருமேதான் உருவாக்கவேண்டும்.

கே: கொரோனாவின் தாக்கம் குளிர் காலத்தில் மீண்டும் அதிகரிக்கும் என்கிற எச்சரிக்கையை உலக சுகாதார அமைப்பு ஏற்கனவே விடுத்திருந்தது. மேற்குநாடுகள் பலவும் இந்த நிலையை எதிர்பார்த்துத்

தம்மைத் தயார் நிலையில் வைத்திருந்தன. தற்போதைய பருவ மழை மற்றும் குளிர் காலச் சூழல் தற்போதைய கொரோனா பரவலுக்கு உந்துதலாக இருக்கின்றது என்று கருதுகிறீர்களா? அப்படியிருந்தால் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருந்திருக்கிறோமா?

ம: ஓம்! இந்தக் காலச் சூழல் வைரஸ் பரவுவதற்கு ஏற்றதாக இருக்கின்றது. வெப்பம் அதிகமான காலங்களில் வைரஸ் அழிவடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன. இந்தக் குளிர் காலத்தில் அது (வைரஸ்) அழிவடையாமல் இருந்து பல்கிப் பெருகி பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கும் என்று தான் நம்புகின்றேன்.

அதற்கு நாங்கள் தயாராக இருந்தோமா என்றால், நீண்ட காலம் என்பதால் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்து பேணுவதில் பொதுமக்களுக்குச் சில அசௌகரியங்கள் இருந்தன. மக்களுக்குத் தொற்றுக் குறித்த அறிவு இருந்தும் அவர்கள் அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்யும் ஒரு மனநிலை இதனால் ஏற்பட்டது. அது பல பகுதிகளுக்கும் தொற்றுப் பரவுவதற்கு ஏதுவான நிலையை ஏற்படுத்தி விட்டது.

கே: இது எப்போது இயல்புக்குத் திரும்பும்? கொரோனாவுக்கு முன்பான நிலைக்கு எப்போது மீளுவோம்?

ம: உலக சுகாதார அமைப்பின் கருத்துப்படி ஒரு வருட காலத்திற்கு நீடிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 9 மாதங்கள் கடந்துவிட்டன. இதற்குள் இலங்கையில் 30 ஆயிரம் பேருக்கு மேலானோர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இன்னும் பல்லாயிரக்கணக்கான வர்களுக்கும் தொற்று ஏற்பட்டு தெரியாமல் தானாகவே குணமடைந்தும் போயிருக்கலாம். அதனால் தொற்று ஏற்படும் வீதம் வரும் மாதங்களில் குறையலாம். அத்துடன் இன்னும் சில மாதங்களில் இங்கு தடுப்பூசிகளும் வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதனால் தொற்றுப் படிப்படியாகக் குறையும் என்று எதிர்பார்க்கலாம்.

கே: இந்த நேர்காணலில் இந்தக் கேள்வியைத் தவிர்க்க முடியாது. அண்மையில் உங்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட ஒரு சர்ச்சை, மருதனார்மடம் தொற்றாளர்கள் தொடர்பிலான எண்ணிக்கையை நீங்கள் மறைக்கப் பார்த்தீர்கள், குறைத்துச் சொன்னீர்கள் என்பது. அதற்கு உங்கள் பதில் என்ன?

ம: நான் எதையும் மறைக்கவில்லை. அன்றைய தினம் உறுதியாக கண்டுபிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 6 மட்டுமே. அது தவிர 26 கொத்தணிப் பரிசோதனைகளிலும் தொற்று அடையாளப் படுத்தப்பட்டிருந்தது. கொத்தணிச் சோதனை என்பது, அதிகமான மாதிரிகள் வரும்போது இரண்டு மூன்று மாதிரிகளை ஒன்றாகச் சேர்த்து சோதனை செய்யும் முறை. அன்றைய தினம் சோதிக்கப்பட்டவற்றில் 26 கொத்தணிகளில் தொற்று கண்டுபிடிக்கப்பட்டது. அதன் அர்த்தம் 78 மாதிரிகள் கொண்ட தொகுதியில் தொற்று இருக்கின்றது என்பது.

தொற்று அடையாளம் காணப்பட்ட அந்த 26 கொத்தணிகளிலும் இருந்த 78 மாதிரிகளையும் தனித் தனியாகச் சோதித்துப் பார்த்தபின்னரே உண்மையில் எத்தனை தனிநபர்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்பது உறுதியாகத் தெரியும். ஆனால், அதற்கு முன்பே 31 பேருக்கு தொற்று என்று செய்திகள் வெளியாகிவிட்டன.

அதனால்தான் அன்றையதினம் 6 பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் மேலதிகமாக நடக்கும் சோதனைகளில் மேலும் முடிவுகள் தெரியவரலாம் என்றும் அறிவித்திருந்தேன். நான் எதனையும் மறைக்க முயற்சிக்கவில்லை.

26 கொத்தணிகளில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை வைத்து அவ்வளவு பேருக்குத்தான் தொற்று என்று கூறிவிடமுடியாது. ஏனெனில் அதில் 78 மாதிரிகள் இருந்தன. எனவே அதிக மானவர்களுக்குக்கூடத் தொற்று ஏற்பட்டிருக்கலாம். அதனால்தான் உறுதிப்படுத்தப்படாத தகவல்களை நான் வெளியிடவில்லை. சோதனைகள் முடியும்போது பின்னிரவாகிவிட்ட காரணத்தால் மறுநாள் 30 பேருக்குத் தொற்று என்பதை வெளிப்படுத்தினேன்.

சில ஊடகங்கள் நான் உண்மையை மறைப்பதாகச் செய்தி வெளியிட்டிருந்தன. கொரோனாவில் ஒருதரும் ஒரு மறைப்பையும் செய்யமுடியாது. அது மருத்துவ அறத்திற்கும்கூட மாறானது.

முதலாம் கட்ட கொரோனாப் பரவலின் போதுகூட இதுபோன்று அவசரப்பட்டு செய்தி வெளியிடப்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. அப்போது அதனை நாங்கள் பொய் என்று சொன்னோம். அப்போது தாம் விட்ட தவறுகளை இந்தச் சம்பவத்தில் நிவர்த்தி செய்யும் வகையில் என் மீது குற்றஞ்சாட்டவும் சில ஊடகங்கள் முயன்றிருக்கலாம்.

அன்றிருந்த நிலையில் இந்தக் கொத்தணிப் பரிசோதனைகள் குறித்து விளக்கமளித்து, அது குழப்பமான நிலையில் மக்களைப் போய்ச் சேரும் வகையில் ஊடகங்களுடன் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் நிலை இருக்கவில்லை. அதனால்தான் உறுதிப்படுத்தப்பட்ட தொற்று எண்ணிக்கையை மட்டும் தெரிவித்தேன்.

கே: இந்த நிலையில் மக்களுக்கான உங்கள் அறிவுரை என்ன?

ம: கொரோனாவிற்குப் பயந்துகொண்டு நீண்ட நாள் நோய்களுக்காகவும் திடீரென ஏற்படும் நெஞ்சு வலி போன்ற தாக்கங்களுக்காகவும் வைத்தியசாலைகளை நாடுவதைத் தவிர்க்கக்கூடாது. சாவகச்சேரியில் நெஞ்சுவலி ஏற்பட்ட ஒரு தாய் கொரோனா அச்சம் காரணமாக வைத்தியசாலையை நாடி உடனடியாக உரிய சிகிச்சையைப் பெறாது நாட்களைக் கடத்திய காரணத்தால் தேவையற்று உயிரிழந்திருக்கிறார். அதேபோன்ற சில வைத்திய நிபுணர்கள் சொல்கிறார்கள், பலரும் இந்தக் காலப் பகுதியில் "ஸ்ரோக்" நோயால் பாதிக்கப்படுகின்றார்கள் என்று. "பிரஷர்" காரணமாக இவ்வாறு "ஸ்ரோக்" வருவது அதிகரித்திருப்பதாக நம்பப்படுகின்றது. நாட்டுச் சூழலால் மன அழுத்தம் ஏற்படுவதால் இவ்வாறு குருதி அமுக்கப் (பிரஷர்) பிரச்சினை அதிகரிக்கின்றது.

அதனால் நாட்பட்ட நோய்கள் உள்ளவர்கள் அல்லது அடுத்தவர்களின் கவனிப்புத் தேவைப்படுபவர்கள் தொடர்பில் அவர்களுடன் இருக்கும் பிள்ளைகள் அல்லது பராமரிப்பாளர்களே அதிக அக்கறை எடுத்து அவர்களை உரிய நேரத்தில் வைத்தியசாலையில் சேர்ப்பிக்கவேண்டும். இதன் மூலம் பல உயிரிழப்புக்களை இந்தக் காலப் பகுதியில் தடுக்க முடியும்.

40 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருமே கிரமமாகத் தமது குருதி அமுக்கத்தைப் பரிசோதித்துக்கொள்வது நல்லது. யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரி கொரோனா சிகிச்சை நிலையத்தில் பராமரிக்கப்படுபவர்களில் 6 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு குருதி அழுத்த நோய் இருப்பதைக் கண்டறிந்து சிகிச்சை வழங்கியிருக்கின்றோம். கொரோனா தொற்று ஏற்பட்டதன் காரணமாக அவர்களிடமிருந்த முக்கியமான நோய்க்கு சிகிச்சை கிடைத்திருக்கிறது, அதன் மூலம் அவர்களது உயிர்கள் கொரோனா மூலம் காப்பாற்றப் பட்டிருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

இதை எதற்குச் சொல்கின்றேன் என்றால் இந்தக் கொரோனாக் காலத்தில் வைத்தியசாலையை நாடுவதற்குப் பயப்பட்டுக் கொண்டு வீட்டிலேயே இருந்து விடாமல் தேவையேற்படும்போது வைத்தியசாலைகளை நாடுவது அவசியம். வயதானவர்கள், குழந்தைகள் இருக்கும் வீடுகளில் இருக்கும் ஆரோக்கியமான மற்றவர்களே இது விடயத்தில் அதிகம் அக்கறை எடுக்க வேண்டும். ■

மருதனார்மடம் கொத்தணி நடந்தது என்ன..?

• குமரன்

மருதனார்மடம் கொரோனாக் கொத்தணி சதத்தை நோக்கி வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. வெள்ளிக்கிழமை வரைக்கும் 77 பேருக்குத் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

வடக்கில் மருதனார்மடம் ஒரு கொத்தணி என்பதைக் கண்டுபிடித்திருக்கின்றோம், அது சமூகத் தொற்றா இல்லையா என்பதை இனிவரும் நாள்களை வைத்துத்தான் சொல்லமுடியும் என்கிறார் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி.

இந்தக் கொத்தணி ஏற்பட்டதற்கு சம்பந்தப்பட்ட அரச நிர்வாகங்களின் அசண்டையீனம் காரணம் என்கிற குற்றச்சாட்டுக்கள் பலமாக எழுந்துள்ளன. குறிப்பாக மருதனார்மடம் ஒரு கொத்தணியாக உருவெடுப்பதற்கு வலி. தெற்கு பிரதேச சபையின் மீது அதிகமான குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மருதனார்மடம் சந்தையில் கொரோனாச் சுகாதார நடைமுறைகள் சரிவரப் பின்பற்றப்படவில்லை என்று அந்தப் பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதற்குப் பின்னர்கூட, அந்த நடைமுறைகளைச் சரிவர முன்னெடுப்பதற்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

சந்தையில் வியாபாரம் செய்பவர்கள் தம்புள்ளைக்கும், கொழும்பு கொட்டாஞ்சேனைக்கும் சென்று வருபவர்களாக இருந்தபோதும் அவர்களையாவது தனித்துக் கண்காணிப்பதற்கும் சுகாதார நடைமுறைகளுக்கு உட்படுத்துவதற்கும்கூட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்று சுட்டிக்காட்டுகிறார்கள் சுகாதார அதிகாரிகள்.

சந்தையில் வியாபாரம் செய்பவர்களிற்கு பி.சி.ஆர். பரிசோதனைகளைச் செய்வதற்காக அவர்களின் பெயர் விவரங்களைத் தருமாறு பிரதேச சபையிடம் சுகாதாரத்துறை அதிகாரிகள் கேட்டு மூன்று வாரங்களாகியும் கூட அந்த விவரங்கள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று செம்மண் அறிந்தது.

அதன் பின்னரே சந்தையைச் சுற்றியுள்ள பகுதிகளில் எழுமாறான பி.சி.ஆர். சோதனையை நடத்தும் யோசனைக்குச் சுகாதார அதிகாரிகள் வந்தார்கள். அப்படி நடத்தப்பட்ட சோதனையிலேயே மருதனார்மடம் கொத்தணி கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தையைச் சுற்றிய பகுதியில் நின்று சேவையை வழங்கும் முச்சக்கரவண்டிச் சாரதிகள் 48 பேருக்கு முதற்கட்டமாக பீ.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது. அவர்களில் ஒருவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இந்த முடிவு அதிர்ச்சியளிப்பதாக இருந்தது.

அதற்குக் காரணம் வலிகாமம் பகுதியினைச் சார்ந்தவர்கள் பெரும்பாலானவர்கள் ஒன்று கூடுகின்ற மற்றும் தொடர்பினைப் பேணுகின்ற ஒரு நடுவமாக (மையமாக) இருப்பது மருதனார்மடம் சந்தை. பல்வேறு பகுதிகளில் இருந்தும் விவசாயிகள் தமது மரக்கறிவகைகளை இங்கு கொண்டுவருவார்கள். அதேபோன்று வெளியிடங்களில் இருந்தும் இங்கு மரக்கறிகள் வந்திறங்கும். இங்கிருந்தும் ஏற்றிச்செல்லப்படும். மரக்கறிக் கொள்வனவுக்கென ஒவ்வொரு நாளும் பல நூற்றுக்கணக்கானவர்கள் சந்தைக்கு வந்து செல்வார்கள். அவர்கள் வலிகாமத்தின் பல பகுதிகளில் இருந்தும் வருவார்கள்.

அதிகாலை 5 மணியில் இருந்து சிறிது சிறிதாக சனக்கூட்டம் கூட ஆரம்பித்து மதியம் 12 மணி வரை கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்கும். அவ்வாறு அதிகப் புழக்கம் இருக்கின்ற சந்தையில் 188ஆம் இலக்கக் கடைப் பகுதியில் வியாபாரம் செய்துவந்த ஒருவருக்குதான் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர் சந்தை தவிர்ந்த நேரங்களில் முச்சக்கரவண்டிச் சேவையை வழங்கும் சாரதியாகவும் பகுதி நேரப் பணியாற்றி வருகின்றார்.

அவருக்கு எப்படித் தொற்று ஏற்பட்டது என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. அது கண்டறியப்படுவதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதே என்கிறார்கள் அதிகாரிகள்.

மருதனார் மடம் சந்தையுடன் தொடர்பிலிருக்கும் 15க்கும் மேற்பட்ட வர்த்தகர்கள், வியாபாரிகள் நேரடியாக மத்திய மாகாணத்தின் மிகப் பெரும் பொருளாதார மத்திய நிலையமாக இருக்கின்ற தம்புள்ள வர்த்தக சந்தையுடன் தொடர்பில் இருப்பவர்கள், அதுமட்டுமன்றி தென்னிலங்கைச் சந்தைகள், இறக்குமதி வர்தக மையங்கள் போன்றவற்றுடனும் தொடர்பில் இருப்பவர்கள். ஆகையால் வெளியிலிருந்து சந்தைக்குத் தொற்று வந்திருக்கக்கூடும் என்பது முதன்மை

(23ஆம் பக்கம் பார்க்க)

தொற்றுக்குள்ளானோர் தீண்டத்தகாதவர்களா...?

● கமலநாதன்

தனிமைப்படுத்தப்படுவோருக்கு மன உளைச்சலைக் கொடுக்காதபடி அயலவர்களும் உறவுக்காரரும் நடந்துகொள்வது மிக மிக அவசியம்.

காரைநகர் வாசி ஒருவருக்குத் தொற்று உறுதியானமை, மருதனார்மடக் கொத்தணிப் பரவல் ஆகியன காரணமாக யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று அதிகளவில் பரவியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பல இடங்களில் அண்மையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் செய்யப்பட்டன. இதில் நூறுவரையானவர்கள் தொற்றுள்ளவர்களாக இனம்காணப்பட்டனர்.

பரிசோதனை செய்யப்படாத பலரும், தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள், தொடர்பைப் பேணியவர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் எனப் பலரும் சந்தேகத்தின் அடிப்படையில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்குக் கட்டம் கட்டமாக உட்படுத்தப்பட்டு வருகின்றனர். அதில் பலர் தொற்று அற்றவர்களாக அடையாளம் காணப்பட சிலருக்குத் தொற்று இருப்பது உறுதியாகிறது. தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்ற இவ்வாறானவர்களை அவர்களது வீட்டுச் சூழலில் வாழ்பவர்கள் தீண்டத்தகாத உறவுடன் நோக்குவதை அவதானிக்க முடிகிறது.

விழிப்புடன் இருப்பது அவசியம்

கொவிட் - 19 வைரஸ் தொற்று ஏற்படுவதற்குப் தனிப்பட்ட எந்தக் காரணங்களும் தேவையில்லை. சந்தையில் விளைபொருள்களை விற்க அல்லது வாங்கச் சென்றாலே தொற்றும் என்ற மிகச் சாதாரண உதாரணத்தைக் காணமுடிந்திருக்கிறது. இதன்மூலம் ஒரு முக்கிய படிப்பினை அனைவருக்கும் கிடைத்திருக்கிறது. அதாவது கட்டுப்பாட்டுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ளாவிட்டால் இந்த வைரஸ் நோய் அனைவருக்கும் தொற்ற வாய்ப்புள்ளது என்பதாகும்.

பொதுமக்கள் எப்பொழுதும் விழிப்பாக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்குக் கொவிட் 19 விடயத்தில் மக்களுக்கு அறிவுறுத்திய ஒரு மருத்துவர் இவ்வாறு கூறினார், "எப்போதும் உங்கள் முன்னால் நிற்பவர் கொவிட் 19 தொற்றுக்குள்ளாகிய ஒருவர் என்ற நினைப்புடன் அவரை எதிர்கொண்டால் அவரிடமிருந்து நோய் எமக்குத் தொற்றுவதற்கு வாய்ப்புள்ளது என்ற அளவில் அவரை விட்டுத் தூரத்தில் அது எம்மை விலகி நிற்க வைக்கும்" என்றார்.

"ஒரு திடகாத்திரமானவருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டால் 40 நாள்களின் பின்னரே அது தெரியவரும் வாய்ப்பு இருப்பதால் அந்தக் காலப்பகுதிக்குள் அவரால் பலருக்கும் கிருமியைப் பரப்பிவிட வாய்ப்புண்டு" என்கிறார் மற்றோர் மருத்துவர்.

தொற்று ஏற்பட்டவர் - ஏற்படாதவர் என்ற பாரபட்சமற்று அனைவரும் இந்த நோய் குறித்து விழிப்புடன் இருப்பது அவசியம். தொற்று இல்லை என்று உலாவுகின்ற பலரிடமும் கூடத் தொற்று இருக்கலாம். எனவே தனிமைப்படுத்தப்பட்டவர்களை மட்டுமே விலக்கி வைத்து அவர்களைத் தீண்டத்தகாதவர்களாகப் பார்க்காமல் அனைத்து மனிதர்களிடமும் இருந்து இயல்பாகவே விலகி விழிப்பாக இருப்பதே நல்லது.

பெற்ற படிப்பினை...

ஒரு பிரதேசத்தில் கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது என்பதைப் பி.சி.ஆர். பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்த முடியாத நிலையில் தொற்றுக்குள்ளான சூழலில் அவர் புழங்கியிருந்தால் அவரை மேலும் 14 நாள்களுக்கு வீட்டில் தனிமைப்படுத்தி வைத்து அதன் பின்னர் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டு அவருக்குத் தொற்று இருப்பின் தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி அவர்களைச் சுகப்படுத்துகின்றனர்.

வீட்டில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும்போது பொதுச் சுகாதார அதிகாரிகளால் "இவ்வீடு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது" என்ற அறிவிப்பு வீட்டு வெளி வாயிலில் ஒட்டி வைக்கப்படுகிறது. தனிமைப்படுத்தப்பட்டவர்களை வீட்டுக்கு வெளியே வரக்கூடாது எனவும் வெளியிலிருந்து எவரும் குறிப்பிட்ட வீட்டுக்குள் செல்லக்கூடாது என்றும் அறிவுறுத்துவதே இதன் முதன்மைப் பணி.

இவ்வாறு சுகாதாரப் பிரிவினர் எதிர்பார்க்கும் வகையில் இருசாராரும் செயற்பட்டால் தொற்று மேலும் பரவாமல் தடுக்க முடியும். கடந்த காலங்களில் சின்னமுத்து, பெரியம்மை போன்ற நோய்கள் ஏற்படும்போது வீட்டு வாசலில் வேப்பிலைகளைக் கட்டிவிட்டாலே பலரும் அதைப் புரிந்து கொள்வார்கள்.

அதே போன்றதொரு புரிதலைத் தற்போது சுகாதாரப் பிரிவினரால் ஒட்டப்படுகின்ற அறிவித்தல்களுக்கும் மக்கள் கொடுக்க வேண்டும். அதேநேரம் தனிமைப்படுத்தப்பட்டிருப்பவர்களுக்குரிய தேவைகளை நிவர்த்தி செய்கின்ற பொறுப்பும் உரிய தரப்பினருக்குரியது.

நன்றி தெரிவிப்பது மண்பு

இந்த நோய் உடனடியாகக் குணப்படக்கூடிய நோய் அல்ல என்பதைக் கடந்த ஒரு வருடமாக உலகம் முழுதும் அது பரவி அதிகரித்து வருவதன்மூலம் காணமுடிகிறது. இதனால் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் அல்லது தொற்றுக்குள்ளானவர்கள் போல எதிர்வரும் நாள்களில் நாமும் பாதிக்கப்பட வாய்ப்புண்டு என்பதை அனைவரும் புரிந்து கொள்வது அவசியம்.

தனிமைப்படுத்தப்படுவோருக்கு மன உளைச்சலைக் கொடுக்காதபடி அயலவர்களும் உறவுக்காரரும் நடந்துகொள்வது மிக மிக அவசியம் ஆகும். ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் இருக்கும் சிறுவர்களுக்கும் தேவையான உணவுகளையும் உணவுப் பொருள்களையும் தூரத்தில் இருந்து வழங்குவது, தொலைபேசி மூலமாக உரையாடுவது போன்ற முயற்சிகளால் அவர்களுக்கு நம்பிக்கையூட்ட முடியும். இந்தப் பரஸ்பர உதவி செய்யும் மனப்பாங்கு கட்டி வளர்க்கப்படுவதன் மூலமே பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையை ஊட்ட முடிவதுடன் இனிவரும் நாள்களில் பாதிக்கப்படவிருக்கும் எம்மையும் காப்பாற்ற முடியும்.

தற்போது தனிமைப்படுத்தலில் இருப்போரும் தொற்றாகிச் சிகிச்சை பெற்று வருவோரும் ஒருவகையில் தமக்குண்டான தொற்று ஏனையவர்களுக்குப் பரவாது தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை மனதில் கொள்ளவேண்டுமே தவிர பாதிக்கப்பட்டவர்களைத் தீண்டாமை மனப்பாங்குடன் பார்ப்பதை மாற்றிக் கொள்வதே மனிதப் பண்பாகும்.

'பாணி' வகையிலான உள்நாட்டுத் தீர்வு!

● ஸ்டோ ஸ்வாமி

> ஆதாரமற்ற கேகாலைப் பாணியை முறையற்ற ரீதியில் புகழ்வது போன்றே, இலங்கையின் இனங்களிற் கிடையிலான பிணக்கிற்கான தீர்விற்கும் அரசு உள்நாட்டில் தயாரித்து அளிக்கப்படக்கூடிய தீர்வினை பற்றியே தொடர்ந்து பேசுகிறது

தம்மிக்க பண்டார என்னும் கேகாலை மாவட்டத்தின் ஹெட்டிமுல்ல பிரதேசத்தினைச் சேர்ந்த மனிதர் தற்போது பிரபலமானவராகிவிட்டார். அவர் தயாரித்து வழங்கியிருக்கும் பானம் அல்லது பாணி கொரோனாவை விரட்டவல்லது என்ற செய்தி அலை தெற்கில் கொரோனாவைவிட வேகமாக அடித்திருக்கிறது. அடித்த அலை வெறுமனே கிராம மட்டத்தில் அடித்திருக்கவில்லை. மாறாக மாவட்டங்கள், மாகாணங்கள் கடந்து இப்போது சபாநாயகர் மருந்தினை ருசி பார்க்கும் அளவிற்கு விவகாரம் சென்றுவிட்டது.

மேலைத்தேய கலாசாரங்களுக்கு, மேலைத்தேய அறிவுறுத்தல்களுக்கு மேலைத்தேய கண்டுபிடிப்புகளுக்கு இணையான அல்லது மறுத்தான் விடும் வகையில் நம்மாலும் தயாரிக்க முடியும் என்ற ஒரு போக்கினை காண்பிப்பது போன்ற தோற்றப்பாடு இந்த விவகாரத்தில் வெளித்தெரியவே செய்கிறது.

அதனை விடவும், கொவிட்-19 தொற்றினை குணப்படுத்தும் தகவுடையதென அறிமுகப்படுத்தப்படும் இந்தத் தயாரிப்பினை அறிவியல் ரீதியாக நிறுவுவதிலும் பார்க்க அதனை ஒரு அதிசய மருந்தென காண்பித்து அங்கீகாரத்தினை பெற்றுவிடவும் துடியாய் துடிப்பது தெரிகிறது.

மேலைத்தேய வைத்தியமுறைகளுக்கு அமைவான கொவிட்-19 எதிர்ப்பு மருந்துகள் கண்டறியப்பட காலம் எடுத்தது என்னவோ உண்மைதான். எடுத்தோம் கவிழ்த்தோம்; என்கிற ரீதியில் அல்லாமல் ஆதாரபூர்வமானவையாகவும் திரும்பத்திரும்ப பரீட்சிக்கும்போது மாறாத பெரிதாக வித்தியாசப்படாத முடிவுகளைத் தரும் மருந்துகளே பல தடை தாண்டல்களைத் தாண்டிச் சந்தைக்கு வருவது மருத்துவத்தில் வழமை.

இலங்கையில் தம்மிக்க பண்டாரவின் பாணி தோன்றி சர்ச்சையைக் கிளப்புவதற்கு முன் சுதர்சன என்னும் ஆயுள்வேத பின்னணியை கொண்ட பதார்த்தம் நர்த்தனமாடியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஆதரவும் தவிரிப்பும்

கொவிட் - 19 தொற்றினை குணப்படுத்தக்கூடியதென பரப்புரை செய்யப்படும் இந்தப் பாணி மருந்து பாரம்பரிய நடைமுறைகளை நம்புவோரிடத்தில் ஆதரவைப் பெற்றுள்ளது என்றால் அது மிகையல்ல.

முன்னதாக மந்திரித்த நீர் அடங்கிய மட்கலத்தினை ஆற்றினுள் விட்டெறிந்த சுகாதார அமைச்சர், இந்தப் பாணியையும் பகிரங்கமாக ருசி பார்த்திருக்கிறார். கைத்தொழில் விவகார அமைச்சர் விமல் வீரவன்ஸவோ, மருந்து தயாரித்தவரைப் பற்றி கவனியாமல் - அவருடைய கல்வித்தகைமையை பற்றி - கவலைப்படாமல் - மருந்தை மட்டுமே கவனிக்கும்படி அறிவுறுத்தியிருக்கிறார்.

கொவிட்-19 இனை குணப்படுத்தும் என நாடாளுமன்றிற்கு கொண்டுவரப்பட்ட தம்மிக்க பண்டாரவின் பாணிப் போத்தல்கள் தமக்கு தரப்படவில்லை என குறைப்பட்டிருக்கிறார் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான முஜிபுர் ரகுமான். ஆளுந்தரப்பு உறுப்பினர்களை மாத்திரம் பெருந்தொற்றிலிருந்து காக்க இந்தப் பாணி நினைக்கிறதா என்னும் சாரப்பட அவர் கேள்வியெழுப்பியிருக்கிறார்.

கிளம்பும் எதிர்ப்பு

கேகாலைப் பாணிக்கு கொடுக்கப்படும் மிதமிஞ்சிய புகழை அடுத்து அறிவியல் மற்றும் மருத்துவ தரப்புக்கள் தமது ஆட்சேபனைகளை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளன. ஆயுள்வேத ஆணையாளர், குறித்த தயாரிப்பு ஆயுள்வேத திணைக்களத்தில் மருந்தாகவோ உணவுப்பொருளாகவோ பதிவு செய்யப்படவில்லை என்கிறார்.

சாதிக்காய் மற்றும் தேன் என்பவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டதென சொல்லப்படும் இந்தப் பாணி, கம்பஹா மாவட்டத்தின் வத்துப்பிட்டிவல மருத்துவமனையில் நோயாளிகளிடம் பரீட்சிக்கப்பட்டதாக அமைச்சர் சிசிர ஜயக்கொடி முன்னர் அறிவித்திருந்தார். ஆனால், வத்துப்பிட்டிவல மருத்துவமனை பணிப்பாளரோ தாம் அறிந்த அளவில் அப்படிப்பட்ட பரீட்சிப்பு முயற்சிக்கும் தமக்கும் எந்தவித தொடர்புமில்லை என அறிவித்திருக்கிறார்.

பிந்திய தகவல் ஒன்றின்படி, அந்த மருத்துவமனையை சேர்ந்த சில மருத்துவப் பணியாளருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதன் காரணமாக பத்தாம் இலக்க வார்ட் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக அறியக்கிடைக்கிறது.

கவனக்கலைப்பே!

இலங்கையை பொறுத்தமட்டில் மேலைத்தேய மருத்துவமுறைகளுக்கு முதன்மை இடம் வழங்கப்படும் அதேவேளை, உள்நாட்டு மருத்துவ முறைகள் மீதும் கணிசமான கவனம் செலுத்தப்பட்டே வருகின்றது. குறிப்பாக இயற்கை யோடு ஒன்றியதான மருத்துவமுறைகளுக்கு உலகளாவிய ரீதியில் மக்களிடம் உள்ள மதிப்பு காரணமாக, அதனை அடிப்படையாக வைத்து மருத்துவ சுற்றுலா என்னும் பெயரில் வெளிநாட்டு சுற்றுலாவிகளை கவரும் திட்டமும் கைவசம் உண்டு.

ஆனால், கொரோனாவின் தாக்கம் மூர்க்கமானதாக உள்ள நிலையில், வலுவான ஆதாரத்தினை கொண்டிராத பாணிக்கு ஊடகங்களில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை கவனக்கலைப் பான் முயற்சியாகவே கருத வேண்டியுள்ளது.

மருத்துவ மற்றும் அறிவியல் தரப்பினரின் கருத்துக்களையோ கல்வித்தகைமைகளையோ கருத்தில் கொள்ளாமல் தன்னை ஒரு ஆயுள்வேத மருத்துவர் என கூறிக் கொள்ளும் ஒருவரை தூக்கிப் பிடிப்பது, கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக அரசு எடுக்க வேண்டிய ஆக்கபூர்வமான படிகளைப் பற்றியதான கவனத்தினை குழப்பியிருக்கிறது.

மற்றைய நாடுகள் கொரோனா தடுப்பு மருந்தினை கொள்முதல் செய்வது, பொதுமக்களுக்கு வழங்குவது பற்றிய நிகழ்ச்சி நிரலுக்கு தம்மை தயார்படுத்தும்வேளை, இலங்கையோ உலக சுகாதார நிறுவனம் பகிர்ந்தளிக்கும் எண்ணிக்கைக்காகவே காவல் இருக்க வேண்டியுள்ளது. கொரோனாவின் உள்நாட்டுப் பரவல் நாளாந்தம் 500 இனை தொடுகின்ற அதேவேளை இறப்புகளிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது.



இந்த நிலையில் கொரோனா தடுப்பு தொடர்பில் தமது பலவீனங்களை மறைப்பதற்காக பொது மக்களின் கவனத்தினை திசை திருப்பும் நடவடிக்கையாக இந்தப் பாணி விவகாரத்தினை கருத இடமிருக்கிறது.

இலங்கையை மாத்திரமின்றி பூகோளத்தினை பாதித்திருக்கும் கொரோனா

(17ஆம் பக்கம் பார்க்க)

ஜனாஸா எரிப்பு

பிடி தளருமா தொடருமா?

● அகில்

இலங்கையில் கொரோனா வைரஸ் பெருந்தொற்றுப் பரவத் தொடங்கிய காலம் முதல் வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை (உடல்களை) தணியாத நெருப்பாக எரிந்துகொண்டே இருக்கிறது. உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய 198 உலக நாடுகளிலும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் எரிக்கப்படுகின்றன அல்லது புதைக்கப்படுகின்றன.

இலங்கையில் மட்டும் இந்த முறையைப் பின்பற்ற மறுத்து இறக்கும் எல்லோரையும் எரிப்போம் என்று பிடிவாதம் பிடித்து நிற்கிறார்கள். இதில் இலங்கையின் இரு பெரும் பான்மை மதங்களுக்குப் பிரச்சினையில்லை. ஏனெனில் பௌத்தர்களும் இந்துக்களுக்கும் வழக்கமாகவே இறந்த வர்களின் உடல்களை எரிக்கும் வழக்கத்தைக் கொண்டவர்கள்.

இலங்கை ஆட்சியாளர்களின் பிடிவாதத்தால் அதிகம் மாட்டிக்கொண்டு முழிப்பவர்கள் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களுமே. அதிலும் கிறிஸ்தவர்கள் தமது சடலங்கள் எரிக்கப்படுவது குறித்து அதிகளவில் அக்கறைப் படவில்லை. அவை அடக்கம் செய்யப்படத்தான் வேண்டும் என்று அவர்கள் பிடிவாதமாக இல்லை. ஆனால், முஸ்லிம்கள் மார்க்கத்தில் அதிகம் ஈடுபாடு கொண்டிருப்பதாலும் ஒருவர் இறந்து 24 மணி நேரத்திற்குள், அவரது உடல் சூடு அடங்குவதற்குள் அவரை அடக்கம் செய்துவிடுதை கட்டாய மார்க்கக் கடமையாகக் கொண்டிருப்பதாலும் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது அவர்களுக்குப் பிரச்சினையாக, ஏற்றுக்கொள்ள முடியாததாக, மார்க்கத்துக்குப் புறம்பான பாவச் செயலாகத் தோன்றுகின்றது.

அதிலும் ஜனஸாக்களைப் புதைப்பதற்கு அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்படாத காரணங்களை முன்வைத்து ஆட்சியாளர்கள் பிடிவாதம் பிடிக்கும்போது, அந்தச் செயல் அரசியல் ரீதியான ஒடுக்குமுறையாகவும் அவர்களுக்குத் தோன்றத் தொடங்குகின்றது.

தமது மத உரிமை, மத விழுமியம், மார்க்கமாக்கப்பட்ட விடயம் எடுத்த எடுப்பிலேயே சவாலுக்குள்ளாக்கப் பட்டுள்ளமை தம்மைப் பெரும் துயரில் ஆழ்த்தியுள்ளது என்கிறார்கள் பெரும்பாலான முஸ்லிம்கள்.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்த ஒருவரின் உடலை அவரின் சமய நம்பிக்கைகள், சடங்கு முறைகளுக்கேற்ப பாதுகாப்பான முறையில் இறுதிக் கிரியைகளுக்கு (புதைப்பது அல்லது எரிப்பது) உட்படுத்தலாம் என உலக சுகாதார நிறுவனம் விதந்துரைத்துள்ளது. இதனடிப்படையில் தமது இறந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்குமாறு நாட்டு முஸ்லிம்கள் விடுத்துவரும் கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகப் போய்விட்டிருப்பது முஸ்லிம்களை மேலும் கவலைக்குள்ளாக்கியிருக்கிறது.

இதனால் அரசின் முடிவை எதிர்த்துப் போராடும் நிலைக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். நாடாளுமன்றத்தில் முஸ்லிம் பிரதிநிதிகள் இது தொடர்பில் குரல் எழுப்பிய போதும் பயன் ஏதும் கிடைக்கவில்லை. முஸ்லிம் பிரதிநிதிகள் மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்கூட நாடாளுமன்றத்தில் ஜனாஸா எரிப்புக்கு எதிராகக் குரல் கொடுத்திருந்தார். அது முஸ்லிம்களிடம் கணிசமான வரவேற்பையும் பெற்றிருந்தது. ஆனாலும் பயனில்லை.

இலங்கை அரசமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நிலைமை குறித்து வெட்கப்படவேண்டும் என்று தனது உரையில் குட்டு வைக்கவும் சாணக்கியன் தவறவில்லை. அவரைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஜனாஸா எரிப்புக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தார்.

தமிழர்களுக்குப் பிரச்சினை என்று வரும்போது வாய்மூடி மௌனிகளாக இருக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தத் தமிழ் உறுப்பினர்களின் ஆதரவுக் குரல் பெரும் அடியாக இருந்தாலும் ஆட்சியாளர்கள் காதில் இந்த எந்தக் குரல்களும் எடுபடவில்லை என்பதே உண்மை.

பேரினவாதத்தின் கோரமுகம்!

கொரோனா தொற்றினால் இறந்த தமது சொந்தங்களைப் புதைக்கும் உரிமையை முஸ்லிம் குடும்பங்களிற்கு நிராகரிக்கும் இலங்கை ஆட்சியாளர்களின் செய்கையை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் என்று தெரிவித்துள்ளது யாழ். சிவில் சமூக அமையம் என்ற அமைப்பு.

உலக சுகாதார நிறுவனத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களில் இறந்த உடல் ஒன்றை புதைப்பதால் தொற்று ஏற்படும் எனக் கருதுவது கற்பனையானது என மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க இலங்கை ஆட்சியாளர்கள் பெயர் குறிப்பிடாத ஓர் நிபுணர் குழுவின் அறிக்கையில் தங்கி நின்று புதைப்பது கொரோனா தொற்றை ஏற்படுத்தும் என முடிவெடுத்திருப்பதன் அறிவியல் அடிப்படை என்ன என்பதனை நாம் அறிய விரும்புகிறோம்.

அண்மையில் கொரோனோவால் பாதிக்கப்பட்ட 20 நாள் வயது நிரம்பிய பச்சிளம் குழந்தையின் சடலம் அதன் தனது பெற்றோரின் அனுமதியில்லாமல் எரியூட்டப்பட்டது என்ற செய்தி எமக்கு பேரினவாதத்தின் மிகக் கோரமான முகத்தை மீள ஞாபகமூட்டியது.

மேலும் இறந்த முஸ்லிம்களை மாலைத்தீவில் புதைப்பது தொடர்பில் பேச்சுகளை அந்நாட்டுடன் இலங்கை ஆட்சியாளர்கள் நடத்துகின்றனர் என்ற செய்தி இன்னும் வலியைக் கூட்டும் தன்மையதாக உள்ளது.

மிக நீண்ட காலமாக எண்ணிக்கையில் சிறிய சமூகங்கள் இந்த நாட்டில் இரண்டாம் மற்றும் மூன்றாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுகின்றனர். ஆனால் தற்போது நடப்பது அந்த வரலாற்றில் இன்னும் ஓர்படி கீழே போவதாகும்.

இந்த கொடூரத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருமாறு நாம் இலங்கை ஆட்சியாளர்களை வலியுறுத்துகிறோம். இவ்வாறாக தமது உறவுகளின் சம்மதம் இல்லாமல் உடல்களை எரியூட்டும் செயன்முறைகளோடு சம்பந்தப்பட்ட அனைவரையும் தமது மனசாட்சியின்படி செயற்பட்டு இந்த அநியாயத்தில் பங்கெடுக்காது மறுக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாம்பரான மலர்

இத்தகைய ஒரு சூழலில் முஸ்லிம்களுக்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல, கொழும்பு 15இல் முஸ்லிம் தம்பதிகளுக்குப் பிறந்த பச்சிளம் குழந்தை, பிறந்து 20 நாட்களே ஆன நிலையில் கொரோனா தொற்றுக்கு உள்ளான தால் உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்தக் குழந்தையின் சடலத்தையும் உடனேயே எரித்துவிட்டார்கள்.

தந்தைக்கோ தாய்க்கோ கொரோனா தொற்று இல்லாத நிலையில் பிறந்த குழந்தை மட்டும் எப்படி கொரோனாத் தொற்றுக்கு உள்ளானது என்கிற கேள்வி ஒரு பக்கம் குடைய, அந்தக் குழந்தையை உடனேயே எரித்துவிட்ட சம்பவம் முஸ்லிம்களின் பொறுமையைத் தடை உடைக்க வைத்திருக்கிறது. அவர்கள் தமது தார்மீக எதிர்ப்பை உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

புத்தளத்தில் முஸ்லிம்கள் தீப் பந்தம் ஏந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். வவுனியாவில் முஸ்லிம் தனிநபர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார். மௌலவியான அவர், "முள்ளிவாய்க்காலில் பச்சிளம் குழந்தைகளைக் கொன்றீர்கள், உங்களிடம் இரக்கம் இருக்குமா?" என்று கேள்வி எழுப்பும் பதாகையைத் தாங்கியபடி போராட்டத்தில் ஈடுபட்டார். "20 நாள்களேயான குழந்தையின் ஜனாஸாவை எரித்துள்ள நீங்கள் கொலை செய்தே பழக்கப்பட்டவர்கள்" என்றும் சாடினார். இதனால் கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டது.

கபன் துணி கட்டல் போராட்டம்

இதேவேளை, கனத்தை பொது மயானத்தைச் சுற்றி கபன் துணி கட்டல் போராட்டமும் தொடங்கியது. அது பின்னர் நாடு முழுவதற்கும் விரிவாக்கம் அடைந்து வருகின்றது. முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா ஆகியோர் கபன் துணி கட்டும் போராட்டத்தில் மக்களுடன் இணைந்து கொண்டனர். இருப்பினும் அன்று இரவோடு இரவாகவே அந்தக் கபன் துணிகள் அங்கிருந்து அகற்றப்பட்டு விட்டன.

முஸ்லிம் ஒருவர் இறந்துவிட்டால் அவரது உடலை ஒரு வெள்ளைத்

(17ஆம் பக்கம் பார்க்க)

உருளைக்கிழங்கு சூப்...!

மாப்பொருள் நிறைந்த கிழங்கு வகையுணவுகளில் ஒன்று உருளைக்கிழங்கு. அரிசி, கோதுமை, சோளம் ஆகியவற்றுக்கு அடுத்த படியாக உலகில் நான்காவதாக அதிகம் பயிரிடப்படும் செடியினம் என்கிற பெருமை இதற்குரியது. பெரு நாட்டில் பிறந்த உருளைக்கிழங்கு ஐரோப்பா வழியாக ஆசியாவுக்கு அறிமுகமானது தனிக்கதை. இத்தனை சிறப்புகள் வாய்ந்த உருளைக்கிழங்கில் கறி சமைத்துண்பதே நம்மவர்களிடையே அதிக பிரசித்தம். என்றாலும் சிப்ஸ் எனப்படுகின்ற பொரியல் வகைக்கும் பிரசித்தமானது இது. அதைவிட வறுவல், போண்டா எனப் பலவிதமான உண்டிகளையும் உருளைக்கிழங்கில் செய்து சுவைக்கிறார்கள். இப்படி யிருக்க, உருளைக்கிழங்கில் சூப் செய்வது எப்படி என்று இந்தமுறை பார்க்கலாம்.

என்னென்ன பொருள்கள் தேவை...?

உருளைக்கிழங்கு - அரைக் கிலோ, பெரிய வெங்காயம் - 2, தேங்காய்ப் பால் - 1 டம்ளர் கொத்தமல்லி இலை - சிறிதளவு, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 2 மேசைக் கரண்டி எடுத்துக்கொள்ளுங்கள். கோதுமை மா - 2 மேசைக்கரண்டி, மிளகு தூள் - 1 தேக்கரண்டி என்ப வற்றை எடுத்து அதில் தேங்காய்ப் பால் - 4 மேசைக்கரண்டி சேர்த்து நன்றாக அரைத்து எடுத்துக்கொள்ளுங்கள்.

எப்படிச் செய்வது...?

உருளைக்கிழங்கு, வெங்காயம், கொத்தமல்லி இலை ஆகியவற்றைத் துண்டுகளாக நறுக்கிக்கொள்ளுங்கள். ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து அதில் நறுக்கிய உருளைக்கிழங்கைப் போட்டுச் சிறிதளவு நீர் ஊற்றி வேகவையுங்கள். பிறகு சிறிய பானை ஒன்றை அடுப்பில் வைத்து அதில் எண்ணெய் ஊற்றி வெங்காயம் மற்றும் உப்பு ஆகியன சேர்த்து வதக்குங்கள். வதக்கியதும் வேகவைத்த உருளைக் கிழங்கை எடுத்து இதில் சேர்த்து வதக்கிக் கொள்ளுங்கள். அரைத்து வைத்திருந்த கோதுமை மா, தேங்காய்ப் பால், மிளகு தூள் சேர்வையை எடுத்து அடுப்பில் உள்ள உருளைக்கிழங்குக் கலவையுடன் சேருங்கள்.



பிறகு தேவையான அளவுக்குத் தண்ணீர் சேர்த்து நன்கு கொதிக்க விடுங்கள். சுவையைச் சரி பார்த்து உப்பு, உறைப்பு ஆகியனவற்றைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இறுதியாக் கொத்த மல்லி இலையைத் தூவி இறக்குங்கள். அவ்வளவுதான் சுவையான உருளைக்கிழங்கு சூப் தயார். சுவைத்துப் பாருங்கள் ருசி அற்புதமாக விருக்கும்...!

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

கமல், ரஜினியை அடுத்து பார்த்திபன்



மக்கள் நீதி மய்யம் என்பது நடிகர் கமல்ஹாசனின் அரசியல் கட்சி. அவரைத் தொடர்ந்து அண்மையில் நடிகர் ரஜினிகாந்தும் தனது அரசியல் பிரவேசத்தை அறிவித்திருந்தார். அவரது கட்சியின் பெயர் மற்றும் சின்னம் குறித்த குழப்பங்கள் நீடித்து வருகின்றன. இந்த நிலையில் இவர்கள் இருவரையும் தொடர்ந்து நடிகர் பார்த்திபனும் கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளார். அவர் அரசியலுக்கு வரும் முன்பே தனது கட்சிக்கு பெயர் சூட்டியதுதான் இதிலுள்ள சிறப்பு. அண்மையில் நடந்த திரைப்பட விழா ஒன்றில் 2019ஆம் ஆண்டுக்கான சிறந்த படமாக அவர் இயக்கிய 'ஒத்த செருப்பு அளவு 7' படம் தெரிவுசெய்யப்பட்டு அவருக்கு விருது வழங்கப்பட்டது. அதன் போது அரங்கில் பேசிய பார்த்திபன், "சினிமாவை விட்டு அரசியலுக்குச் சென்றாலும் எம்.ஜி.ஆர், கருணாநிதி ஆகியோருக்கு கலையின் மேல் அதிக ஈடுபாடு இருந்தது. அவர்களுக்கு சினிமா மீது ஆர்வம் இருந்தது மிகப் பெரிய விடயம். அதிலிருந்து அரசியலுக்கு வந்து நல்லது செய்தவர்கள் நிறையப் பேர் உண்டு. இவர்களெல்லாம் அரசியலுக்கு வந்து விடுவார்களோ என்று பயப்படவும் வைக்கிறார்கள். புதிய கட்சி தொடங்கலாமா என்று நானும் பலமாக யோசனை செய்து கொண்டிருக்கிறேன். இப்படிச் சொல்லி வைத்தால், சினிமாவில் ஒரு பரபரப்பு ஆகிக்கொண்டே இருக்கலாம். விஜய் கூட வரப் போகிறார் என்று பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம். அதனால் நாமும் ஒரு கட்சி ஆரம்பிக்கலாமே என்றும் சிந்திக்கிறேன். நான் தொடங்கும் கட்சிக்குப் பெயரெல்லாம் வைத்துவிட்டேன். கட்சியின் பெயர் 'புதிய பாதை'. இதுவரை எந்த மேடையிலும் இதைச் சொல்லவில்லை. எப்போது ஆரம்பிக்கப் போகிறேன் என்று தெரியாது. ஆனால் கட்சியின் பெயர் மட்டும் புதிய பாதை என்று வைத்துவிட்டேன் - என்றார்.

ரகுவரன் - கச்சாய்

முனி வசிக்கும் ஆலமரம்

அப்போதெல்லாம் பாடசாலைக்குப் பொடி நடையாகப் போய்வருவதுதான் வழமை. பஸ் கிடையாது, யாராவது ஒன்றிரண்டுபேரிடம்தான் சைக்கிள்கள் இருந்தன. அதனால் பாடசாலைக்குப் போகும்போதும் வரும்போதும் நாம் கூட்டம் கூட்டமாக ஒன்று சேர்ந்து நடந்துபோய் நடந்தே வீடுவந்து சேர்வோம்.

கிட்டத்தட்ட 3,4 கிலோ மீற்றர்கள் தூரத்தில் இருந்தது பாடசாலை. இதனால் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகின்ற பாடசாலைக்குச் செல்வதாயின் காலை 6.30க்கே நடக்கத் தொடங்கிவிடவேண்டும். ஆளும்பேருமாகக் கதைத்துச் சிரித்து ஆடிப் பாடிப் பாடசாலையைப் போய்ச்சேர நேரம் சரியாக இருக்கும்.

பாடசாலை முடிந்து வீடு திரும்பும்போதும் இதுதான் நிலமை. ஆடிப்பாடி வீடு வந்து சேர ஒரு மணிநேரத்துக்கு மேலாகிவிடும்.

நாம் பாடசாலைக்குப்போகும் வீதியோரத்தில் பல கோவில்கள் இருக்கின்றன. பிள்ளையார் கோவில், அம்மன்கோவில், முனியப்பர் கோவில் என்று... நாம் பாடசாலைக்குப் போகும்போது பிள்ளையார் கோவிலின் முகப்பில் முதியவர் ஒருவர் அமர்ந்திருப்பார். நாள் தவறாது அவரைக் காண்போம். அவருடனும் கதையளப்போம். சற்று நேரம்வரை எங்களுடன் கதைத்துவிட்டு "பள்ளிக்கு நேரம்போட்டுது நடவுங்கோ... நடவுங்கோ..." என்று சிறிய ஏச்சுடன் எங்களுக்கு அறிவுரையும் கூறி வழியனுப்பி வைப்பார் அந்த முதியவர்.

பாடசாலைக்கும் வீட்டுக்கும் இடைநடுவில் சந்திக்கக் கிடைக்கின்ற அவரிடம் நேரத்தைக் கேட்டறிந்து அதற்கேற்றால்போல் வேகமெடுத்து நடப்பதும் வழமை. "இண்டைக்கு அதிபரிட்டை அடி வாங்குவியள்...." என்று அந்த முதியவர் சொல்வராகவிருந்தால் அன்று எங்களுக்கு அடி நிச்சயமானதாக இருக்கும். அதனால் அவரது சொல்லுக்குச் சக்தியுண்டு என்பது எங்களின் நம்பிக்கையாக இருந்தது. எமது நம்பிக்கையைப் பெற்றவராக இருந்தார் அவர்.

கதை 16

பிள்ளையார் கோவிலை அடுத்துச் சற்றுத்தொலைவாக இருப்பது முனியப்பர் கோவில். பெரு விழுதுகள் படர்ந்த பிரமாண்டமான ஆலமரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சிறிய கோவில் அது.

பாடசாலை முடிந்து வீடு திரும்பும்போது எமக்கெல்லாம் பசி ஏற்பட்டுவிடுவதால் வழியில் கிடைக்கின்றவற்றைக் கொண்டு வயிற்றை நிரப்புவதும் பழக்கமாக இருந்தது. வழியில் கிடைப்பதென்பதற்குள்... மாங்காய், தேங்காய், பனங்காய், நாவற்பழம், நறுவிளிப்பழம், ஆலங்காய் எனப் பலவும் அடங்கும். இதனால் வீடு திரும்பும் நேரம் மேலும் தாமதப்பட்டதாக இருக்கும். இவ்வாறு நாம் ஆடிப்பாடித் தாமதமாக வீடு செல்வதைக் கவனித்தாரோ என்னவோ "மத்தியானத்தில மரங்களுக்குக் கீழ் நிற்கக் கூடாது பிள்ளையளே பேய் அடிச்சுப்போடும், நேரத்துக்கு வீட்டுக்குப் போங்கோ" என்று கடியத் தொடங்கினார் அந்த முதியவர். ஆனால் நாங்கள் அவரின் பேச்சைக் கேட்டால்தானே...!

ஒருதடவை... முனியப்பர் கோவில் ஆலமரம் காய்த்திருந்தது. சிவந்திருக்கின்ற ஆலங்காய்களைப் பிடுங்கி அதனுள் இருக்கின்ற கரிய துகள்களை விரல்களால் தோண்டி நீக்கிவிட்டு அவற்றை உண்டு வயிறு நிரப்பினோம். நாம் அந்த இடத்தில் பல மணி நேரத்தைச் செலவிடுவதைக் கவனித்தாரோ என்னவோ... மறுநாள் நாம் அவரைச் சந்தித்தபோது, "முனியப்பர் கோவில் மரத்தில முனி நிக்குது பிள்ளையளே... முனியடிச்சுப்போகுடும் கவனம். முனிக்குப் பெரிய வால் இருக்கு. அது அடிச்சால் அவ்வளவுதான். அதாலை போற வாற ஆக்கள் முனியைக் கண்டவையாம். அவைக்கு எல்லாம் காய்ச்சல் வந்து கிடக்கினம்" என்று எச்சரித்து அனுப்பினார். ஆனாலும் நாங்கள் அவரது சொல் கேளாமல் அன்றும் அந்த ஆலமரத்தில் ஆலங்காய் பிடுங்கி உண்டோம். இருப்பினும் எனது உள் மனதில் அவர் சொன்னது உறுத்திக் கொண்டே இருந்தது. அதனால் ஏனைய நண்பர்களைவிடவும் அந்த ஆலமரத்துக்கு அண்மையாகப் போவதைத் தவிர்த்திருந்தேன் நான்.

மறுநாள் பாடசாலைக்கு நான் சென்றிருக்கவில்லை. அந்த ஆலமரத்தில் ஆலங்காய் பிடுங்குவதற்கு ஏறிய சக நண்பன் தீபனுக்கு முனியடித்து விட்டது என்றும் அதனால் மரத்திலிருந்து விழுந்த அவனுக்குக் கை முறிந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறான் என்றும் ஏனைய நண்பர்கள் பதற்றத்துடன் கூறினார்கள். இதனால் அந்த முனியப்பர் கோவிலும் ஆலமரமும் எங்கள் அனைவருக்கும் பீதியை ஏற்படுத்தும் இடமாக மாறியது. "நான் சொன்னதைக் கேட்காமல்போய் முனியிட்ட நன்றாக வாங்கினீர்களா...? என்று மறுநாள் அந்த முதியவரும் கேலி செய்தார். முதியவர் முனி அடிக்கும் என்று கூறியதும் அதன் பிற்பாடு தீபன் மரத்திலிருந்து விழுந்து கையை முறித்துக்கொண்டதும் தொடராக நிகழ்ந்ததால் இன்றும் அந்த ஆலமரத்தைக் காணும்போது "முனி" என்கிற பயம் தொற்றிவிடுகிறது. ■

மாதிரிகளுடன் திரும்பியது சீனக் கலம்!

சீனா நிலவில் கொடி நட்ட கதை உங்களுக்குத் தெரியும். அந்தக் கொடியை நட்ட சீனாவின் செய்மதி நிலவில் இருந்து பாறைகளின் மாதிரிகளைச் சேகரித்துக்கொண்டு அந்த நாட்டுக்கே திரும்பிவிட்டது.

சீன நேரம் வியாழக்கிழமை அதிகாலை 2 மணிக்கு அந்த செய்மதிக் கலமான ஷங்கி-5 நிலவில் சேகரித்த மாதிரிகளுடன் வெற்றிகரமாகத் தரையிறங்கியது என்று சீன அரச ஊடகம் தெரிவித்தது. இதன் மூலம் நிலவிலிருந்து மாதிரிகளைச் சேகரித்து பூமிக்குக் கொண்டு வந்த மூன்றாவது நாடு உலக நாடு என்கிற பெருமையைத் தனதாக்கியுள்ளது சீனா.

1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிலவில் இருந்து பூமிக்கு மாதிரிகள் கொண்டு வரப்படுவது இதுவே முதல் தடவை. இந்த மாதிரிகளைக் கொண்டு வந்த விண்கலம், வடக்குச் சீனாவிலுள்ள மொங்கோலியத் தன்னாட்சிப் பகுதியில் இருக்கும் சிசிவாங் என்கிற இடத்தில் தரையைத் தொட்டதாக சீனாவின் தேசிய விண்வெளி நிர்வாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

நிலவின் கடவுளாகச் சீனப் பாரம்பரியத்தில் குறிக்கப்படும் பெயரால் அழைக்கப்படும் இந்த நிலவுப் பயணம் கார்த்திகை 24ஆம் நாள் தொடங்கியது. கைனன் என்ற இடத்தில் இருக்கும் விண் ஏவுகணைத் தளத்தில் இருந்து நிலவுக்கான விண்கலம் ஏவப்பட்டது.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டியதன் மூலம் நிலவில் மாதிரிகளைச் சேகரித்த அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றிய நாடுகளின் பட்டியலில் சீனாவும் சேர்ந்துகொண்டுள்ளது.

அமெரிக்கா அப்போலோ திட்டத்தின் மூலம் நிலவில் காலடி வைத்தது முதல் 1969 தொடக்கம் 1972ஆம் ஆண்டுக்கிடையில் 6 பறப்புக்களில் 12 விண்வெளி ஆராய்ச்சியாளர்களை நிலவில் இறக்கி 382 கிலோ பாறைக் கற்கள் மற்றும் மண்ணைப் பூமிக்குக் கொண்டு வந்தது.

சோவியத் ஒன்றியம் 1970களில் மூன்று வெற்றிகரமான தரையிறக்கம்மூலம் நிலவின் மாதிரிகளைக் கொண்டுவந்தது. இந்த மூன்று தரையிறக்கங்களிலும் மனிதர்கள் எவரும் பயன்படுத்தப்படவில்லை. தன்னியக்க இயந்திர உதவியுடன் அவை சேகரிக்கப்பட்டன. 1976ஆம் ஆண்டு கடைசியாக லூனா 24 விண்கலம் மூலமாக 170.1 கிராம் மாதிரிகளை அது சேகரித்துக்கொண்டு வந்தது. ■



அடுத்ததைப் பற்றி யோசிக்கிறது பிழையோ?

■கதிரேசன் காத்தவராயன்

அதிலை சிதம்பரியத்தான் வீட்டடிக்கு கனநாளாய்ப் போகேல்லையெண்டுபோட்டுப் போனன். அங்கை அவரின்ரை மேனின்ரை சினேகிப் பொடியள் மூண்டுநாலு பேர் கதைச்சுக்கொண்டிருந்தாங்கள். சிதம்பரியம்மான் தன்ரை பெடியனும் கூட்டாளியளும் பொது விசயங்களிலை வலு ஈடுபாடு எண்டும் அதாலை நல்லதைச் சொல்லவும் செய்யவும் போய் சிலவேளை யளிலை முரண்படுகிறவங்கள் எண்டும் சொல்லி றவர். அவற்றை மேன் பட்டதாரி வாத்தியார்.

நான் போவமோ திரும்புமோ எண்டு தடுமாற, அவன் பொடியன் கண்டிட்டு வாங்கோ மாமா எண்டு கூப்பிட்டான். அவங்கள் இருந்த இடத்துக்கு அங்காலை கொஞ்சம் தள்ளி இருந்துகொண்டன். ஆனாலும் அவன் என்னை கூட்டாளியளுக்கு அறிமுகப்படுத்தத் தவறேல்லை. அவங்களையும் அறிமுகப்படுத்தினான். ஒராள் ரெக்னிக்கல் ஒபீசர் மற்ரொராள் கச்சேரி பிளானிங்கிலை உள்ளவர் இன்னொராள் நிறுவனமொண்டிலை மனேச்சர் மற்றவர் சொந்தமா பிசினஸ்.

அவங்கள் தங்கடை கதையைத் விட்ட இடத்திலையிருந்து தொடங்கினமாதிரி இருந்து. பிசினஸ்காறன்தான் தொடங்கினான். "நீங்கள் சொல்லுறமாதிரியெண்டால் என்னண்டு வேலை செய்யிறது? நானாய் யோசிச்சாலும் இன்னொராளிட்ட அனுமதியெடுத்து அவர் சொல்லிறமாதிரித்தான் செய்யிறதெண்டால் உருப்படியாய் செய்யலாமே பிஸ்னஸ்...? யோசிச்சுப் பாருங்கோ... உங்களை மாதிரித்தான் நாங்களும் செய்யிறதெண்டால் எப்பிடி? எப்பிடி முன்னேறுறது? நிலைமைக்கேற்றபடி உடனையுடனை முடிவெடுக்கவேணும்... அதுக்கு நிமிசத்துக்கு நிமிசம் தகவல்... உலகம் எங்கை நிக்குது எண்டு பாக்கவேணும்.... என்ன அங்கிள்? நான் சொல்லுறது சரிதானே?" எண்டு என்னையும் கதைக்குள்ள இழுத்தான்.

"சரியாய்த்தான் சொன்னீர்தம்பி. ஊமக்கு உம்மடை தொழில்... அதின்ரை முதல்... போட்டி எண்டு நிறைய இருக்கல்லே? தம்பியவை குறை நினைக்கக்கூடாது மற்றத் தொழிலுகளிலை என்ரை எண்டு ஒரு பொறுப்பு இருக்கோ? இல்லைத்தானே? மற்றது தம்பி சொல்லுறதிலை எனக்கு ஆயிரம் மடங்கு உடன்பாடானது என்னெண்டால் உந்த உலகத்தின்ரை போக்கை விளங்கி சுயமாய் யோசிக்கிறதும் செய்யிறதும்... அது.. அதுதான் தம்பி முக்கியம். முன்னேற வேணுமெண்டால் அது தேவை. மற்றது நாளைக்கு என்ன எண்டிற யோசினை அனேகமா இஞ்ச ஒருத்திரிட்டையும் இல்லைத்தானே?" எண்டு நிப்பாட்டினன்.

"உண்மைதான் அங்கிள். உங்கடை வெள்ளத்தைப்பற்றின கட்டுரையளை பாக்கேக்குள்ள வெக்கப்படுறனான். எங்கடையாக்களோடை சண்டையும் போட்டிருக்கிறன்.... பிறக்டிக்கலா யோசிக்கிறது வலு கஸ்ரமாயல்லே கிடக்குது... அப்பிடி யோசிக்காததுதான் எல்லாப் பிரச்சனையளுக்கும் காரணமாகுது... சொல்லுறதைக்கூட விளங்கிறதுக்குக் கஸ்டப்படுகினம். அடுத்தது அப்டேட் பண்ணிறதே கிடையாது... பழசுகளையே காவித்திரியிறதைத்தவிர புதிசாய் ஒண்டையும் எடுக்கிறேல்லை" எண்டார் ரெக்னிக்கல்பொடியன்.

"தம்பியவை ஒண்டு சொல்லட்டே... எங்கடை உங்கடை காலம் மலையேறிவிட்டுது... உலகம் எங்கயோ போய்க்கொண்டிருக்குது எண்டிறதை வடிவாய் விளங்கவேணும்... அதுக்குத்தக்கபடி எங்களை மாத்தவேணும் கண்டியளோ...! நான் என்ரை வீட்டிலையிருந்தொரு உதாரணத்தைச் சொல்லப்போறன். என்ரை மேளும் மருமோனும் ரீச்சர்மார்தான். வீட்டில கொம்பியூட்டர் கிடக்கு. அவைக்குப் பாவிக்கத்தெரியாது. பேரன்தான் பாவிக்கிறான். தம்பி சுதன் கோவிக்கக்கூடாது... சொல்லி முடிய உம்மடை கருத்தைச் சொல்லவேணும் சரியே? உந்த லொக்டவுண் ஊரடங்கு கொரோனாப் பயம் அது இதுவெண்டு பள்ளிக்குடங்கள் அடிக்கடி நீளமான லீவுகளிலை கிடக்குது... புதிசாய் வந்த கல்வியமைச்சர் 2023 ஆமாண்டு கொம்பியூட்டர் அறிவில்லாத வாத்திமார் வகுப்புக்குள்ள போகேலாது எண்டிருக்கிறார். இந்த லீவுகளை சம்பளத்தோடை அனுபவிச்ச எத்தினைபேர் புதிசாய் எதையாவது படிச்சிருக்கினம்? சொல்லுங்கோ! பொடி பெட்டையள் நிறையப் படிச்சுப் போட்டுதுகள்... பள்ளிக்குடங்கள் சீராய் நடக்கத் தொடங்கினா அந்தப் பிள்ளையளுக்கு முன்னாலை போய்நிண்டு புத்தகத்தைத் தூக்கி வாசிச்சால் என்ன நடக்கும்?"

"அங்கிள் ஒரு ரண்டுமூண்டு நாளைக்கு முன்னம் இந்தக் கேள்வியளை நானும் கேட்டனான்" எண்டார் பிஸ்னஸ் தம்பி. "பிள்ளையளுக்கு ஏதோ செயலட்டை குடுக்கிறதாம்.... அதை ரைப்பண்ணத்தெரியாமல் என்ரை கொமினிக்கேசனிலை வந்து நிக்கினம். எனக்கென்ன வருமானந்தானே?" எண்டு அவர் சொல்லிக்கொண்டிருக்க, இடையிலை புகுந்த

> **"லீவுகளை சம்பளத்தோடை அனுபவிச்ச எத்தினைபேர் புதிசாய் எதையாவது படிச்சிருக்கினம்? சொல்லுங்கோ! பொடி பெட்டையள் நிறையப் படிச்சுப் போட்டுதுகள்..."**

சிதம்பரயம்மானின்ரை மேன் சுதன் "உண்மைதான்.. கொம்பியூட்டருகள் பள்ளிக்குடங்களிலை மூடிக்கட்டினபடி நிறையக் கிடக்கு.... பாவிக்கப் பழகிறதிலை அக்கறையில்லை... ஸ்ராவ் ரூமிலை இருந்து வம்பழக்கிற நேரத்திலை உதுகளைப் பழகலாந்தானேயெண்டு ஒருநாள் சொல்லப்போய் இப்ப ரண்டுமூண்டு பேர் என்னோடை கதைபேச்சேயில்லை..." எண்டு கவலைப்பட்டான்.

"உது கல்வியமைச்சின்ரை பிழை எண்டு அண்டைக்கொராள் என்னோடை சண்டைக்கு வந்திட்டார் அங்கிள்... ஏனெண்டு கேட்டதுக்கு கட்டாயமாய் கணனியறிவை எல்லாரும் பெற வேணுமெண்டு பயிற்சியளைக் குடுக்கேல்லை எண்டார். அப்பிடியெண்டால் சம்பளத்தோடை இதையும் ஆட்சியாளர்கள்தான் தரவேணுமோ? அதுகும் ஏழரைக்கும் ஒண்டரைக்கும் இடையிலைதான் தரவேணுமெண்டு எதிர்பாக்கிறியளோ? எண்டு நல்ல குடுவை குடுத்தன்..." சத்தமில்லாமல் போட்டார் எண்டார் கச்சேரித் தம்பி.

"தம்பியவை...! உங்கடை சிந்தனையள் நல்லதுதான்... ஆனால் எல்லாரும் சிந்திக்கக் கூடியதாய் வாறவரைக்கும் உங்களை குழப்ப வாதியளாய்த்தான் உலகம் பாக்கும்.. கவனமாய் நடந்துகொள்ளுங்கோ!" எண்டபடி எழும்பி வந்திட்டன்.

■



காட்டில் முதல் தொற்று...!

கொரோனா வைரஸைப் பரப்புகின்றன என்று தெரிவித்துக் கிட்டத்தட்ட 17 மில்லியன் வரையிலான மிங் விலங்குகளைக் கொல்வதற்கு டென்மார்க் தீர்மானித்திருக்கின்றது என்று செம்மண்ணின் 18ஆவது இதழில் தெரியப்படுத்தினோம். இந்த நிலையில் அமெரிக்காவில் அவ்வகை விலங்கில் முதல்முறையாகக் கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டிருக்கிறது.

'மிங்க்' எனப்படும் ஒரு வகை எலி போன்ற உயிரினத்தை ஐரோப்பாவில் பண்ணைகளில் வளர்க்கிறார்கள். அவற்றின் தோலைப் பெற்றுக் குளிர்கால ஆடைகளைத் தயாரிக்கிறார்கள். இந்த நிலையில் மிங் விலங்குகள் ஊடாகப் பலர் வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருந்தார்கள். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அந்த வைரஸ்களில் மாற்றமடைந்த தீவிரமான தன்மையைக் கண்டறிந்தனர். இதனால்தான் அங்கிருந்த அள்ளைகொள்ளையான அந்த விலங்குகளைக் கொல்லும் தீர்மானத்தை டென்மார்க் அரசு எடுத்தது.

அமெரிக்காவிலும் அவ்வகை விலங்கில் இந்த வைரஸ் இப்போது கண்டறியப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் யூடா மாகாணத்தில் மிங்க் விலங்குப் பண்ணையை ஒட்டிய காட்டுப் பகுதியில் வசித்த மிங் விலங்கு ஒன்றுக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக உலக வன விலங்கு சுகாதார அமைப்புக்குத் தெரியப் படுத்தி இருப்பதாகக் கூறுகிறது அமெரிக்க விவசாயத் துறை.

பண்ணைகளில் இல்லாமல் காட்டில் சுதந்திரமாகச் சுற்றித் திரியும் வன் விலங்குகள் மத்தியில், கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்ட முதல் விலங்கு இதுதான் என்று தெரிவிப்பதுடன் இந்த மிங்க்குக்கு வந்த கொரோனா வைரஸ், மற்ற மிங்குகளுக்கு பரவலாம் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள். அமெரிக்காவில், பூங்காக்களில் வாழும் புலிகள், சிங்கங்கள் மற்றும் பனிச் சிறுத்தைகளில் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. வீடுகளில் வாழும் பூனைகள் மற்றும் நாய்களில்கூட கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் காட்டில் வாழும் விலங்கில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறை.

மீண்டும் ஒரு எழுச்சிக் கதை திரைப்படம்!

தமிழக துடுப்பாட்ட வீரர் தங்கராசா நடராஜனின் வாழ்க்கை திரைப்படமாகின்றது. அதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. நடிகர் தனுஷ் நடராஜனின் பாத்திரத்தை ஏற்கின்றார்.

ஒரு பின்தங்கிய கிராமத்தில் வசதி வாய்ப்புகளற்ற பின்னணியில் இருந்து உலகின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பியிருக்கும் இந்தத் தமிழ் இளைஞனின் சாதனைக் கதை சாதிக்கத் துடிக்கும் இளைஞர்கள் எல்லோருக்குமே உத்வேகம் கொடுக்கும் என்பதால் இந்தத் திரைப்படத்தைத் தயாரிக்கப் போவதாக படக் குழு அறிவித்துள்ளது.

இதேபோன்றதொரு வறிய பின்னணியில் இருந்து வந்து ஆகக்குறைந்த கட்டண வானூர்தி நிறுவனத்தை உருவாக்கிய தரைப் படைக் கப்டன் கோபிநாத்தின் கதையை சூரரைப் போற்று என்கிற திரைப்படமாக எடுத்து வியாபார ரீதியாகவும் பெரும் வெற்றிபெற்ற இயக்குநரான சுதா கொங்கராவே இந்தத் திரைப்படத்தையும் திரைக்கதை எழுதி இயக்கவுள்ளார். அவரது நெருங்கிய நண்பரான ஜி.வி.பிரகாஸ் இசையமைக்கிறார். ஜோக்கர் கைஸ் என்கிற நிறுவனத்தால் தயாரிக்கப்படும் இந்தத் திரைப்படம் நடராஜன் என்கிற பெயரிலேயே வெளியாக உள்ளது.

திரைப்படம் தொடர்பான முன் காட்சிகளும் வெளியிடப்பட்டுள்ளன. சூரரைப் போற்றுப் படம் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து அதன் இயக்குநர் மீண்டும் ஒரு உண்மைக் கதையைக் கையில் எடுத்திருப்பதால் அதன் மீதான எதிர்பார்ப்பு மிக அதிகமாகவே இருக்கின்றது.

நடராஜன் தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் உள்ள சின்னப்பூம்பட்டி என்கிற கிராமத்தைச் சேர்ந்தவர். துடுப்பாட்டம் என்கிற விளையாட்டு என்றால் என்ன என்றே தெரியாத ஒரு குடும்பப் பின்னணியில் இருந்து வந்து, ரெனிஸ் பந்துகளில் துடுப்பாட்டம் விளையாடி இன்று உலகப் போட்டிகளில் ஆதிக்கம் செலுத்தும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராகவே சிறப்பாகப் பந்து வீசி உலகின் பார்வையைத் தன் பக்கம் திரும்பியிருக்கிறார்.

தமிழ் இளைஞனின் சாதனைக் கதை சாதிக்கத் துடிக்கும் இளைஞர்கள் எல்லோருக்குமே உத்வேகம் கொடுக்கும்

நடராஜனின் குடும்பம் பொருளாதாரத்தில் மிக நலிந்தது. அவரது அப்பா விசைத்தறி மூலம் துணி நெய்பவராகப் பணியாற்றுகின்றார். தாயார் வீதியோரம் கோழி இறைச்சி விற்கும் சிறிய கடை ஒன்று நடத்தி வருகின்றார்.

"அரச பள்ளியில் படிப்பதற்கான பயிற்சிப் புத்தகம் பென்சில் வாங்குவதற்கே முடியாதளவிற்கு குடும்ப வறுமை. அப்படி இருக்கும்போது கிரிக்கெட் எல்லாம் எம்மாத்திரம்? எனக்கு வளர்ப்புத் தந்தை மாதிரி இருக்கும் உறவினர் அல்லாத அண்ணன்தான் நான் விளையாடுவதற்கான சகலதையும் பார்த்துக்கொண்டார். சில சமயங்களில் விளையாடுவதற்கு அவர்கள் கூப்பிடும் இடத்திற்குச் செல்லக்கூட என்னிடம் பணம் இருக்காது. ஆனால் இப்போது என்னால் எல்லாவற்றையும் செய்ய முடிகிறது. என் தம்பி, தங்கைகள் இருவர் என்ன விருப்பமோ அதைப் படியுங்கள் என்று சொல்லியிருக்கின்றேன்" என்கிறார் நடராஜன்.

நடராஜனுக்கு ஒரு தம்பியும் மூன்று தங்கைகளும் இருக்கிறார்கள். ஒரு தங்கை திருமணம் முடித்து விட்டார். மற்றைய தங்கைகள் இருவரும் தம்பியும் படிக்கிறார்கள்.

சவால்கள் இல்லாமல் நடராஜனின் வாழ்க்கை இந்தளவு தூரம் முன்னேறிவிடவில்லை. 2015ஆம் ஆண்டு இந்தியாவின் முதல்தரப் போட்டியான ரஞ்சிக் கோப்பைப் போட்டியில் தமிழ்நாடு அணி சார்பாக ஆடிய நடராஜன் பந்தை எறிகிறார் என்கிற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டு அவர் ஆடுவதற்கு ஒரு வருட காலத் தடை விதிக்கப்பட்டது.

அதையும் சவாலாக எடுத்துக்கொண்டு தன்னுடைய பந்துவீசும் கையைச் சுழற்றும் முறையை மாற்றிக் கொண்டு மீண்டும் களத்திற்கு வந்தார் நடராஜன். இந்தியன் பிரிமியர் லீக் அவரை வாரிக்கொண்டது. அங்கும் வெற்றிகள் உடனடியாகச் சாத்தியமாகிவிடவில்லை. ஆனால், 2020 எல்லோர் வாழ்க்கையும் கொரோனா புரட்டிப்போட்டாலும் அது நடராஜனின் ஆண்டாக மாறியது.

இந்தக் கதைதான் நடராஜனைக் கொண்டாடுவதற்குக் காரணம். இதே கதைதான் சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு உத்வேகம் தரக்கூடியது என்கிறது திரைப் படக் குழு.

இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கபில்தேவ் ஒரு காலத்தில் இதே மாதிரி ஒரு சமூகப் பின்னணியில் இருந்து வந்து வெற்றிபெற்றவரே. மீண்டும் ஒரு கபில்தேவைப் போலவே நடராஜனும் கொண்டாடப்படுகின்றார்.

எந்நாளும் நலம் வாழ மருத்துவம்

மருத்துவர் - கந்தையா சோதிதாசன்

நினைக்க தெரிந்த மனமே

நான் உன்னை நினைப்பதில்லை
ஏனெனில் நின்னை ஒருபோதும் மறப்பதில்லை

ஞாபகங்கள் இனிமையானவை. மீள மீள நினைத்து இன்புறச்செய்பவை.ஆனால் துயர அனுபவங்களை மறந்து விடுவதுதான் நல்லது. இங்கே மறதி வரமாகிறது. ஆனால் காலையில் என்ன சாப்பிட்டோம் என்பதே சிலருக்கு மறந்து விடுகிறது, வீட் டை சரியாகப் பூட்டினோமா காஸ் அடுப்பை நிறுத்தினோமா என ஞாபக மறதியால் அல்லல்படுவோரை இன்று அதிகம் காண்கிறோம்.

இதைவிட முன்பு நன்றாக படித்தவன் இப்போது படிக்கிறான் இல்லை பரீட்சையில் பின்தங்கியிருக்கிறான் என தங்கள் பிள்ளைகளை வைத்தியரிடம் அழைத்து செல்கிற பெற்றோரையும் காணக்கூடியதாக இருக்கிறது ஆக சாதாரண மறதி இப்போது மருத்துவ பிரச்சினையாகியிருக்கிறது..

இந்த மறதி நோய்க்கு அலைபேசி (மொபைல்) போன்ற இலத்திரனியல் பொருள்களின் அதிகரித்த பாவனை, வேலைப்பளு போன்ற அநேக காரணங்கள் சொல்லப்பட்டாலும் தற்போதுள்ள திட்டமிடபடாத நவீன முறையால் ஏற்படுகின்ற ஊட்டச் சத்து குறைபாடுதான் பெரும்பாலும் ஞாபக மறதிக்கு காரணமாகிறது என்பது அண்மைய சில ஆய்வுகளின் முடிவாகும்.

சித்த மருத்துவ நூல்களில் கூறப்படும் இயற்கை உணவுகளை எடுப்பதன் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

கீரைகள் பழங்கள் சில மரக்கறி வகைகளை அன்றாட உணவில் சேர்த்து கொண்டால் ஞாபக சக்தியை அதிகரித்து கொள்ளலாம்.

*வல்லாரை கீரை இதற்கு நல்ல மருந்தாக சித்த மருத்துவ நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் பொன்னாங்காணி, அகத்தி போன்ற கீரைகளிலும் நினைவாற்றலை அதிகரிக்கும் பொஸ்பரஸ், இரும்பு சத்துக்கள் அதிகம் காணப்படுகிறது.

*நாள்தோறும் இரவில் பாலுடன் நான்கைந்து பாதாம் பருப்புகள் எடுத்துக்கொள்ளலாம் நிலக்கடலையும் (கச்சான்) இது போன்று மூளைக்கு பலம் அளிக்கிறது.

*ஞாபக சக்தியை அதிகரிப்பதில் பழங்களுக்கும் முக்கிய இடமுண்டு இதில் ஆப்பிள் நிறைந்த பயன் அளிக்கிறது. அவ்வப்போது மாதுளை தோடை திராட்சை போன்றவற்றையும் எடுத்துக் கொள்ளாலாம்.

சோளம், கோதுமை, கரட், பீற்றூட், முருங்கைக்காய், சோயாபீன்ஸ் என்பனவும் பொஸ்பரஸ். மற்றும் இரும்புச்சதத்து நிறைந்த உணவுகள் ஆகும். இத்துடன் பால், தயிர் என்பவற்றை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வதாலும் மறதி நோயில் இருந்து நிவராணம் பெறலாம்.

எமது சமையலில் மிளகு, சீரகம் உள்ளி போன்றவற்றையும் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். இவை மூளையின் செயற்பாட்டை அதிகரிக்க உதவும்.

கவலையற்ற மகிழ்ச்சியான வாழ்வு சிந்தனை திறனை மேம்படுத்துகிறது.

மனதிற்கு உற்சாகம் தரக்கூடிய ஆடல் பாடல் போன்ற பொழுதுபோக்குக்களில் ஈடுபடல் யோகாசனம் செய்தல் தியானத்தில் ஈடுபடுதல் என்பனவும் உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தி உங்கள் சிந்தனைத் திறனை அதிகரிக்க உதவும்....

எழுத்தாளர்
மு.சிவநேசன்
எழுதும்
புதிய தொடர்

2

நிலவைப் பார்த்து வானம் சொன்னது...

எவ்வளவு அவசர சிகிச்சைக் காக படுக்கை வசதிகளை அதிகரித்தபோதும் அவற்றினால் எகிறிவரும் நோயாளிகளின் எண் ணிக்கையை சமாளிக்க இயல வில்லை. விளைவு முதிய அறி வுக் களஞ்சியங்களின் இழப்பே.

கொவிட் தாக்கத்தினால் நோயா ளர் பராமரிப்பும், அன்னியப்படுத் தலும் ஏற்படுத்துகின்ற உளவியல் தாக்கங்களும் பாரதூரமானவை. இறந்தாலும் கட்டி அழ முடியாத நிலமை, பெற்றோரை இழந்த குழந்தைகள், குழந்தைகளை இழந்த பெற்றோர் என மேற்கத் திய நாகரீகத்திலேயே சமாளிக்க முடியாத உணர்வுச் சிக்கல்களை ஆசிய நாடுகளில் எதிர்கொள்வது மிகவும் சிக்கலான காரியமே.

இலங்கையிலும் பிறந்து இரு பது நாளேயான ஒரு சிசு கொரோ னாவால் இறந்தது மனதை நெரு டுகின்ற செய்தியாகிறது.

தடுப்பு மருந்து ஒன்றை கண்டு பிடிக்க முன்னணி நிறுவனங்கள் முதல் நாட்டு வைத்தியர்கள் வரை தீவிரமாக போராடி வருகிறார்கள். இதற்குள் பல போலி வியாபார உத்திகளுக்கும் குறைவில்லை.

தடுப்பு மருந்துகள் சில மக்கள் பாவனைக்கான கட்டத்தை எட்டி யுள்ள நிலையிலும் அவை ஒரு பரீட்சார்த்த மட்டத்திலான கட் டத்தை இன்னமும் தாண்டி வர வில்லை.

பல நாடுகளிலும் பொருளாதார நெருக்கடிகள் உருவாகி விட்டன. புதிய உற்பத்திக்காக களங்கள் திறக்கப்படுகின்றன. மருத்துவ உபகரணங்கள், முகக் கவசங்கள், கையுறைகள், பாதுகாப்பு அங்கி கள் மற்றும் கைகழுவும் திரவங் களுக்கான கிராக்கி வெகுவாக அதிகரித்துள்ளது.

மக்கள் கூடுமிடங்களை புத்தி சாலிகள் தவிர்க்க முனைகிறார் கள். பலரும் தாமாகவே தங்களது வழமையான அசண்டையீனங் களைத் தவிர்த்து தொற்றா நோய் களான நீரிழிவு மற்றும் குருதி அழுத்தம் போன்றனவற்றை புத்தி சாதுரியமாக முகாமை செய்யப் பழகிவிட்டார்கள்.

வைத்தியசாலைகளுக்கு எடுத் ததற்கெல்லாம் ஓடுகின்ற வழ மையை பலரும் தவிர்க்க நினைக் கிறார்கள்.

உலகமே முடக்கத்திற்கு வந்து விட்ட ஓர் உணர்வு தொடக்க காலகட்டத்தில் இருந்தது. பல ருக்கும் பலவிதமான நெருக்கடி கள் உருவாகவே செய்தன. வரு மான இழப்பு அன்றாடம் உழைப் பவர்களை உலுக்கி எடுத்த வேளை அது. முடக்கத்திற்கு மக் கள் பழக்கப்பட்டு இருக்கவில்லை.

இந்த வேளையில்த்தான் பல ரது சிந்தனைகள் சமூகத்திற்கு பயனுறும் வகையிலான வளர்ச் சியைக் காணத் தவறவில்லை.

இங்கே அமைப்புக்கள் பலவும் உதவி விநியோகம் என்று களத் தில் இறங்கி இருந்தன. புலம்பெயர் மற்றும் உள்ளூர் கொடையாளர் கள் பலரும் இந்த அமைப்புக்கள் ஊடாக உதவிகளை புரிய முன் வந்தனர். இதற்குள் சுய விளம்பரங் களும் போட்டிகளும் இடம்பெறத் தவறவில்லை.

மேலை நாடுகளில் பொது இடங் களில் வரிசையாக உதவிப் பொதி கள் வீதியோரம் இடைவெளி பேணி அடுக்கப்பட்டிருந்தன. அந்த கொடையாளி யாரென்பது எவருக்குமே தெரிந்திருக்கவில்லை. அவர்கள் வரிச் சலுகை கோரியி ருக்கவும் இல்லை.

வலது கை கொடுப்பதை இடது கை அறியாத சூட்சுமத்தை அவர் கள் தெரிந்து கொண்டிருந்தனர் போலும்.

வீடுகளில் முடங்கிப் போயி ருந்த பலரும் அந்த நேரத்தை ஆக்கப்பூர்வமான முறையில் தம்மாலான ஏதோ ஓர் உதவியை தேவைப்படுகின்றவர்களுக்கு செய்வதிலேயே குறியாக இருந்த னர். மனிதநேய உதவிகளைச் செய்வதற்கு இந்த வேளையை அவர்கள் பயன்படுத்தினார்கள்.

ஸ்பெயினில் தமது வாழ்வாதா ரத்திற்காகச் சப்பாத்துக்கள் தைக் கும் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண்கள் குழு ஒன்று யாரும் கேட்காமலே ஆயிரக்கணக்கான முகக் கவசங்களை தைத்து அருகி லுள்ள வைத்தியசாலை பணியா ளர்களுக்கு வழங்கி இருந்தனர்.

பிரான்ஸில் குழுவாக சிலர் இணைந்து சிற்றுண்டிகளை தயா ரித்து ஒய்வு ஒழிச்சல் இன்றி வேலை செய்யும் மருத்துவமனைப் பணியாளர்களுக்கு வழங்கி வந்த னர். இத்தகைய உதவிகள் முகநூல் வழியாக சர்வதேச மட்டத்திலான கவனத்தை ஈர்த்தவேளை பாராட் டுக்கள் மட்டும் குவியவில்லை. இதே வழிகளை உலகெங்கும் பலரும் பின்பற்றலானார்கள். ■

யாழ்., மன்னாரில் புதிய பறவை

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கரையோரங்களில் புதிய பறவையினம் ஒன்றை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். "அனுமான் புலோவர்" என்று அந்தப் பறவைக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் மற்றும் சுற்றுச்சூழலியல் துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இந்தப் புதிய பறவையைக் கண்டுபிடித்துள்ளனர்.

கலாநிதி சம்பத் செனிவிரட்ன, சீனாவைச் சேர்ந்த பேராசிரியர் யாங் லியு மற்றும் பல்கலைக்கழக ஆய்வு மாணவரான ஜூலிட் ஜனிதா நிரோஷன் ஆகியோர் அடங்கிய குழுவே இந்தக் கண்டுபிடிப்புக்குச் சொந்தக்காரர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பறவை யாழ்ப்பாணம், மன்னார், அம்பாந்தோட்டை மற்றும் மன்னாருக்கும் ராமேஸ்வரத்துக்கும் இடைப்பட்ட மணல் திட்டுக்களில் உள்ள சதுப்பு நிலங்களிலும் காணப்படுவதாக கலாநிதி சம்பத் செனிவிரட்ன தெரிவித்தார். இந்தப் புதிய பறவை கென்டிஷ் புளோவர் பறவையினத்தின் ஒரு உப பிரிவாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கணிக்கிறார்கள். எனினும் மரபணு ஆய்வுகளுக்குப் பின்னரே அது உப உயிரினமா அல்லது தனியான உயிரினமா என்பது உறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அனுமான் இலங்கைக்கு வந்த இதிகாசக் கதையின் தொடர்ச்சியாக இந்தப் பறவைக்கு அனுமான் புலோவர் என்று பெயரிடப்பட்டிருக்கின்றது.

2019ஆம் ஆண்டு புதிய பாம்பினம், பல்லியினங்கள், வண்ணத்துப்பூச்சி என 15 புதிய உயிரினங்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.



ஏறி மிதிக்கும் மாடுகள்...?

● காயா

தடினமான பலகைகளால் தயாரிக்கப் பட்டுப் பல காலப் பாவனையைக் கடந்திருந்த அந்த வாங்கு, பழங்காலத் துத் தயாரிப்பு என்பதைக் கட்டியம் கூறியது. நாடி நரம்புகள் சோர்வடைந்து தசைச் சுருக் கம் உச்சமடைந்து வெளிறிப்போன தேகத் துடன் அந்த வாங்கிலில் மல்லாக்காகப் படுத் திருந்தார் குமாரதாசன். அவருக்கு வயது 82.

அவருடைய வதனத்தை உரோமங்கள் தமது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தன. சோகமும், அனுபவ முதிர்வும், இந்த மானிட வாழ்க்கை உண்டாக்கிய சலிப் பும், வெறுப்பும், ஏமாற்றமும் என மண்டிக் கிடந்த அவரது அகத்தை அவரது முகம் புடம்போட்டது. அவர் அருகே - தலை மாட்டுக்குள் தேநீர் அருந்திய வெறுமையான தகரப் பேணிகள் இருந்தன. அரையில் செரு கப்பட்ட வெற்றிலைப் பையும் அவரைப் போலவே வயிறு வற்றி - ஒட்டிப்போய்க் கிடந் தது.

"ஐயா...!" என்று அழைத்ததும் செருமிக் கொண்டு கண் திறந்தார். பின்னர் சிறியதொரு நிதானத்துடன் மெல்ல எழுந்தார். வாடி வதங் கிக் கிடந்த தனது உடலை வளைத்து நிமிர்த் திக் கொண்டார். அவர் வசிக்கின்ற அந்த ஓலைக்கொட்டிலும் இதே ரகத்தில்தான் இருந் தது.

நார்க் கடகம் இழைப்பதில் வல்லவர் குமார சாமி ஐயா! அதை அறிந்துதான் அவரைத் தேடினேன். மண்கும்பான் கிராமத்தில் அவ ரைக் கண்டுபிடித்தேன். அவர் இயங்குவதே எனக்குப் பிரமிப்பாக இருக்க, இந்த மனிச னால எப்படிக் கடகம் இழைக்க முடியும் என்று மனதுள் இழையோடியது. ஆனால், அவரைச் சுற்றிக் கிடந்த ஓலைகள், நார்கள், இதர பொருள்கள் எனப் பல தடயங்கள் அவர் கடகம் இழைக்கும் தொழிலில் கைதேர்ந்தவர்தான் என்பதை உணர்த்தின. அவரும் தனது கைத்திறனைப் பெருமையு டன் பகர்ந்தார்.

"16 வயசில இழைக்கத் தொடங்கினான். அப்பர் இழைச்சவர். அதப் பாத்துப் பாத்து நான் பழகினான். கடகம், வேலிப் பட்டை... தண்ணியிறைக்கிறது, பாய், பெட்டி எண்டு எல்லாம் இழைக்கிறனான். நாங்க ரெண்டு பேரும் தானே (அருகில் இருந்த மனையா ளைச் சுட்டினார்) கடகம் இழைச்சால் அங்க னேக்க சீவியத்தப் போக்காட்டும்...இப்பிடிக் கடகம் (அந்தக் கொட்டிலுக்குள் குறுக்காக வைக்கப்பட்டிருந்த மரம் ஒன்றின் மேலிருந்த கடகம் ஒன்றை எடுத்துக் காட்டினார்) ஒண்டு இழைக்கிறதெண்டால் மூண்டு நாள் செல் லும்... ஓலை வார்ந்து ஒரு கடகம் இழைக்க 3 நாள் பிடிக்கும். அது மூண்டு வருசம் வரைக்கும் கிடந்து பாவிக்கும். அதுக்கு ஓலை வாரவேணும், நார் வாட்ட வேணும்... நார் வாட்டுறதுதான் பெரிய வேலை... நார் வாட் டுறதெண்டால் இந்தக் கணக்கில (கடகத்தில் இருப்பதைச் சுட்டுகிறார்) கீறிப்போட்டுப் பிறகு சொத்தி வாட்டவேணும்"

அவர் எடுத்துக்காட்டிப் பேசிய கடகத்தைத் தொட்டுப் பார்த்தபோது எனக்குள் ஆச்சர்யம் எழுந்தது. இயலாத முதியவரால் இவ்வளவு இறுக்கமாகவும், நேர்த்தியாகவும் இதை எப்படிப் பின்ன முடிந்தது...? கேள்விகள் எழுந்தன. அந்தக் கடகம் இரும்பால் வார்க் கப்பட்டதுபோல இருந்தது. நார்கள் மிகத் தைரியமாகப் பின்னப்பட்டிருந்தன. மிக நேர்த்தியான ஒழுங்கில் இழையோடிக் கிடந் தன. ஐயாவின் உடற்தளர்வுக்கு நேர்மாறாகக் கட்டுக்கோப்பாக இருந்தது அந்தக் கடகம். இதுதான் அவரது பெயருக்கும் பிரபல்யத் துக்கும் காரணம்போல...!

"அந்தக் காலத்தில நான் இழைக்கிற கட கத்துக்கு ஆக்கள் அடிபடுவினம். மேல் சொண்டுக்கு நார் வைச்சுக் கட்டுறது என்ர தனித்திறமை. அது நல்ல வடிவாயிருக்கும். பிறகு கடகம் வாங்கிற லொறிக்காறர் அந்த மட்டைய வைக்க வேணாம் எண்டிட்டினம். நார் வைச்சால்தான் கடகம் பிலப்பு.. அதோட ஒரே நார் மட்டையில வரிஞ்சு கட்டுவன். தொத்து வைச்சால் கடகத்தைப் பிடிச்சுத் தூக்கேக்க மட்டை பிய்யும். ஒரே மட்டை யெண்டால் அந்த மட்டை கடகத்தைப் பிய்ய விடாது. பிலப்பாயிருக்கும். இப்பவும் கடகம் இழைக்க ஆசைதான். ஆனா ஏலாம இருக்கு. உடம்பும் அப்பிடிச் சூழலும் அப் பிடி... நார் எல்லாம் உரிச்சபடியே கிடக்கு. காயப்போட்டுக் கட்டி வைச்சிருக்கிறன்"

இப்போதெல்லாம் சோகமும், பஞ்சமுமாகத் தான் அவரது வாழ்க்கை மூச்சிழுக்கிறது. அவரைப் பீடித்துவிட்ட அவற்றை விரட்டு வதற்கு அவர் தினமும் போராடுகிறார். தன் னால் முடியாது என்று தெரிந்தும் போராடு கிறார். ஏனெனில் இந்தப் பெரும் சமூகத்தால் ஏற்படுத்தப்பட்ட தடைகள் அவை. அதை அந்தத் தனி மனிதன் உடல் இயலாத காலத் தில் எதிர்ப்பதென்றால்... எதிர்த்து வெல்வ தென்றால்....? அவரது போராட்டம் தொடங் கியது இன்று நேற்றல்ல 90களிலேயே தொடங் கியிருக்கிறது...!

"தொன்னூறில இடம்பெயந்துபோய் இருக் கேக்க சுண்டிக்குளத்தில இருந்து வேலிப் பட்டை (கிணற்றிலருந்து தண்ணீர் அள்ளும் மற்றும் நீர் இறைக்கப் பயன்படும் ஓலையால் செய்யப்பட்ட பட்டை) இழைச்சுக் குடுத்த னான்... இயக்கத்துக்கு...! அது அப்ப...! முன்னூற்றம்பது ரூவா.... இப்ப இழைச்சாலும் குடுக்க ஏலாது. அதுதான் கடைசியா இழைச்ச காலம்... தண்ணியிறைக்க மிசினுகள் வந் திட்டுது. இல்லாட்டிக்கும் வாளிகள், பிளாஸ் ரிக் சமானுகள் எண்டு நிறையக் கிடக்கு... பட்டையத் தேடுவார் ஆர்..."

ஆம்! ஐயா சொல்வதுபோல புதிய, நவீன பொருள்கள் - கருவிகளின் வருகையால் வாழ் வாதாரத்தை இழந்த அடிமட்ட மனிதன் அவர். படிக்காத மனிதரான அவர் தனக்குத் தெரிந்த தொழிலைச் செய்துவர நவீன மோகம் அவரைத் துரத்தித் துரத்தி தொழிலிழக்கச் செய்திருக்கின்றன. நான் அவரைச் சென்ற டைந்தபோது தன் இறுதிக் கட்டத்தில் அவர் இருந்தார்.

"சரி தொன்னூறோடை வேலிப்பட்டை இழைக்கிறத விட்டாச்சு எண்டுபோட்டுக் கட கம் இழைச்சுக் குடுத்தண்டு வந்தன். நான்

> "நான் கடகம் இழைக்கிறது பற்றி ஊரெல்லாமே புகழ்பேசும். அந்தளவுக்குப் பிரபலம். ஊர் தாண்டியும் பலருக்குத் தெரியும். அதிகம்பேர் என்னைத் தேடி இஞ்சை வந்து கடகம் எடுப்பினை.."



கடகம் இழைக்கிறது பற்றி ஊரெல்லாமே புகழ்பேசும். அந்தளவுக்குப் பிரபலம். ஊர் தாண்டியும் பலருக்குத் தெரியும். அதிகம்பேர் என்னைத் தேடி இஞ்சை வந்து கடகம் எடுப் பினை.. யாவாரிமார், லொறிக்காரர், ரக்ரர் காரர் எல்லாரும் வீடு தேடி வருவினை... கடையளுக்கும் இழைச்சுக் குடுத்தனான். நல்லா உழைச்சனான். ஆனால், காலப்போக் கில அதுவும் இல்லாமப்போச்சுது. கடைக் காரர் கடகத்தை எடுக்கமாட்டன் எண்டிச் சினம். இழைக்கிறதக் குறைச்சன். வீட்ட வாற ஓடர்காரருக்கு மட்டும் இழைச்சன். காலப் போக்கில அதுவும் குறைஞ்சு கொண்டு வந்திட்டுது.

ஒரு பனை ஓலைவெட்ட இப்ப 200 ரூபா போகுது. ஓலை வெட்டுறதுக்கு ஆள் பிடிக்

கிறது பெரிய சிரமம். ஓலை வெட்டி, அதைப் பதப்படுத்தி, நார் வார்ந்து சீவி, உரிச்சுக் காயப்போட்டு, இழைச்சால் விற்காமல் கிடக்கும். இழைச்சு விற்காமல் கிடக்கிறதை ஏன் இழைப்பான்...? சரி... சின்னக் கட கங்கள் இழைச்சால் குடுக்கலாம் எண்டு இழைச்சன். இப்ப சொல்லு றாங்கள்.... ஐயோ அண்ணை...! மேசன்மார் இப்ப கடகம் எடுக்கி றேல்ல... ரியூப்பிலேயே அள்ளு றாங்களாம் எண்டு. ரியூப்...? பைபர்...? இருக்கல்லோ எண்ணை பைபர்... அதை வெட்டிப் போட்டு அதிலை கல் மண்ணை அள்ளுறாங்களாம்... அப்ப என்னெய்யிறது...? அந்தச் சின்னக் கட கங்களுக்குக்கூட ஆரும் இங்கனேக்கயிருக்கிற ஒண்டிரண்டு பேர்தான் வருவாங்கள்..."

வேலிப்பட்டை, கடகம் மாத்திரமல்ல அதைத் தாண்டியும் தன்னால் இயன்ற தொழில் கள் பலதை அவர் இப்போது இழந்துவிட்டார். கடகத்துக்கு அடுத்து அவர் குறிப்பிட்டது ஓலைப்பாயை...

"முத்தல் ஓலையில இழைக்கிற பெரிய பாயைச் சிற்பப் பாய் எண்டு சொல்லுறது. போயிலையை உருட்டி வைச்சுச் சிற்பம் கட்டுற பாய். அந்தப் பாயை இழைச்சுக் கொண்டுபோனாக் கடைக்காரர் வேணாமாம்... இப்ப போயிலை இல்லையாம் அப்பிடிப் போயிலை கட்டுறதெண்டாலும் உர பாக்கில கட்டுறாங்களாம்... சிற்பப்பாய் வேண்டாம் எண்டுகினம்... அது இழைச்சுக் கிடந்தாப் பழுத்துப்போயி ரும். அந்தா இப்பயும் கிடக்கு வீட்டுக்க 6 பாய்... மழைக்கு எல்லாம் பழுத்து சோர்ந்து போகுது... அப்ப பாய என்ன செய்யிறது நாங்க...? எல்லாப் பாயையும் போட்டுப் படுத் துக் கிடக்கிறதா...?" அவரது முகத்தில் படர்ந்த அந்தச் சிரிப்பு விநோதமானது. இத்தனை காலமும் படிந்து கிடந்த பெரும்சோகத்தை உடைத்து வெளிப் பட்டது.

படிக்காத மனிதரான அவர், தனக் குத் தெரிந்த இதுபோன்ற பல தொழில் களைச் செய்து வந்துள்ளார். சமூக மாற்றத்தால் - அது அடைந்துள்ள விருத்தியால் அந்தத் தொழில்கள் படுத்துவிட முதுமையால் அவரும் படுக்கையில் உள்ளார். முதுமை என்கிற மரத்தால் விழுந்த அவரை முன்னேற்றம் - அபிவிருத்தி என்கிற நவீன மாடுகள் அடுத்தடுத்து ஏறி மிதித்து வந்து இன்றைய நிலையில் விட்டுள்ளன. நீர் அள்ளும் பட்டை, கடகம், சிற்பம் கட்டும் பாய் என அவர் தனக்குத் தெரிந்த தொழில்கள் அனைத்தையும் இழந்துள்ளார். அர சின் தயவில் வாழ்ந்து உத்தியோகத்தை யும் அதையொட்டிய ஓய்வூதியத்தை யும் பெற்றுவிடுவதற்குப் படாதபாடு படுகின்ற பலருக்கு மத்தியில் தனது காலில் நின்று உழைத்து வாழ்வின்முடி வில் இடர்ப்படும் மனிதனாக இருந்தா லும் அவர் உயர்வாகவே தெரிந்தார். படுக்கையில் நலிந்து கிடந்தாலும் நிமிர்ந்தே நிற்கிறார்.

'நான் எல்லா... சகல வேலையும் செய்தனான். இப்ப ஏலாதத்தோட எல் லாம் குறைஞ்சு போச்சுது. பாய் இழைச் சன்... கடகம் இழைச்சன் வேலிப் பட்டை இழைச்சன்... மாக்குத்துற தட்டுப் பெட்டி இழைச்சன்... இன்னும் கனக்கத் தொழிலுகள் எல்லாம் செய் தன். தோட்டம் செய்யிறதெண்டு சொன் னால் எனக்கு அவ்வளவு ஆசை... ஆனா 82வயசில... மம்பெட்டி பிடிக்க ஏலுமா...?"

சொகுசு மற்றும் அரச வேலைதேடும் இளம் சந்ததியினருக்கு மத்தியில் தள்ளாத வயதிலும் அவருக்குள் எழுந்த ஆசையைச் சொன்னார் அவர்.

நீரின் வழியும் (தி சேப் ஒவ் வோட்டர்)



கில்லெர்மோ டெல் டோரோ என்பவர் இயக்கி 2017ஆம் ஆண்டில் வெளிவந்த அமெரிக்கத் திரைப்படம் இது. காதல் வகைத் திரைப்படமான இது இத்தாலிய நாவல் ஒன்றைத் தழுவி எடுக்கப்பட்டது.

முதன்மைப் பாத்திரம் ஏற்று நடித்திருப்பவர் சாலி ஹாக்கின்ஸ். அவருடன் மைக்கல் ஷானன், ரிச்சர்ட் ஜென்கின்ஸ், டக் ஜோன்ஸ், மைக்கல் ஸ்டுல்பர்க், ஆக்டேவியா ஸ்பென்சர் ஆகிய பலர் நடித்திருக்கின்றனர்.

74ஆவது வெனிஸ் சர்வதேச திரைப்பட விழா வில் முக்கிய போட்டியின் ஒரு பகுதியாக இந்தப் படம் திரையிடப்பட்டது சிறந்த படத்திற்கான கோல்டன் லயன் விருதைப் பெற்றது.

2017 டொராண்டோ சர்வதேச திரைப்பட விழா வில் திரையிடப்பட்டது. நடிப்பு, திரைக்கதை, இயக்கம், காட்சிகள், தயாரிப்பு வடிவமைப்பு

மற்றும் இசை ஆகியவற்றிற்காக வெகுவாகப் பாராட்டப்பட்டது. 90ஆவது ஒஸ்கார் விருது களில் பதின்மூன்று பரிந்துரைகள் உட்பட பல விருதுகளையும் பரிந்துரைகளையும் பெற்றது. சிறந்த படம், சிறந்த இயக்குநர், சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு ஆகியவற்றுக்கு ஒஸ்கார் வென்றது. அத்தோடு 75 வது கோல்டன் குளோப் விருது களில் ஏழு விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

கதை

நாயகி எலிசா எஸ்போசிட்டோ வாய்பேச முடி யாதவள். 1962கள் - பனிப்போர்க்காலம் - மேரி லாந்தின் பால்டிமோர் நகரில் உள்ள பெரியதொரு ரகசிய அரச ஆய்வ கத்தில் சுத்திகரிப்பாளராகப் பணி யாற்றுகிறாள். அவளுடைய வாழ்க்கை எந்த மாறுதலுமின்றித் தினமும் ஒரே நாள் ன்றே நகர்கிறது. தினமும் மிக வும் வழக்கமான வாழ்க்கை.

அவளுடைய பக்கத்து வீட்டுக் காரர் கில்ஸ் வயோதிப நபர். விளம் பரம், விளக்கப்படம் வரைபவர். அவளது சக ஊழியர் செல்டா புல் லர். பணிபுரியும் அந்த இரகசிய ஆய்வகத்துக்குத் தென் அமெரிக்க ஆற்றில் இருந்து கைப்பற்றப்பட்ட ஒரு மர்ம உயிரினத்தைக் கொண்டு வருகிறார் அந்தத் திட்டத்தின் பொறுப்பாளரான கேணல் ரிச்சர்ட் ஸ்ட்ரிக்லேண்ட். அவர் மிகவும் கொடூரமானவர்.

உயிரினங்கள் மீது ஆர்வமுள்ள எலிசா அதனு டன் பழகத் தொடங்குகிறாள். அது மனித உரு வம் கொண்ட புதுவித உயிரினம். அதை நீர் நிலை ஒன்றுக்குள் மிகப் பெரும் இரும்புச் சங்கிலியால் கட்டி வைத்துத் துன்புறுத்துகிறார்கள். அதன் மீது பரிதாபம் கொண்ட எலிசா அதை இரகசியமாகப் பார்க்கத் தொடங்குகிறாள், இரு வரும் நெருங்கிப் பழகத் தொடங்குகிறார்கள். சைகையால் பேசுகிறார்கள்.

அந்த விலங்கைக் கடுமையாகத் தாக்குவதால் அதற்குப் பொறுப்பான விஞ்ஞானிக்கும் கேண லுக்கும் இடையே முரண்பாடு எழுகிறது. அந்த உயிரினத்தை அழிக்கும் திட்டத்தைக் கேணல் முன்மொழிய விஞ்ஞானி அதை எதிர்க்கிறார். ஒரு கட்டத்தில் அங்கிருந்து அந்த உயிரினத்தை எலிசாவுடன் தப்பிக்க வைக்கிறார் விஞ்ஞானி. அந்த உயிரினத்தைக் கடத்தித் தனது வீட்டுக் குளியல் தொட்டியில் வைத்திருக்கிறார் எலிசா. தப்பித்த உயிரினம் குறித்துக் கேணல் விசாரித்து வருகிறார். கில்ஸ்சின் வழுக்கைத் தலை மற்றும் காயமடைந்த கையில் அந்த உயிரினம் தொடும் போது அவருக்குத் தலைமுடி மீண்டும் வளரத் தொடங்கிக் காயம் குணமடைகிறது. அந்த உயி ரினம் விநோதமானது என்று அவர்களுக்குப் புரி கிறது.

ஒருகட்டத்தில் எலிசா அதனுடன் உடலுறவு கொள்கிறாள். இறுதியில் கேணல் எலிசாதான் அந்த உயிரினத்தைக் கடத்தி வைத்திருக்கிறாள் என்பதைக் கண்டறிகிறார். எலிசாவையும் அந்த உயிரினத்தையும் சுட்டுக் கொல்கிறார். குண்டடி பட்டுத் தரையில் சரிந்த அந்த உயிரினம் தன்னை விரைவாகக் குணமாக்கிக் கொண்டு எழுந்து சென்று கேணலைக் கொல்கிறது. பின்னர் குண் டடிபட்ட எலிசாவைத் தூக்கிக் கொண்டு கால் வாய் ஒன்றுக்குள் குதிக்கிறது. அவளைக் குண மாக்கி முத்தத்தைப் பரிமாறிக்கொண்டு இருவரும் நீருக்குள் இலாவகமாக நீந்துவதுடன் படம் முடிகிறது.

காட்சியமைப்பும் பாத்திரங்களும்

படம் முழுதுமான காட்சியமைப்புகள் மிக மிருதுவான இசைக் கலவையுடன் ஒருமித்துப் போகும் தன்மையுடையனவாக இருக்கின்றன. நீரின் நிறத்தில் இசையுடன் லயப்படும் வகையில் அற்புதமாக வடிவமைக்கப்பட்டுத் தொகுக்கப் பட்டிருக்கின்றன. நீர் என்கிற பொருளுக்கு இசை யாலும் திரைமொழியாலும் வடிவம் கொடுப்ப தற்குப் படக்குழுவினர் எடுத்த முயற்சி வெற்றி யளித்திருக்கிறது என்று சொல்லலாம்.

அதைப்போலவே திரைக்கதையும் செவ்வனே பொருந்திப்போய் காதலர்கள் நீருடன் ஒன்றிப்ப துடன் முடிவடைகிறது. முதன்மைப் பாத்திரம் ஏற்று நடித்துள்ள எலிசா வாய்பேச முடியாத

பெண்ணாக நடிப்பில் உச்சம் தொட்டு நிற்கிறார். இதற்காகவே பல விருதுகளைத் தனதாக்கியி ருக்கிறார் அவர். தனது பணியாகட்டும், சக ஊழி யருடன் உறவாடுவதாகட்டும், அந்த உயிரி மீது காதல் கொள்வதாகட்டும் அனைத்திலுமே நடிப்பே தெரியாத வகையில் வாழ்ந்துமுடித் துள்ளார் எலிசா. அவரது உழைப்பும் படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் என்பது குறிப்பிடத் தகுந்தது.

வளமிகு வாழ்விற்கான வழிகாட்டலின் நிலை...?

● பேர் அறிஞன்

சமூகத்தினது எண்ணங்களைப் பொறுத்தவரை அது நிரந்தர முகவரியின்றிய ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. தனது எண்ணங்களைக் காலத்துடன் எப்போதுமே மாற்றியிருக்கிறது. அம் மாற்றம் என்பது மிகமிக அவசிய மானதுதான். அதனை மறுக்க முடி யாது. ஆனால் மாற்றம் என்பது எவ்வாறானது? எதனை இலக்காகக் கொண்டது? அதன் வழியான பெறுதி களின் வினைத்திறன் மற்றும் விளை திறன் தொடர்பான அவதானத்துடன் தான் இருக்கிறதா? போன்ற கேள்வி களை எழுப்ப வேண்டிய கடமை எம்முன் உள்ளது. இத்தகைய கேள்வி களைச் சமூகம் எழுப்பி விடை தேட முனையவேண்டும்.

அவ்வாறான ஒரு மனோநிலை யைத் தோற்றுவிப்பது அவசிய மானது. ஏனெனில் என்ன செய்கி றோம் என்பதை அறிந்துகொள்வ தற்கும் அப்பால் எப்படி யோசிக்கி றோம் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. உலக மாற்றத்தை சரிவர விளங்கிக் கொண்டு சிந்திக்கத் தவறுவதன் விளைவாகவே பிறரால் வழிநடாத் தப்படுவதும் கையேந்திகளாக மாற் றப்படுவதும் அவற்றினது விளை வாக சுய சிந்தனைத்திறனை இழப் பதும் சிந்திக்கும் தேவை இல்லா மலாவதும் நடந்தேறுகிறது என்கிறது அவதானிகளது கூற்று.

அரசியல் பொருளாதார நகர்வுகள் எமது சமூகத்தினது இயக்கச் சம நிலையை எந்தளவுக்குப் பாதிக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடி யும். இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக கொவிட் - 19 தாக்கத்தை எடுத்துக் கொள்ள முடியும். அரசியல் பொரு ளாதார பலமுடையதாகவும் எதை யுமே மிகஇலகுவாக சாதிக்க முடி யும் என்றும் உருவகப் படுத்தப்பட்டி ருந்த (கட்டமைக்கப்பட்டிருந்த - புலம்பெயர் சிந்தனையாள ரின் வசதியான தனிநபர் பாது காப்புமிக்க என விதந்துரைக்கப்பட்ட) நாடுகள் எல்லாம் நிலைகுலைந்து போய் கையறு நிலையில் நிற்கின்றபோது, கொவிட்-19 முதலில் பாதித்த சீனா எந்தவிதமான சங்கடங்களு மின்றி சந்திரத்தரையில் மண்ணள்ளிக் கொண் டிருக்கிறது என்கிற கள யதார்த்தமும் உணர்ந்துகொள்ளப்பட வேண்டியவை.

சீனா தனது உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் துறைகளில் சரி வைச் சந்திக்கவில்லை. மாறாக முன்னேறியிருக்கிறது. முகக் கவசம் தொடக்கம் பீ.சீ. ஆர். இயந்திரங்கள் என விரிவு படுத்தி யுள்ளது. இது எப்படிச் சாத்திய மானது? வளங்கள் சரிவர ஒருங் கிணைக்கப்பட்டிருக்கிறது என்பதற் கப்பால் அதிகம் யோசிக்கத் தேவை யில்லை. அவ்வாறான ஒருங்கிணைக் கும் வலு என்பது தொடர்பான சிந் தனை நோக்கியதாக நாங்கள் சிந் திக்கத் தயாரா? ஒன்றிணைவற்ற அரசியல் தலைமைகள் (தலைமை என்பது தவிர்க்க முடியாத பதமாக உள்ளது) நிரந்தரமற்ற தங்கு பொரு ளாதாரம் எனும் பௌதீகச் சூழலை எந்தளவிற்கு விளங்கி வைத்திருக் கிறோம்? மாற்றத்திற்கான பொறி முறைகள் பற்றிய சிந்தகைள் செயற் பாடுகள் என்ன?

> சிந்தனை மாற்றம் நோக்கிய தாக நகர்த்துதல் எனும்போது இருக்கின்ற சிந்தனைகள் பகுத்தாராயப்பட்டு அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதற் கான தூண்டுதலை வழங்க வேண்டியது அவசியமானது.

இவற்றுக்கும் ஒரு ஆலோசகனுக் கும் அல்லது வழிப்படுத்துனருக்கும் என்ன தொடர்பு என்கிற கேள்வி எழுகிறதா? அதிலிருந்து தொடங்குவோம். வசதியான நிம்மதியான கௌரவமான போன்ற அடைமொழி களுடனான ஒரு வாழ்வு தொடர்பான வழிகாட்டல் இவற்றைத் தவிர்த்து விட்டுச் செய்ய முடியுமா என எமது சிந்த னையைச் சற்று ஆழமாகவும் அகலமாகவும் ஓட விடவேண்டிய தேவை உள்ள தல்லவா? ஏனெனில் மேலே மிகச் சுருக்கமாக கொவிட்-19 எனும் ஒரு விடயத்தை எடுக் கும்போதே அதற்குள்ளாக விரிகிற தென்பதை உணர முடிகிறதல்லவா? அப்படியாக ஒவ்வொரு விடயங் களையும் தனித்தனியாக நோக்கின் எவ்வளவு விடயங்களை அவ தானிக்கவும் சிந்திக்கவும் வேண்டி யிருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும்.

ஆலோசகனது பணி ஆலோசனை வழங்குவதல்ல. அப்படி வழங்கு வது ஆலோசனையுமல்ல. அது போதனை. வழிப்படுத்துவது பணி தான் அறிந்த வழியில் வழி நடத்து வதல்ல. அதற்குப் பெயர் மேய்த்தல். மண்ணிலுள்ள வளம் மனிதவளம் என்பவற்றுக்கப்பால் சிந்தனைவளம் என்கின்ற ஒன்றையும் முக்கிய மாகக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது எனும் யதார்த்தம் உணர்ந்துகொள்ளப்பட வேண்டிய ஒன்று. நடைமுறையில் அது இருக் கிறதா?

சிந்தனை மாற்றம் நோக்கியதாக நகர்த்துதல் எனும்போது இருக்கின்ற சிந்தனைகள் பகுத்தாராயப்பட்டு அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதற் கான தூண்டுதலை வழங்கவேண்டி யது அவசியமானது. அவ்வாறான மாற்றம் தொடர்பான வேலைகளைத் திட்டமிடல் என்பது சமூகத்துள்ளி ருந்து நேரடியாகவும் உன்னிப்பான அவதானத்தின் மூலமும் பெற்றுக் கொண்ட விடயங்களாக இருப்பது அவசியமானது. ஆனால் நடப்பது என்ன?

இறக்குமதி செய்யப்பட்டு திணிக் கப்பட்ட அல்லது நெட்டுருப் போடப்பட்ட கோட்பாடுகளை தலைமேல் வைத்து, மூடிய அறை களுக்குள்ளிருந்து ஒருசிலரால் எழு தப்படுகிறது. அதற்கான நிதி எங்கி ருந்தாவது பெறப்படுகிறது. பின்னர் ஒருசில மணித்தியாலப் போதனை களாக ஆலோசனை வழிகாட்டல் செயலமலர்வுகள் நடாத்தப்படுகின் றன. அவை அறிக்கையிடப்படு கின்றன.

இவ்வாறான செயலொழுங்கு தான் நீண்ட காலமாக நடைபெறு கின்றது. விளைவுகள் கிடைக்க வில்லை என்பதை சமூகத்திலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் மாற்றம் நோக்கியதாக இலக்க மைக்கப்படும் இவ்வகையான தோற்றுப்போன செயலொழுங்கில் மட்டும் மாற்றமேயில்லை என்பது தொடர்பாகக் கவனம் செலுத்த முற்படும் ஒருவனுக்கு என்ன ஆறு தல் சொல்ல முடியும்?

(தொடரும்)

காதல் மழை

1
குளிர் நிலவு மோகத்தை கொழுத்துகிறது..
தேகம் சூடேறித் தவிக்கிறது...
கண்களின் வெப்பத்தில் காற்றும் சூடாகியிருக்கிறது..
அவள் நனைய மழை வேண்டும் என்கிறாள் ...
அன்பின் மழை.. ஆசை மழை. இசை மழை.
இனிக்கும் இன்ப முத்தமழை. எந்த மழை தணிக்கும்...
இந்த உயிர் உருக்கும் தாகம்.....

2
இரவு வர்ண கனவுகளை அள்ளி வருகிறது...
விடியும் வரை அவன் நினைவன்றி வேறில்லை ...
கற்பனையில் கூடிகலந்து கொண்டாடி....
மேனி சிலிர்த்து உயிர் கரைந்து.
மோகப்பெரு வெளியில்.
நீந்தும் பெண் நெஞ்சின் ஈரம் காயாத. நினைவலைகள்.
நிறைந்து தழும்பும் இசை
இரவு மயக்கத்தில் மீதக்கிறது....
இன்னும் விடிவதிற்கு இருப்பதோ சில மணித்துளிகள்...

3
நீண்டு எரியும் நிலவில் இருப்பாய்.
நினைத்து தவிக்கும் நிலையில் அலைவாய்..
ஓடும் மேகம் உலவும் தென்றல்
மாலை மலரும் பூக்கள் வெறுப்பாய்.
தூக்கம் மறப்பாய்..
துரத்தும் நினைவால் மனதில் ஏக்கம் நிறைப்பாய்
நீ அங்கே தவிப்பாய் நான் இங்கே நினைப்பேன்..

- அஞ்சு

இராவண சர்ச்சை...!

பொலிவூட் இயக்குநர் ஓம் ராவத்தின் இயக்கத்தில் பிர பாஸ் நடிக்கவுள்ள படம் 'ஆதிபுருஷ்'. இந்தப் படத் தின் படப்பிடிப்புப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின் றன. அதற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் விவகாரம் ஒன்றும் மும்மர மாகப் பேசப்பட்டு வருகிறது. இந்தப் படத்தில் பிரபாஸுக்கு வில்லனாக சைஃப் அலிகான் நடிக்கிறார். இது இராமாயணத்தைத் தழுவி எடுக்கப்படுவதாகத் தகவல் வெளியாகி ராமராக பிரபா ஸும் ராவணனாக சைஃப் அலி கானும் நடிக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு சைஃப் அலி கான் இந்தப் படம் குறித்துத் தெரிவித்தபோது, இந் தப் படம் ராவணனின் நல்ல பக்கத்தை காட்டும் என்றார். இந்த கருத்து சமூக வலைதளங்களில் சர்ச்சையை ஏற்படுத்தியது. சமூக வலைதளங்களில் கடும் விமர்சனங்கள் எழுந்த நிலையில் தனது கருத்துக்கு அவர் மன்னிப்பு கோரினார். ஆனால் வழக்கறிஞர் ஹிமான் ஸ்ரீவத்சவா என்பவர் சைஃப் அலி கான் மீது நீதிமன்றத் தில் வழக்குத் தொடர்ந்தார். சைஃப் அலி கான் இந்துக்களின் நம்பிக்கைக்கு எதிராக பேசியுள்ளதாகக் குறிப்பிட்டார். இந்த இராவண சர்ச்சை வழக்கு இப்போது விசாரணையில் இருக்கிறது....!

சிகப்பு வட்ட மர்மம்

முன்னுரை

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆங்கில எழுத்தாளர் சர் ஆர்தர் கானன் டாயில் என்று சொன்னால் மிகையாகாது. 1911ஆம் ஆண்டு "The Strand Magazine" என்னும் ஆங்கில இதழில் வெளியான அவரது ஒரு சிறுகதை இது. வாடகைக்கு விடப்பட்ட தன் வீட்டின் குத்தகைதாரர் பற்றிய ஒரு பெண்ணின் புகாரை ஹோல்ம்ஸ் விசாரிப்பது பற்றிய சிறு கதை.

சிறு கதை 1

"திருமதி வாரன், நீங்கள் கவலை கொள்வது போல் எதுவும் எனக்குத் தோன்றவில்லை. எனது காலம் பொன் போன்றது. அதை இதில் செல வழிக்க வேண்டிய அவசியம் என்ன என்று எனக்கு ஒன்றும் புரியவும் இல்லை. எனக்கு வேறு வேலை இருக்கிறது" என்று சொல்லிவிட்டு ஹோல்ம்ஸ் தனது பெரிய 'ஸ்கிரப் புக்' மீது கவனம் செலுத்த ஆரம்பித்தார். அதில் தான் சமீப காலமாகச் சேகரித்த துண்டுக் காகிதங்களை நேர்த்தியாக அடுக்கி வரிசைப்படுத்தி வைத்திருந்தார்.

ஆனால் நில உரிமையாளரான அந்தப் பெண்மணி மிக உறுதியாய் இருந்தாள். பெண்ணுக்கே உள்ள பிடிவாத குணத்தினாலும் அவள் அங்கிருந்து சிறிதும் நகரவில்லை.

"நீங்கள்தான் என் வீட்டில் குடியிருக்க ஒருவரை ஏற்பாடு செய்தீர்கள், திரு பேர்டேல் ஹாப்ஸ் அவரது பெயர்"

"ஆஹ், அது ஒரு சின்ன விஷயம்"

"ஆனால் அதை அவர் மறப்பதே இல்லை. அடிக்கடி நினைவூட்டிக் கொண்டே இருக்கிறார். நீங்கள் எப்படி இருட்டினுள் வெளிச்சத்தை ஏற்படுத்தினீர்கள் என்பதை அவ்வளவு சிலாகிக்கிறார். எனக்கே இருட்டில் இருக்கும்போது அந்த சந்தேகம் வரும்போதெல்லாம் அவர் சொன்னதுதான் ஞாபகம் வரும். நீங்களும் அதை அனுபவித்துப் பார்த்தால் தான் உங்களுக்குப் புரியும்"

ஹோல்ம்ஸ் புகழ்ச்சிக்கு மயங்குபவர். அதேபோல் அன்பொழுகப் பேசினாலும் அவரை எளிதாகக் கவர்ந்து விடலாம். அந்த இரண்டு விசைகளும் சேர்ந்து அவரை மெதுவாக அவரது இருக்கையில் வேறு வழியில்லாமல் அமர வைத்து விட்டன.

"அப்பச் சரி. என்ன நடந்தது என்று சொல்லுங்கள், கேட்போம். புகையிலைக்கு நீங்கள் தடை போட மாட்டீர்கள்தானே. நான் புகைப்பேன். நன்றி, வாட்சன் அந்த தீக்குச்சி! உங்களைப் பார்த்தால் கொஞ்சம் கலவரப்பட்டவர் போல்தான் தெரிகிறது. உங்களது வாடகைக்காரர் வீட்டிலேயே அடைபட்டிருப்பதால் உங்களால் அவரைச் சந்திக்க முடியவில்லை என்று நீங்கள் கவலைப்படுகிறீர்கள். நானும்கூட அப்படித்தான். தொடர்ச்சியாக வாரக் கணக்கில்கூட என்னைச் சில நேரம் பார்க்க முடியாது."

"சந்தேகமே இல்லை. அனால் இது சற்று வித்தியாசமாக இருக்கிறது. எனக்கு பயமாகவும் இருக்கிறது, ஹோல்ம்ஸ். பயத்தினால் எனக்கு உறக்கமும் வருவதில்லை. காலையில் இருந்து இரவு வெகு நேரம் வரை அவரது வேகமான காலடிச் சத்தங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறது. ஆனால் அவரை நேரில் பார்க்க முடியாதது எனக்கு மிகவும் கலக்கமாகவே இருக்கிறது. எனது கணவரும் என்னைப் போலவேதான் மிகவும் பயந்து போய் இருக்கிறார். ஆனால் அவர் பகலில் வேலைக்குப் போய் விடுகிறார். இந்த பயத்தினால் எனக்கு ஓய்வே கிடைப்பதில்லை. அவர் எதனால் ஒளிந்து கொண்டிருக்கிறார்? என்னதான் செய்து விட்டார்? நான் தனியாகத்தான் இருக்கிறேன். என்னால் இதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை"

ஹோல்ம்ஸ் தனது நீண்ட மெலிதான விரல்களை அந்தப் பெண்மணியின் தோளில் அழுத்தினார். கிட்டத்தட்ட ஒரு மனோதத்துவ முறையில் குணமாக்கும் சக்தி இருந்தது அவர் பேசும்போது. அந்தப் பெண்ணின் கண்களில் இருந்த பயம் நீங்கிவிட்டது. அவளது வெகுண்டிருந்த அவயங்கள் எல்லாம் கொஞ்சம் அமைதி அடைந்திருந்தன. அவர் சுட்டிக் காட்டிய ஆசனத்தில் அமர்ந்தாள்.

"நான் இந்த வழக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் எனக்கு அனைத்தும் தெரிந்தாக வேண்டும்." என்றார் அவர். "மெதுவாக யோசித்துச் சொல்லுங்கள். சின்ன விஷயம்தான் ரொம்பவும் முக்கியமானதாக இருக்கும். அவர் பத்து நாளைக்கு முன்வந்து பதினைந்து நாட்களுக்கான வாடகையை முன்பே கொடுத்து விட்டார் என்று சொல்லி இருந்தீர்கள்"

"அவர் என்னுடைய நிபந்தனைகள் என்னவென்று கேட்டார். நான் ஒரு வாரத்திற்கு 50 ஷில்லிங்குகள் என்று கூறினேன். வீட்டின் மேலே ஓர் அமரும் அறையும் படுக்கை அறையும் இருக்கின்றன...."

"நன்று!"

"தனது விதி முறைகளுக்கு ஒத்துக் கொண்டால் தான் ஒரு வாரத்திற்கு 50 பவுண்டுகள் தருவதாகச் சொன்னார். நான் ஒரு ஏழைப் பெண்மணி ஐயா. என் கணவருக்கும் சொற்ப சம்பளம்தான். அதனால் அந்தப் பணம் எனக்குப் பெரிதாகப்பட்டது. அங்கேயே ஒரு 10 பவுண்ட் தாளை எடுத்து நீட்டினார். இந்த நிபந்தனைகளுக்கு ஒத்துக்கொண்டால் இன்னும் நீண்ட காலத்திற்கு இதேபோல் கிடைத்துக் கொண்டே இருக்கும் என்றார். இல்லை என்றால் தான் கிளம்பிப் போய்க் கொண்டே இருப்பேன் என்றார்"

"நிபந்தனைகள் என்னென்ன?"

"அவருக்கு ஒரு சாவி கொடுத்துவிடவேண்டும். அது பரவாயில்லை. வாடைக்காரர்கள் எப்பவும் கேட்பதுதான். அவரைத் தனியாக விட்டுவிட வேண்டும். எப்பொழுதும் எந்த காரணத்திற்காகவும் அவரைத் தொந்திரவு செய்யக்கூடாது."

"நிச்சயம், அதில் எதுவும் வினோதமாக இல்லை"

"இல்லை, ஐயா. இதெல்லாம் எல்லாக் காரணங்களுக்கும் அப்பாற்பட்டது போல் தெரிகிறது. அவர் பத்து நாள்களாய் அங்கு இருக்கிறார். நானோ எனது கணவரோ பெண்ணோ ஒரு முறைகூட அவரைப் பார்க்கவே இல்லை. அவரது வேகமான காலடிச் சத்தம் மட்டுமே காலை மாலை இரவு என்று கேட்டுக் கொண்டே இருக்கிறது. வந்த முதல் நாளிரவைத் தவிர வேறெப் போதும் வெளியே செல்லவே இல்லை."

"ஆக முதல் நாளிரவு வெளியே சென்றார் இல்லையா?"

"ஆமாம், சென்றவர் வெகு நேரம் கழித்தே வீட்டிற்குள் நுழைந்தார். நாங்கள் அனைவரும் உறங்கிய பின். இதைப் பற்றி வீட்டிற்குக் குடிவந்த பின்னாடிதான் தான் அவ்வாறு செய்வேன் என்று சொன்னார். அதனால் கதவில் உட்புறம் சட்டமிட வேண்டாம் என்று கூறி இருந்தார். அவர் நள்ளிரவு தாண்டி மாடியில் ஏறுவதை நான் கேட்டேன்."

"அவருக்கு உணவு?"

"அவர் அறையில் இருந்து மணி அடித்த உடனே அறைக்கு வெளியில் இருக்கும் ஒரு ஆசனத்தில் வைத்துவிட வேண்டும், என்று குறிப்பிட்டுச் சொன்னார். அவர் முடித்தவுடன் திரும்பவும் மணி அடிப்பார். நாங்கள் வந்து அதே ஆசனத்தில் இருந்து எடுத்துக் கொள்வோம். அவருக்கு வேறு எதாவது தேவை இருந்தால், ஒரு சிறிய காகிதத்தில் அச்சுப்பதித்து வைத்து விடுவார்."

"அச்சுப் பதித்தா?"

"ஆமாம். பென்சிலால் காகிதத்தில் அச்சுப்பதித்து வைப்பார். ஒரே ஒரு வார்த்தை மட்டும். தேவைப்படும் பொருளைப் பற்றி. உங்களிடம் காண்பிக்க இதோ ஒன்று கொண்டு வந்திருக்கிறேன் சோப்பு என்று இருக்கிறது பாருங்கள். இதோ இன்னொன்று, தீப்பெட்டி என்று. இதுதான் முதல் நாள் காலையில் வைக்கப்பட்டது - தின கெசட். நான் தினமும் அந்த தினசரி செய்தித்தாளை அவரது காலை உணவுடன் சேர்த்தே வைத்து விடுவேன்"

"வாட்சன்...." என்று அழைத்தார் ஹோல்ம்ஸ். மிகவும் ஆர்வத்தோடு அந்தப் பெண்மணி கொடுத்த காகிதங்களைப் பார்த்துக் கொண்டே "இது நிச்சயம் கொஞ்சம் விநோதமாகத்தான் இருக்கிறது. தனிமைப்படுத்திக் கொள்வதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் ஏன் அச்சுப்பதிக்க வேண்டும். அது மிகவும் நேரமெடுக்கும் வேலை ஆச்சே. ஏன் எழுதிக் கொடுக்கக் கூடாது? இதன் காரணம் என்னவாக இருக்கும், வாட்சன்?"

"அவர் தனது கையெழுத்தை மறைக்க முயற்சி செய்திருக்கலாம்"

"ஆனால், ஏன்? தனது வீட்டின் உரிமையாளரிடம் தனது கையெழுத்தை மறைக்க வேண்டிய அவசியம் என்ன? அது, நீங்கள் சொல்வது போல் இருந்தாலும், ஏன் ஓரிரு சொற்கள். அதன் காரணம் என்ன, வாட்சன்?"

"என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை"

"அறிவார்த்தமான பேச்சுக்கு ஒரு இனிமையான அடித்தளம் போட்டுக் கொடுத்திருக்கிறது. இந்த வார்த்தைகள் ஒரு அகலமான நுனி கொண்ட வயலட் நிற பென்சிலால் எழுதப்பட்டிருக்கிறது. எழுதி முடித்த பின் இங்கே முனையில் ஒரு பகுதி கிழிக்கப்பட்டிருக்கிறது. முதல் எழுத்தின் ஒரு சிறு பகுதியும் அதனோடு சென்றுவிட்டது. இது எதோ சொல்வது போல் இருக்கிறது அல்லவா, வாட்சன்"

"கவனமாய் இருப்பதை"

"மிகவும் சரியானது. அந்த மனி தனின் அடையாளம் அறிவிப்பது போல் எதோ ஒரு தடயம் ஒரு கை விரல் ரேகை எதாவது இருந்திருக்க லாம். திருமதி வாரன், நீங்கள் அந்த மனிதன் நடுத்தரமாக இருந்தார் என்று சொன்னீர்கள், மாநிறமாய், தாடி வைத்துக் கொண்டு. என்ன வயதிருக்கும்?"

"இள வயது, முப்பதைத் தாண் டாது"

"வேறு எதுவும் குறிப்புகள் இருக் கின்றனவா?"

"அவர் நன்றாக ஆங்கிலம் பேசி னார். ஆனால் அவரது உச்சரிப்பில் இருந்து அவர் வெளி நாட்டில் இருந்து வந்திருக்கலாம் என்று தோன்று கிறது."

"அவர் நல்ல உடை அணிந்திருந் தார், அல்லவா"

"ஆம், ஒரு நன்மகனைப் போன்று அருமையான உடை உடுத்தி இருந் தார். கருப்பான உடைகள். வெளியில் எதுவும் தெரியாது"

"அவர் பெயர் எதுவும் சொல்ல வில்லையா?"

"இல்லை ஐயா!"

"இதுவரை அவருக்கு எதுவும் தொலைபேசி அழைப்புகள், தபால் கள் வந்ததா?"

"இல்லை"

"நீங்களோ உங்கள் பெண்ணோ காலையில் அவரது அறைக்குச் செல்வ தில்லையா?"

"இல்லை. அனைத்தையும் அவரே செய்து கொள்வார்"

"மிகவும் அருமையான விஷயம். அவரது பெட்டிகள் எல்லாம்?"

"அவரிடம் ஒரே ஒரு பெரிய பழுப்பு நிறத்தில் பை இருந்தது. வேறெதுவும் இல்லை."

"நமக்குத் தேவையான விவரங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த அறையில் இருந்து வேறெது வும் வந்ததாகத் தோன்றவில்லையா? ஒன்று கூடவா இல்லை?"

அந்தப் பெண்மணி தனது பையில் இருந்து கடித உறை ஒன்றை வெளியே எடுத்தாள். அதில் இருந்து எரிந்த தீக்குச்சிகள் இரண்டும் ஒரு சிகரட் துண்டும் எடுத்து மேசை மீது வைத் தாள்.

"இன்று காலையில் அவரது தட்டில் இவைகள் இருந்தன. நீங்கள் சிறிய பொருளில் இருந்து கூட பெரிய விஷ யங்களைக் கறக்க வல்லவர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அத னால் தான் இவற்றைக் கொண்டு வந் தேன்"

ஹோம்ஸ் தன் தோள்களைக் குலுக்கி னார்.

"இதில் ஒன்றும் இல்லை" என்றார் அவர். "தீக்குச்சிகள் சிகரெட்டைப் பற்ற வைக்கப் பயன்பட்டிருக்கின்றன. அதன் எரிந்த நுனி சிறிதாக இருப்ப திலேயே அது நன்றாகப் புலப்படு கிறது. ஒரு சுருட்டோ பைப்போ பற்ற வைக்க அரை தீக்குச்சி செலவாகும். ஆனால் இந்த சிகரட் துண்டு விநோத மாய் இருக்கிறது. அவருக்கு மீசை யும் தாடியும் இருந்தது என்று சொன் னீர்கள் அல்லவா?"

"ஆமாம், ஐயா"

"அதுதான் எனக்குப் புரியவில்லை. இதை வைத்துப் பார்க்கும்போது தாடியும் மீசையும் இல்லாதவர்தான் இதைப் புகைத்திருக்க முடியும். ஏன், வாட்சன், உங்களைப் போன்ற சிறு மீசை உள்ளவர்களைக்கூட அது சுட்டு விடுமல்லவா."

"ஒரு பிடிப்பான்?"

"இல்லை, இல்லை. முனை மழுங்கி இருக்கிறது. திருமதி வாரன், அவரது அறையில் இரண்டு பேர் இருக்க வாய்ப்பில்லையா?"

"இல்லை, ஐயா. அவர் மிகவும் குறைவாகவே சாப்பிடுவார். அதைச் சாப்பிட்டு எப்படித்தான் உயிர் வாழ்கி றாரோ என்று கூட நான் எண்ணி யதுண்டு"

"நன்று. இன்னும் சில விவரங்கள் வரும் வரை நாம் காத்திருப்பதுதான் சிறந்தது. உங்களைப் பொறுத்தவரை எந்த பிரச்சினையும் இல்லை. உங்க ளது வாடகை வந்து விட்டது. அவரோ தொந்திரவு செய்யும் ஆளும் இல்லை. கொஞ்சம் விநோதமானவர் என்று நிச்சயம் சொல்லலாம். அவர் நன்றா கப் பணம் செலுத்தி விடுகிறார். அவர் தன்னைக் காட்டிக் கொள்ளக்கூடா தென்று நினைக்கிறார். அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. அவரது அந் தரங்கத்தில் நாம் மூக்கை நுழைக்க முடியாது, அவரால் எதாவது பிரச் சினை என்று வரும் வரை. நான் இந்த வழக்கை எடுத்துக் கொண்டு விட் டேன். அது என் கண்களில் இருந்து தப்ப முடியாது. வேறு எதாவது புதி தாய் நடந்தால் உடனடியாக எனக்குத் தெரிவியுங்கள். என் உதவி தேவைப் பட்டால் நிச்சயம் நான் செய்வேன்"

"இந்த வழக்கில் ஒரு சில ஆர்வ மூட்டுகிற செய்திகள் இருக்கின்றன, வாட்சன்." என்று அந்தப் பெண்மணி கிளம்பியதும் சொல்ல ஆரம்பித்தார். "அவை நிச்சயம் அற்பமானதாக இருக்கலாம் - ஒருவனின் பைத்தியக் காரத்தனம். இல்லையேல் வெளியில் தெரிவதைவிட ஆழமானதாகவும் இருக்கலாம். முதன்முதலாய் அப் பட்டமாய்த் தெரிவது என்னவென் றால், வீட்டில் இப்பொழுது இருக்கும் மனிதன் அவர்களை ஏற்கெனவே சந்தித்த மனிதனாய் இருக்க வாய்ப் பில்லை."

"ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?"

"இந்த சிகரட் முனையைத் தவிர்த்து, அறை எடுத்தவுடனேயே அவன் ஒரே ஒரு முறை மட்டுமே வெளியே சென்றிருக்கிறான். அவன் மீண்டும் வந்தான் - அல்லது வேறு யாரோ வந்திருக்கிறார்கள். எல்லோரும் உறங் கிய பின். வெளியே சென்றவன்தான் உள்ளே வந்தான் என்பதற்கு நமக்கு எந்தவித சாட்சியும் இல்லை. இருந் தும், அறை எடுத்தவன் நன்றாக ஆங் கிலம் பேசக் கூடியவன். ஆனால், இன்னொருவன், தீக்குச்சிகள் என்றி ருக்க வேண்டிய இடத்தில் தீக்குச்சி என்று அச்சிட்டிருக்கிறான். அந்த வார்த்தையும் ஒரு அகராதியில் இருந்து எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அது பெயர்ச் சொல்லைக் கொடுத் திருக்கும். பன்மையைக் கொடுத்திருக் காது. சுருக்கமாக எழுதியது தனது ஆங்கில அறிவின்மையை மறைக்க. தங்கி இருப்பவர்கள் இடம்மாற் றிக்கொள்ள."

"ஆனால் என்ன காரணத்திற்காக?"

"ஆஹ்! அதுதான் நமது பிரச் சினை. புலனாய்வு செய்ய எனக்குத் தெரிந்து ஒரு எளிதான வழி இருக் கிறது." லண்டனில் வெளியாகும் பத்திரிகைகளில் இருந்து தினமும் தான் சேகரித்த வாசகர்களின் சொந்த பிரச்சினைக்குத் தீர்வு சொல்லும் ஆசி ரியர்களின் அறிவுரைகள் கொண்ட பிரமாண்டமான தொகுப்பைக் கைக ளில் எடுத்தார். "எவ்வளவு கூக்குரல் கள், சலுகைகள், முனகல்கள், உள றல்கள். எவ்வளவு தனிமையான குப் பைப் பை நிரம்பும் அளவு நிகழ்வு கள்.

அசாதாரணமான நிகழ்வுகள் பற் றிப் படிக்கும் ஒரு மாணவனுக்கு நிச்சயம், இது ஒரு விலைமதிப்பற்ற வேட்டைக்களம். அவன் தனியாளாய் இருக்கிறான். அவனைக் கடிதத்திலும் ஒரு முழுமையான மர்மத்தை உடைக் காமல் அணுக முடியாது. வேறு எப் படித்தான் செய்திகளும் தகவல்களும் அவனை அடைய முடியும் எதுவுமே இல்லாமல். ஒரே ஒரு வழிதான். அது, செய்தித்தாள்களின் விளம்பரம். வேறெந்த வழியும் இல்லை. நல்ல வேளையாக நாம் கவனிக்க வேண்டி யது ஒரே ஒரு நாளிதழ் மட்டுமே.

(கதை தொடரும்)

கொரோனாவும் வியாபாரமும்...!

● நியாக்குட்டி

கொவிட் 19 எனப்படுகின்ற கொரோனாத் தொற்றே இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் பேசுபொருள். அந்தளவுக்கு அனைத்து விடயங்களிலும் ஆதிக்கம் செலுத்தி நிற்கிறது அது. புதிய ஒழுங்கு ஒன்றை வாழ்க்கை முறையில் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. அந்தப் புதிய ஒழுங்கைக் கடைப்பிடிக்கு மாறும் அந்த ஒழுங்கின்படி ஒழுக வேண்டும் என்றும் புத்திஜீவிகள் கோருகின்றனர். இல்லையேல் வாழ்க்கையை - உயிரை இழக்க வேண்டி ஏற்படும் என்று எச்சரிக்கிறார்கள்.

அத்தோடு இந்தப் புதிய ஒழுங்கைக் கடைப்பிடிக்காதவர்களால் ஏனையவர்களுக்கும் ஆபத்து என்கின்றனர். இவ்வாறிருக்கக் கொரோ னாத் தொற்று அறிமுகப்பட்ட காலத்தில் முடங்கிக் கிடந்த மனித நட வடிக்கைகள் இப்போது மெல்ல மெல்ல மீள் எழத்தொடங்கியிருக்கின்றன. சுருங்கச் சொன்னால், "குளிர்விட்டுப்போச்சுது" என்கிற சொல்லாட லைப்போலாகி வருகிறது பெருந்தொற்றுக்கு மத்தியிலான மனித வாழ்க்கை.

கொரோனா ஆதாயங்கள்

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் வாழ்வதற்குப் பல புதிய ஒழுங்கு களைப் பரிந்துரைக்க மறுபுறத்தில் வர்த்தகத் தரப்பினரும் தமக்கெனப் பல புதிய ஒழுங்குகளைக் கடைப்பிடித்துத் தமது வியாபாரத்தில் ஆதாயம் தேடிவருகின்றனர்.

முகக் கவசங்கள் தொடங்கிக் கைகளைக் கழுவுவதற்குப் பயன் படுத்துகின்ற சவர்க்காரங்கள் வரையில் அவர்களது இந்தப் புதிய உத்தி களை விளம்பரப்படுத்தி ஆதாயம் தேடுகிறார்கள். முகக் கவசங்களின் வகைகளை, தரங்களை, மருத்துவகுணங்கள் சேர்க்கப்பட்டதான சிறப்பியல்புகளை எடுத்துக்கூறி விற்கின்றனர்.

99.9சதவீதம் கொரோனா வைரஸைக் கொல்லும் திறனுள்ளது என்று கூறிக் கிருமி நீக்கிச் சவர்க்காரங்கள், திரவ சவர்க்காரங்கள், கைகழு வும் திரவங்கள், தரையைச் சுத்தம் செய்கின்ற திரவ வகைகள், மலசல கூடத்தைச் சுத்தம் செய்கின்ற கிருமிநீக்கிகள் எனப் பலதையும் கொரோ னாவுக்கு எதிராகப் போரிடக்கூடியது என்றும் கொரோனாவுக்கு எதிராக 99.9சதவீதம் செயற்படக்கூடியது என்றும் விளம்பரப்படுத்தி விற்றுத் தீர்க்கிறார்கள்.

வீட்டுக்கு வரும் பொருள்

பொருந்தொற்றுக் கால முடக்கத்துடன் ஆரம்பமாகிய புதிய வர்த்தக உத்திகளில் ஒன்று வீட்டுக்கே பொருள்களைக் கொண்டுவந்து தரு கின்ற வியாபாரம். பண மும் இணைய வசதியும் உள்ளவர்கள் ஓடர் செய்கின்ற பொருள்க ளுக்கு உயர்தர விலையை அறவிட்டு அந்தப் பொருள்களை அவர்களின் வீடு வரை கொண்டு சென்று கொடுப்பதற்கு "டெலி வெரி சார்ஜ்" என்கிற வழங்கல் கட்டணமும் அறவிட்டு உழைக் கின்ற முறை முன்னேற் றம் கண்டது. அது பின் னர் பல ரூபங்களில் தொடரவும் செய்தது.

வீட்டுக்குக் கொண்டுசென்று கொடுக்கப்படுகின்ற இந்தப் பாரம்பரி யத்தில் உணவுப் பண்டங்களே (பீட்ஸா போன்றன) முக்கியம் பெற்றா லும் பின்னர் அத்தியாவசியப் பொருள்களில் இருந்து ஆடம்பரப் பொருள்கள் வரையில் இந்தப் புதிய ஒழுங்கு வர்த்தகத்துக்குள் மூக்கை நுழைத்தன. அதிலும் ஒருபடி மேலேபோன இந்த வர்த்தக அணியின ரின் தந்திர உத்திகளில் ஒன்றாக வீட்டுக்கே சென்று தீந்தை பூசிக்கொடுக் கின்ற தொழிலையும் குறிப்பிடலாம்.

விரும்பிய வர்ணங்களையும், டிசைன்ஸ்கள் எனப்படுகின்ற வடிவ மைப்புகளையும் வீட்டுக்குள் இருந்தவாறே தெரிவு செய்து வர்ணப் பூச்சாளர்களுக்குக் காட்டுமிடத்தில் முகக்கவசங்கள், கையுறைகள், மற்றும் உடலைமூடிய பாதுகாப்பு ஆடைகளை அணிந்து, உடல் வெப்பநிலையைப் பரிசோதித்து வீட்டுக்காரர்களுக்குப் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்குத் திருப்தியை அளித்து எவ்வித இடையூறுகளும் இன்றித் தீந்தை பூசிக் கொடுக்கப்படுகிறது. தென்னிந்தியத் தொலைக் காட்சிகளில் இந்தப் புதிய வர்த்தகத்தைப் பலரையும் ஈர்க்கும் விதத் தில் விளம்பரப்படுத்தவும் தொடங்கியிருக்கிறார்கள். அத்தோடு அந்தத்

(17ஆம் பக்கம் பார்க்க)

ஜனாஸா எரிப்பு...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

துணியால் சுற்றிக்கட்டுவார்கள். அந்தத் துணிக்குப் பெயரே கபன் துணி. அதன் குறியீடாகவே வெள்ளைத் துணியை வீதியோரங்களில் கட்டும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. பொரளையில் தொடங்கப்பட்ட இந்தப் போராட்டம் கண்டி, திருகோணமலை என்று பரவி வருகின்றது.

அதேநேரம் முஸ்லிம்களின் இதயம் என வர்ணிக்கப்படும் அம்பாறை மாவட்டத்தில் இருந்து எந்தவித எதிர்ப்பும் கொரோனாவால் இறப்பவர்களின் ஜனாஸாக்களை மாலைதீவில் அடக்கம் செய்வதற்கு இடம்தருமாறு அதிபர் கோட்டாபய ராஜபக்ச கேட்டுள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், ஜனாஸாக்களை மாலைதீவுக்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்வதற்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ராவூப் கக்கீம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரக்மான் ஆகியோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

வாக்களித்து ஏமாற்றிவிட்டனர்!

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் இறந்ததாகக் கூறி இருபது நாள்களேயான பச்சிளம் குழந்தையை எரித்தமைக்கு பலத்த கண்டனம் தெரிவித்தும், அதே கொரோனாவினால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதை நிறுத்தக் கோரியும் அம்பாறை மாவட்டத்தின் முக்கிய முஸ்லிம் பிரதேசமான நிந்தவூரில் வியாழக்கிழமை போர்க் கொடி தூக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேச சபையின் முஸ்லிம், தமிழ் உறுப்பினர்கள் 'கபன் சீலை' கட்டி (வெள்ளைத் துணி) இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர். 2021 பாதீட்டை அங்கீகரிப்பதற்கான சபை அமர்வு தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் தலைமையில் தொடங்குவதற்கு முன்னதாக உறுப்பினர்கள் அனைவரும் கபன் துணிகளைக் கைகளில் ஏந்தியும், எரிக்கப்பட்ட குழந்தையின் மாதிரி பொம்மையைத் தாங்கியும் பிரதேச சபை வளாகத்தில் ஊர்வலமாகச் சுற்றி வந்தனர்.

தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் பிரதி தவிசாளர் வை.எல்.சுலைமாலெவ்வை மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கட்சி பேதமின்றித் திரண்டு பிரதேச சபை நுழைவாயில் கதவில் கபன் துணிகளைக் கட்டினர்.

சபை அமர்வின்போது தொடக்கத்தில் கொரோனாவெனக் கூறி எரிக்கப்பட்ட 20 நாளேயான குழந்தைக்காகவும், இது வரை கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உயிரிழந்து எரிக்கப்பட்ட முஸ்லிம்களுக்காகவும் இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.ரி.எம். சப்றாஸ் சபை அமர்வில் உரையாற்றுகையில் தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை ஆதரித்து வாக்களித்தமையைக் கடுமையாக விமர்சித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு எமது நேசக்கரம் நீட்டுவதற்காகவே 20ஆவது திருத்தத்தை ஆதரித்தனர். நாட்டின் அதிபர் மற்றும் அவரது அண்ணன், தம்பிகள் இதற்காக பல வாக்குறுதிகளை எமக்கு வழங்கினர். ஜனாஸா எரிப்பு விவகாரமும் இதில் ஒன்றுதான். ஆனால், இன்று நாம் (முஸ்லிம் காங்கிரஸினர்) கை சேதப்பட்டவர்களாக, ஏமாந்தவர்களாகவுள்ளோம். அடிப்படை உரிமையைப் பெறவே இன்று அல்லல்படுகின்றோம்.

இந்நிலையில் தமிழ் மக்கள் மற்றும் தமிழ் அரசியல் தலைமைகள் ஜனாஸா எரிப்பு விடயத்தில் முஸ்லிம்களுக்கு நியாயத்தைப் பெற்றுத்தரக் குரல் கொடுத்து வருவது ஆறுதலளிப்பதாகவுள்ளது.

முஸ்லிம் தலைமைத்துவங்கள் நமது உணர்வுகளை வெளிப் படுத்தி நியாயம் பெற ஒரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் - என்று அவர் தனது உரையில் தெரிவித்தார்.

கிளம்பவில்லை என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டியது. அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்களின் சம்மேளனம், மாவட்ட உலாமா சபை, தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் மற்றும் பல முஸ்லிம் அமைப்புக்கள் இருந்தும் எந்தவொரு போராட்டமும் அம்பாறையில் இந்தக் கட்டுரை எழுதப்படும் வரை நடக்கவில்லை.

அரசின் கவனம்

இதேவேளை, ஜனாஸா எரிப்புக்கு எதிரான முஸ்லிம்களினதும் மற்றையவர்களதும் கண்டனங்களைத் தொடர்ந்து அரசு இந்தப் பிரச்சினையைத் தணிப்பதற்கு முயற்சிக்கத் தொடங்கியிருக்கின்றது.

ஓட்டமாவடி, நிந்தவூர், சம்பாந்துறை, மன்னார் போன்ற பிரதேசங்களில்

இதைத் தொடர்ந்து ஜனாஸா எரிப்பு விடயம் தொடர்பாக அமைச்சரவையில் எதுவும் பேசப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். "மருத்துவ அறிஞர்களின் முடிவே இது விடயத்தில் அரசின் முடிவு" என்றார் அவர்.

மருத்துவ அறிவாளிகளின் முடிவு இலங்கையில் எப்படி அமையும் என்பது தெரிந்ததுதானே என்கிறார்கள் முஸ்லிம்கள். அடுத்த வருடம் பங்குனி மாதத்தில் மாகாண சபைகளுக்குத் தேர்தல்களை நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்த விவகாரம் தேர்தல் களத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

கொரோனாவும்....

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீந்தைகளில் பக்ரீரியாக்கள் மற்றும் வைரஸ்களை எதிர்க்கும் திறனுள்ளது என்றும் சுவர்களில் அவை படிவதையோ, வாழ்வதையோ இதன்மூலம் தடுக்க முடியும் என்று விளம்பரப்படுத்துகிறார்கள்.

உணவுப்பொருள்களின் விலை உயர்வு

பெருந்தொற்று ஆரம்பித்த கையோடு அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருள்களுக்கு உள்ளூரில் பலரும் வரிசை கட்டத்தொடங்கியதும் அவற்றின் விலையும் ஏறிக்கொண்டேயிருக்கிறது. அரசு அடிக்கடி கட்டுப்பாட்டு விலைகளை விதித்தாலும் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் அது கடைப்பிடிக்கப்படுவதாக இல்லை. வர்த்தமானி வந்தாலும் விலை விலையாகத்தான் இருக்கிறது.

தொற்றுக்குப் பின்பான காலத்தில் ஏதோவொருவிதத்தில் அனைத்து அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் ஏறியிருக்கின்றனவே தவிர இறங்கவில்லை. வர்த்தக நிலையங்களைப் போலவே எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எம்மவர்கள் குவிந்தார்கள். ஆனாலும் எரிபொருள் விலை அதிகரிக்காமல் இருப்பது இப்போது வரைக்கும் நிம்மதியளிக்கும் விடயமே.

புதிய ஒழுங்கின் பக்கவிளைவுகள்...?

கொரோனாவுக்கு மத்தியிலான ஒழுங்கில் முதன்மையானது கைகளுக்கு அடிக்கடி சவர்க்காரமிட்டுக் கழுவுதல். அதுவும் 20 விநாடிகள் வரையில் கழுவுதல். இவ்வாறு அடிக்கடி சவர்க்காரமிட்டுக் கழுவுவதால் ஏற்படுகின்ற ஒவ்வாமை, தோல் அழற்சி போன்ற வியாதிகள்போக வைரஸ் தாக்கத்திலிருந்து தப்பித்தாலும் கிருமி நீக்கிகளின் அதிகரித்த பாவனையால் உண்டாகின்ற விளைவுகளில் இருந்து தப்பிக்கவும் மனிதர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

கைகள் தவிர தரைகள், மடிக்கணினிகள், கைபேசிகள், தொடுதிரைகள், கதவு கைபிடிகள், கைவிரல் அடையாளமிடும் கருவிகள், பேனா, பென்சில் போன்ற எழுதுகருவிகள், வாசிக்கின்ற பத்திரிகைகள் - புத்தகங்கள் எனப் பலதுக்கும் கூடக் கிருமி நீக்கிகளை விசிறி வைரஸிலிருந்து பாதுகாப்புப் பெறுமாறு விளம்பரப்படுத்துகிறார்கள்.

இவை அனைத்தினதும் முடிவு, நீர் நிலைகள், உணவுகள் என மனிதர்களின் வயிறு வரை செல்வதாக நிச்சயம் இருக்கவே செய்யும். பாத்திரங்களைக் கழுவுகின்ற சவர்க்காரங்களால் ஏற்படுகின்ற விளைவுகள்போக இப்போது இந்தப் புதிய வர்த்தக ஒழுங்கால் பலவித பாதிப்புகள் வராது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

வைரஸிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு மக்கள் புதிய ஒழுங்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கிறார்களோ இல்லையோ வர்த்தகத் தரப்பினர் நன்றாகவே வெவ்வேறு விதமான புதிய வர்த்தக - விற்பனை உத்திகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்பது மாத்திரம் உண்மை. அதில் அவர்கள் வெற்றி பெற்றும் வருகிறார்கள்.

பாணி....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொற்றிற்கான உள்நாட்டு தீர்வை அறிவியல் மற்றும் மருத்துவ ரீதியாக ஆராய்ந்து அதன் திறனை உள்நாட்டில் இயங்கும் மருந்து கட் டுப்பாட்டு அலகுகளே இன்னும் அங்கீகரிக்கவில்லை. ஆனால், தம்மிக்க பண்டாரவோ அதனை வைத்து விலாசம் தேடும் முயற்சியில் சற்றும் தளைக்கவில்லை.

கொரோனாவிற்கான ஆதாரமற்ற கேகாலைப் பாணியை முறையற்ற ரீதியில் புகழ்வது போன்றே, இலங்கையின் இனங்களிற்கிடையிலான பிணக்கிற்கான தீர்விற்கும் அரசு உள்நாட்டில் தயாரித்து அளிக்கப்படக்கூடிய தீர்வினை பற்றியே தொடர்ந்து பேசுகிறது. அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்க வல்லது என்பதற்கோ அல்லது பாதிப்பை ஏற்படுத்திய தரப்புகளிற்கு தண்டனையைப் பெற்றுக்கொடுக்கும் என்பதற்கோ எந்தவித உறுதிப்பாட்டையும் இதுவரை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

உருவாகி மறையும் ஆணைக் குழுக்களும் அவற்றின் அறிக்கைகளும் இதற்கு நல்ல சான்றாதாரம். அத்தோடு, மாறிவரும் புறச்சூழல் தீர்விற்கான நம்பகத்தன்மையை மேலும் கேள்விக்குறியாக்கியுமிருக்கிறது.

தம்மிக்க பண்டாரவின் கொரோனாப் பாணி இனிப்பாகவிருக்கிறதா, கசப்பாக இருக்கிறதா என்பதெல்லாம் வேண்டாம், அதை எவர் எவர் ருசி பார்த்தார் என்பது கூட வேண்டாம், அது நோயைக் குணப்படுத்துகிறதா இல்லையா என்பதே முக்கியம். தீர்விலும் அதுவே தேவை.

● ரி.பி.அன்ரன்

புடம்போட்ட தீ

"ஒடுக்கப்பட்ட மக்களின் நீதி செத்துப் போனதால் நீதிமன்றமே தீப்பிடித்துக் கொண்டது போன்ற தொணியை அதில் காண முடிந்தது."

கடந்த வாரம் கொழும்பு கல்வ்ஸ்ட் ரொப்பில் அமைந்துள்ள உயர் நீதி மன்றக் கட்டடம் திடீரெனத் தீப்பற்றி எரிந்தமை சமூக ஊடகங்களில் கவலைக்குரிய தாக மட்டுமன்றி அதிகம் கேலிக்குரியதாகவும் மாறியிருந்தது.

மார்கழி 15ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை திடீரென உயர் நீதிமன்ற வளாகம் அமைந்திருக்கும் கட்டடத்திலிருந்து பெரும் புகை வெளிவரத் தொடங்கியது. பதறியடித்துக் கொண்டு காவல்துறையினரும் தீயணைப்புப் படையினரும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர். 4.45 மணியளவில் தீ பரவத் தொடங்கியது. சுமார் ஒரு மணி நேரத்திற்குள் அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

தீ பற்றிய செய்தி அறிந்ததும் சட்டமா அதிபர் டபுள்ள டி லிவேராவும் அந்த இடத்திற்கு விரைந்து வந்து நிலமைகளை நேரில் பார்வையிட்டார். கட்டடத்தின் தரைத் தளத்திலேயே தீப்பிடித்திருந்தது. ஆனால் இந்த விபத்தில் நீதிமன்றக் கோவைகளோ, வழக்கு ஆவணங்களோ எதுவும் பாதிக்கப்படவில்லை என்று ஆட்சியாளர்கள் அறிவித்தனர்.

அரச தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் நீதிமன்றத்தின் தேவையற்ற பொருட்கள் மற்றும் அழிக்கப்படவேண்டியவைகள் வைக்கப்பட்டிருந்த அறையிலேயே தீப் பிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நீதி அமைச்சின் செயலாளர் மாயதுன்னே வெளியிட்ட அறிக்கையில் "இன்று மாலை 4.45 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் தேவையற்ற பொருள்கள் வைக்கப்பட்டிருந்த பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. ஆனால் அது நீதிமன்ற அலுவலகம் எதனையுமோ நீதிமன்ற ஆவணங்கள், கோவைகள் எவற்றையுமோ பாதிக்கவில்லை" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தீ பிடித்தமைக்கான காரணம் என்ன என்பதை அறிய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளைத் தொடங்கியிருக்கிறார்கள் என்று காவல் துறைப் பேச்சாளர் பிரதிக் காவல் மா அதிபர் அஜித் ரோகன தெரிவித்தார். காவல் துறையின் தடயவியல் ஆய்வு அலுவலர்களின் உதவியும் அரச பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகளின் உதவியும்கூட விசாரணைகளுக்காகப் பெறப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை உயர் நீதிமன்றக் கட்டடம் 1989 ஆம் ஆண்டு சீனாவின் நிதி உதவியுடன் கட்டப்பட்டது. 25 ஆண்டுகளுக்குப் பின்னர் 2015ஆம் ஆண்டு மீண்டும் சீன நிறுவனம் ஒன்றால் புதுப்பிக்கப்பட்டது, அரசின் வேண்டுகைக்கு அமைய.

2015ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டபோது கட்டடத்தின் கூரைப் பகுதி, மாநாட்டு மண்டபப் பகுதி ஆகியனவே அதிக கவனத்திற்குரியனவாக இருந்தன. உட்கூரைப் (லெவல் ஷீட்) பகுதி மற்றும் விருந்தினர் பகுதி ஆகியவற்றில் புதிதாகத் தளபாடங்கள் மாற்றப்பட்டன. கட்டடத்தின் தீயணைப்புப் பொறிமுறை மற்றும் மற்றும் மின்உயர்த்திகள் மீதும் புதுப்பித்தலின்போது தனிக் கவனம் செலுத்தப்பட்டது.

கட்டடத்தில் பரவிய தீ, பாவனைக்குதவாத பொருட்கள் போடப்பட்டிருந்த அறையில் இருந்தே மூண்டது என்பதை உறுதிப் படுத்திய கொழும்பு மாநகர சபை தீயணைப்புப் படைத் தலைமை அதிகாரி பி.டி.கே.ஏ.வில்சன், ஆனால் தீப் பற்றியமைக்கான காரணத்தை உடனடியாகக் கண்டறிய முடியவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

அந்த அறைகளில் குவிக்கப்பட்டிருந்த நெகிழிப் (பிளாஸ்டிக்) பொருட்கள் தீப்பற்றிக்கொண்டு எரிந்ததாலேயே அடர்த்தியான கரும் புகை மண்டலம் தீவிரமாகப் பரவியது என்றும் அவர் தெரிவித்தார். இந்தப் புகை மண்டலம் கீழிலிருந்து வேகமாகப் பரவி கட்டடத்தைச் சூழ்ந்துகொண்டு மேல் நோக்கி எழுந்ததால் முழுக் கட்டடமும் தீப் பற்றி பெரியளவில் பாதிப்பு ஏற்பட்டு விட்டதோ என்கிற சந்தேகம் பலருக்கும் ஏற் பட்டதாகக் குறிப்பிட்ட வில்சன், ஆனால் அத்தகைய சேதங்கள் ஏற்படுவதற்கு முன்னதாகவே தமது தீயணைப்புப் படையைச் சேர்ந்த 20 வீரர்கள் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டனர் என்றும் தெரிவித்தார்.

"40 நிமிடங்களுக்குள்ளேயே எல்லா வற்றையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டோம்" என்றார் அவர்.

நீதிமன்றத்தில் தீ பரவுவதான ஒளிப்படங்கள் இணைய வெளியில் பரவத் தொடங்கியதுமே சமூக வலைதத் தளங்களில் அதனோடு இணைந்து பல கேலியும் கிண்டலும் கிளம்பத் தொடங்கிவிட்டன. அவை, எள்ளி நகையாடும் பாணியில் இருந்தாலும் இலங்கையின் நீதித்துறை மீதான கருத்துக்களாகவும், ஆட்சியாளர்கள் மீதான விமர்சனங்களாகவும் தீவிரமாக இருந்தன.

குறிப்பாக, தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் இருந்த வந்த கருத்துக்களில் பலவும் இலங்கையின் நீதி பெரும்பான்மையினருக்குச் சார்பானதாகவே எப்போதும் இருந்திருக்கிறது என்பதை வெளிப்படுத்துவதாக இருந்தது. ஒடுக்கப்பட்ட மக்களின் நீதி செத்துப் போனதால் நீதிமன்றமே தீப் பிடித்துக் கொண்டது போன்ற தொணியை அதில் காண முடிந்தது.

தற்போது அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியாளர்கள் தமக்குத் தேவையான நீதியை நீதிமன்றக் கட்டமைப்பின் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்காக நடந்த சதிச் செயல் இது என்கிற சந்தேகம் கூடப் பலருக்கும் இருந்ததை அவர்களின் கருத்துக்களில் இருந்து அறிய முடிந்தது.

இலங்கை நீதித்துறையின் மீது இதுபோன்ற விமர்சனங்கள் அரசியல் ரீதியாக மிக நீண்டகாலமாகவே இருந்து வருகின்றன. எனினும் அதுவே மக்களின் ஆழ் மனங்களிலும் பிரதிபலிப்பதை உயர் நீதிமன்றத் தீ விபத்து பளிச்சிட வைத்திருக்கிறது. நீதித் துறை தன் செயற்பாட்டை திரும்பிப் பார்த்து மீளாய்வு செய்வதற்கான காலம் இது.

ஆழமாகின்றதா விரிசல்?

● ஆதன்

2015ஆம் ஆண்டு பரபரப்பான ஒரு சூழலில் ராஜபக்சக்களின் அணியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவைப் பிரித்தெடுத்து மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக அவரை அதிபர் தேர்தலில் நிறுத்தி ஒரு வெற்றியை ரணில் - சந்திரிகா - சம்பந்தன் கூட்டு பெற்றபோது அதன் பின்னால் நின்றது அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளும் இந்தியாவும் என்று நம்பப்பட்டது. புவிசார் அரசியலில் ராஜபக்சக்கள் சீனாவின் பக்கம் அதிகம் சாய்ந்ததால் மேற்குலகிற்கு இந்த ஆட்சி மாற்றம் அவசியப்பட்டது என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்துக்கூறினார்கள்.

அந்தச் சமயத்தில் ரணில் - மைத்திரி கூட்டும் சீன எதிர்ப்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகத்தான் காட்டியது. சீனத் திட்டங்கள் நிறுத்தப்படும் என்கிற அளவில் தேர்தல் காலத்தில் பரப்புரைகள் செய்யப்பட்டன. ஆனால், தேர்தலுக்குப் பின்னர் அப்படியேதும் நடக்கவில்லை. அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவிற்கு 99 வருடக் குத்தகைக்கு வழங்கப்பட்டது. தற்காலிகமாக நிறுத்தப்பட்ட கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டது.

அதாவது ரணில் - மைத்திரி கூட்டு வெளிப்படுத்தியதைப் போன்று சீனா இலங்கையிலிருந்து தூக்கி எறியப்படவில்லை. பதிலாக இன்னும் ஆழமாகத் தனது காலை இங்கு ஊன்றியது. என்றாலும் ஆட்சித் தரப்பு மேற்கு நாடுகளின் நலன்களையும் சீனாவிற்கு நிகராகச் சமாளிப்பதற்கு முழுமையாக முயற்சித்தது. அதன் ஒரு படியாகவே அமெரிக்காவின் மிலேனியம் சவால் திட்டத்திற்கு ரணில் - மைத்திரி கூட்டரசு இணக்கம் தெரிவித்தது.

இந்தத் திட்டத்தை ஏற்றக்கொள்ளும் முடிவு அன்றைய அமைச்சரவையில் எடுக்கப்பட்டது. ஆனால், எதிர்த் தரப்பிலிருந்தும் ஆளும் தரப்புக்குள் ஒரு பகுதியினரிடமிருந்தும் இந்தத் திட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பு காட்டப்பட்டுக் கொண்டே வந்தது. இதனால் ரணில் விக்கிரமசிங்க இந்தத் திட்டத்தில் கையெழுத்திடுவதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தார். எதிர்ப்பைக் காரணம் காட்டினார்.

2019இல் ஆட்சி மாறி ராஜபக்சக்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தார்கள். கோட்டாபய ராஜபக்ச அதிபரான உடனேயே மிலேனியம் சவால் திட்டத்திற்கு இடைக்காலத் தடை விதித்தார். அவரது அணியிலிருந்த அமைச்சர்கள் பலரும் அந்தத் திட்டத்தைக் கடுமையாக



ராஜபக்சக்கள் மீண்டும் சீனாவின் பக்கம் அதிகம் சாயத் தொடங்கியிருக்கும் நிலையில் நிதி முதலீடுகள் ஊடாக இலங்கையில் சீனாவைச் சமன் செய்யும் உத்தியில் இருந்து அமெரிக்கா விலகிச் செல்கின்றது.

எதிர்த்தனர்.

மிலேனியம் சவால் கூட்டுறவுத் திட்டம் என்பது 480 மில்லியன் டொலர் நிதிக்கானது. இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒன்று போக்குவரத்துத் தொடர்பான திட்டம் மற்றையது காணிகள் தொடர்பான திட்டம். மேற்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களில் நகர மற்றும் மாகாண போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக 350 மில்லியன் டொலரைச் செலவிடுவது ஒரு கட்டம். அதன் கீழ் வீதிகளின் தரத்தை உயர்த்துவது, போக்குவரத்துச் சமிக்ஞைத் தொகுதிகளை விரிவாக்கி நவீனப்படுத்துவது, போக்குவரத்து தொடர்பான நவீன கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்பு உத்திகளை உருவாக்குவது ஆகியன இதன் கீழ் மேற்கொள்ளப்படும்.

அடுத்த பகுதி 67 மில்லியன் டொலர் பெறுமதிக்கான நிலத் திட்டம். அடுத்த இருபது ஆண்டுகளில் 30 சதவீத வருவாய் ஈட்டக்கூடிய பொருளாதார வீதத்தைக் கொண்டுள்ளது. அத்தோடு இடஞ்சார்ந்த தரவு மற்றும் நில உரிமைத் தகவல்களின் கிடப்பை அதிகரிப்பதற்காக இலங்கை அரசின் முயற்சிகளை விரிவுபடுத்துவதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது. மத்தி, வடமேற்கு, வட மத்தி, கிழக்கு மாகாணங்களில் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதாகத் திட்டமிடப்பட்டது.

இந்த இரண்டாவது பகுதியைத் தான் ராஜபக்ச அணியினர் எதிர்த்தனர். இந்த நிலத் திட்டம் இலங்கையின் இறைமையின் மீது கனமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்கிறார்கள் அவர்கள். தேர்தல் காலத்திலும் அதன் பின்னரும்கூட இது ஒரு சூடான விவாதத்துக்குரிய தலைப்பாகவே இருந்தது. அமைச்சர் கம்பன்பில போன்றவர்கள் இந்தத் திட்டம் முழுமையாக நிறுத்தப்படவேண்டும் என்றார்கள்.

இந்த நிலையில்தான் இலங்கைக்கான மிலேனியம் சவால் கூட்டுறவுத் திட்டத்திலிருந்து விலகுவதற்கு அமெரிக்கா முடிவெடுத்துள்ளது. மார்கழி 15ஆம் நாள் நடந்த மிலேனியம் சவால் திட்டத்தின் இயக்குநர் சபைக் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டதாக டெய்லி மிரர் ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த முடிவு தொடர்பாக இந்தக் கட்டுரை எழுதப்படும் வரைக்கும் உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. என்றாலும் அமெரிக்காவின் இந்த நகர்வு அது இலங்கையின் நடவடிக்கைகளால் அடைந்துள்ள கோபத்தைக் காட்டுகின்றது என்று சில அரசியல் நோக்கர்கள் கணிக்கின்றனர்.

ராஜபக்சக்கள் மீண்டும் சீனாவின் பக்கம் அதிகம் சாயத் தொடங்கியிருக்கும் நிலையில் நிதி முதலீடுகள் ஊடாக இலங்கையில் சீனாவைச் சமன் செய்யும் உத்தியில் இருந்து அமெரிக்கா விலகிச் செல்கின்றது என்றும் இதனை எடுத்துக் கொள்ளலாம். ஆனால், அதற்குப் பதிலாக அமெரிக்கா எந்த வகையில் சீனாவைச் சமன்செய்ய முயற்சிக்கும் என்பதே இங்கு எழும் கேள்வி.

அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மனித உரிமைகளுக்கு அதிகம் முன்னுரிமையளிக்கக் கூடியவரான ஜோ பைடன் அதிகாரத்திற்கு வந்திருக்கும் நிலையில், மிலேனியம் சவால் கூட்டுறவுத் திட்டத்தில் இருந்து அமெரிக்கா விலகியிருப்பது இலங்கைக்கு மனித உரிமைகள் சார்ந்த அதிக அழுத்தத்தை மேற்குலகம் கொடுப்பதற்கான வாய்ப்புக்களை அதிகரித்திருக்கின்றன என்றும் சில அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ■

பசுமை உயிரியல் கூட்டுப்பசளை

பச்சை இலைகள், தாவர கழிவுகள், கரி ஆகிய மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்டது.
விலங்குக் கழிவுகள் அற்றது.
சாதாரண கூட்டுப்பசளைகளை விட மிக மிக அதிகமான நுண்ணுயிரிகளையும்
தாவர போசனை மூலகங்களையும் தன்னகத்தே கொண்டது.

போசனை உள்ளடக்கம்:		
சேதன கபன்	25.7	25%
நைதரசன் (நைதரச்சத்து) N	2.0	3.5%
பொஸ்பரஸ் (மணிச்சத்து) P	0.5	1.0%
பொட்டாசியம் (சமிபலச்சத்து) K	0.2	0.6%

Ca, Mg, Mn, Zn, Fe, Cu என்பவற்றுடன் தரமான தாவர நுண் போசனை மற்றும் போசனை இலகுங்கள்

உற்பத்தி ஆதரவு
சார பூமி லங்கா - உயிரி உற்பத்தி நிறுவனம்
ஆராய்ச்சி ஆய்வுகூடம், கண்டி.

கீது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

021 492 7778 pasumailanka@gmail.com www.pasumai.lk facebook.com/pasumaiagri

கவனிப்பாரின்றிக் கிடக்கும் மண்ணின் மைந்தர்கள்

● வி.அருணாசலம்

மண்ணின் மைந்தர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் யார்? என்ற கேள்விக்கு, தாம் வாழும் பூர்வீக நிலத்தில் எத்தகைய நெருக்குவாரங்கள் ஏற்பட்டாலும் அவற்றைத் தாங்கிக்கொண்டு அந்த மண்ணிலேயே வாழ்பவர்கள் என்று விளக்கம் கூற முடியும்.

அவ்வாறு பார்த்தால் தமிழ் மக்களிலும், சிங்கள மக்களிலும் போர்ச் சூழலில் எல்லைப்புறக் கிராமங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தவர்களையே மண்ணின் மைந்தர்கள் என மதிப்பளிக்க முடியும். தமது ஊர்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவதற்காகக் கிராம மக்களாக அவர்கள் ஆயுதம் தாங்கி நின்றனர்.

1990ஆம் ஆண்டளவில் விடுதலைப் புலிகள் விழிப்புக் குழுக்கள், ஊர்காவல் படைகள் எனக் கிராமங்களில் மக்கள் கட்டமைப்புக்களை உருவாக்கினர். பின்னர் அவர்களை ஆயுததாரிகளாக மாற்றி விடுதலைப்போராட்டத்தைப் பெரும் மக்கள் போராட்டமாக வடிவமைக்க முயன்றார்கள். புலிகளின் வரிச் சீருடைபோலல்லாது வேறு ஒரு மண்ணிறச் சீருடையை ஊர்காவல் படையினருக்கு வழங்கியுமிருந்தனர்.

சிங்கள ஊர்காவல் படை

புலிகள் தமிழ் மக்களைக் கொண்டு உருவாக்கிய ஊர்காவல் படைக்கு முன்னரே வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பூமியை அண்மித்தும், ஆக்கிரமிக்கும் நிலையிலும் எல்லைப்புறங்களில் வாழ்ந்த சிங்களவர்களைப் பயன்படுத்தி ஆளும் தரப்பால் ஊர்காவல் படை உருவாக்கப்பட்டிருந்தது.

இந்த எல்லைப்புறச் சிங்களக் குடியேற்றவாசிகளை அந்த இடத்தில் இருந்து கலைப்பதற்காகத் தமிழ் ஆயுததாரிகள் அந்தச் சிங்களக் கிராமங்களுக்குள் புகுந்து வெட்டியும் குத்தியும் எரித்தும் அவர்களுக்குத் தொல்லை கொடுத்தனர். இவற்றைத் தாங்க முடியாத அவர்களில் சிலர் எல்லைப் புறக் கிராமங்களில் இருந்து வெளியேறவும் செய்தனர்.

ஜே.ஆர் இன் ஆரூடம்

"நாம் எல்லைகளை நோக்கிச் செல்லாவிட்டால் எல்லைகள் எம்மை நோக்கிவரும்" என்று அன்றைய அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன சிங்கள மக்களுக்கு நன்கு தெளிவுபடுத்தினார். இதற்குப் பக்கபலமாகச் சிங்கள மக்களுடன் பௌத்த பிக்குகளும் நெருக்கடி மிக்க கிராமங்களில் தங்கியிருந்து மக்களுக்கு நம்பிக்கையூட்டினார்கள்.

முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் அயல் பகுதிகளிலேயே தமது சார்பில் அதிக ஊர்காவற் படையினரை உருவாக்கவேண்டிய தேவை இலங்கை அரசுக்கு இருந்தது. அனுராதபுரம், மதவாச்சி, புத்தளம், பொலன்னறுவை, மொனராகலை வரை அவர்கள் இந்த ஊர்காவற் படையினரை உருவாக்கினார்கள்.

புலிகளின் ஊர்காவல் படைகளில் சேர்ந்து போர்க்களத்தில் அதிகம் பங்களிப்புச் செய்த தமிழ் மக்கள் இன்று தமிழ் அரசியல்வாதிகளால் கண்டுகொள்ளப்படாத நிலையிலேயே உள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே போர் நடந்துகொண்டிருந்தபோது மிகப் பெரிய வடக்குக் கிழக்கு எல்லைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க இராணுவத்தால் முடியவில்லை. இதே நிலை புலிகளுக்கும் இருந்தது.

இதன் காரணமாகச் சிங்களக் கிராம மக்கள் முப்படைகளின் சீருடைகளைவிட வித்தியாசமான உருமறைப்புச் சீருடை ஒன்றை அணிந்துகொண்டு அன்றாட வாழ்க்கையும் இராணுவமும் என்ற நிலையில் தமது கிராமத்திலேயே வாழ வேண்டியிருந்தது.

சிங்களப் பகுதிகளில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட படுகொலை மற்றும் கெப்பிட்டிக் கொல்லாவ பஸ் குண்டுத் தாக்குதல்கள் என ஒரு சில சம்பவங்கள் சிங்கள எல்லைப்புற மக்களை மேலும் அச்சப்படுத்தின. இது அவர்கள் தரப்பில் ஊர்காவல் படையின் முக்கியத்துவத்தை அதிகரிக்கச் செய்தது.

மகிந்த காலத்தில் கவனிப்பு

2009இல் போர் முடிவடைந்த பின்னரும் இந்தச் சிங்கள ஊர்காவல் படையினரின் (மக்கள்) வாழ்வை நிலைபேறானதாக மாற்றும் பணி தொடங்கப்பட்டு அவர்களின் இருப்பிடம் - வசிப்பிடங்களையொட்டி வீதிகள், பொது மண்டபங்கள், பாலங்கள், மின்சாரம், இணைய - தொலைத் தொடர்பு வசதிகள், சந்தைகள், போக்குவரத்து, மருத்துவம் எனப் பல்வேறு திட்டங்கள் மகிந்த ராஜபக்சவின் ஆட்சி வீழும் வரை (2015) மேற்கொள்ளப்பட்டது. மைத்திரி - ரணில் கூட்டாட்சியில் இவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

2019 நவம்பரில் ஜனாதிபதி கோட்டாபய பதவியேற்றதும் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட ஊர்காவல் படையினர் மீண்டும் கருத்தில் எடுக்கப்பட்டனர். ஊர்காவல் படையினருக்குப் பொறுப்பாகவிருந்த முன்னாள் கடற்படையின் முக்கிய தளபதிகளில் ஒருவராக இருந்த ரியல் அட்மிரல் சரத்வீரசேகர தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு, மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக நியமனம் பெற்றுள்ளார். இவர் அதிபர் கோட்டாபயவின் சிந்தனையாளர் குழாம் என வர்ணிக்கப்படுகின்ற வியத்மக அமைப்பின் ஒரு முக்கிய செயற்பாட்டாளராகவும் காணப்படுகிறார்.

சிங்களத் தரப்பில் சிறந்த ஆவணப்படுத்தல்

சிங்கள ஊர்காவல் படையினரின் போர் நெருக்கடியான வாழ்க்கைச் சூழலை மையமாக வைத்துக் காமினி என்ற சிங்களத் திரைப்படத்தையும் தயாரித்தவர் சரத்வீரசேகர. கள அனுபவமுள்ள சரத்வீரசேகரவின் இந்த ஆவணப்படுத்தல் தமது சார்பில் மறுதரப்பின் நியாய நீதிகளைக் கவனத் தில் எடுக்காமல் செய்யப்பட்டிருக்கும் ஒன்று. இது சிங்கள எல்லைப் புற மக்களின் வாழ்க்கையைப் பேசுவதாக இருப்பது மாத்திரமே கவனத்தில் கொள்ளப்படுகிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் எல்லைப் புறக் கிராமங்களில் வாழ்ந்த சிங்கள மக்களை அதே இடத்திலும் தமிழர் பகுதிகளிலும் பலப்படுத்து வதன் மூலம் எதிர்காலத்தில் தமிழரின் பூர்வீக நிலம் என்ற கோட்பாட்டை இல்லாது செய்துவிட முடியும் என்று பௌத்த சிங்கள பேரினவாதத்தில் ஊறிப் போயிருக்கும் ஆட்சியாளர்கள் நம்புகின்றனர்.

சிங்கள ஊர்காவல் படையினரை மணலாறு (வெலிஓயா) போன்ற பகுதிகளில் குடியமர்த்தி முழுமையான உட்கட்டமைப்பு வசதிகளுடனான கிராமங்களை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுப் பதன் மூலம் இந்தத் திட்டத்தை முன்னெடுக்கின்றனர் அரசியல்வாதிகள்.

பதவியாப் பகுதியில் இருந்து நெடுங்கேணிக்குக் காப்பெற் வீதிகள் உருவாக்கப்பட்டதன் மூலம் நெடுங்கேணி சிங்கள மக்களின் நகரமாக

(21ஆம் பக்கம் பார்க்க)

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!
நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=


கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

தமிழ்த் திரையுலகுக்குக் கிடைத்திருக்கும் புது வரவு திவ்யபாரதி. 'பேச்சுலர்' படத்தின் மூலம் அறிமுகமாகின்றார். இந்த படம் தான் இவருக்கு முதல் படம். ஜி.வி. பிரகாஷுக்கு இணையாக நடித்து வருகிறார். இப்படத்தை சதீஷ் செல்வகுமார் இயக்கி வருகிறார்.

தமிழ்த் திரையுலகின் என்றென்றைக்குமான கதைக் களமான காதலை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டிருக்கிறதாம் இந்தப் படமும். காதலித்த பின்னர், ''இதுக்குத் தனியாவே இருந்திருக்கலாம்'' என்று புலம்புபவர்களின் கதைதான் இது என்கி றார்கள்.

விரைவில் படத்தை வெளியிட படக்குழு ஆயத்தமாகி வருகின்றது. இப்படத்தின் முதல் பார்வை மற்றும் இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள் சமீபத்தில் வெளிவந்து ரசிகர்களிடம் சென்றடைந்தன.

கவனிப்பாரின்றிக்....

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

உருவெடுத்து வருகிறது. வடக்குக் கிழக்கு மாகாண எல்லைப்புறக் கிராமங்களில் சிங்கள மண்ணின் மைந் தர்களான ஊர்காவல் படையினரின் குடும்பங்களை நிரந்தரமாகக் குடியேற்றிப் பொருளாதார ரீதிலும் அவர் களைப் பலப்படுத்துவது என்பது ஜே.ஆர் 40வருடங் களுக்கு முன் தீர்க்க தரிசனமாகக் கூறிய "எல்லைகள் எம்மை நோக்கி வராதவாறு தடுத்தல்" என்ற பொறிமுறை யில் அரங்கேற்றப்பட்டு வருகிறது.

தொலைத்தவை ஏராளம்

மறுபக்கத்தில் புலிகளின் ஊர்காவல் படைகளில் சேர்ந்து போர்க் களத்தில் அதிகம் பங்களிப்புச் செய்த தமிழ் மக் கள் இன்று தமிழ் அரசியல்வாதிகளால் கண்டுகொள்ளப் படாத நிலையிலேயே உள்ளனர். தமிழர்களைப் பொறுத்த வரை அவர்களே உண்மையான மண்ணின் மைந்தர்கள்.

இவர்கள் கடந்த 11 வருடங்களாகக் கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளனர். போர் முடிந்த பின்னர் தமது மக்கள் சார்பாக எதையெல்லாம் முன்னெடுக்கவேண்டுமோ அவற்றைச் சிங்களத் தலைவர்கள் செவ்வனே செய்து வருகின்ற நிலையில் மாவீரர் தினங்களில்கூட தமிழ்த் தலைவர்கள் புட்டுக்காக நாடாளுமன்றம் சென்று போராடினார்களே தவிர போருக்கு அதிகம் பங்களித்த மண்ணின் மைந்தர்களான தமிழ் ஊர்காவல் படையின ரைக்கூட அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

இதுபோலப் புலிகளுக்குப் பின்னரான அரசியல் தளத் தில் நமது அரசியல்வாதிகள் தொலைத்திருப்பவை ஏராளம்.

ஹென்விக், வாக்னர் மோரா, ஜூலியா பட்டர்ஸ், கிறிஸ் இவான்ஸ், ரியான் கோஸ் லிங், அனா டி ஆர்மஸ் ஆகிய ஹாலிவுட் நட்சத்திரங்களுடன் தனுஷும் முக்கிய வேடமேற்கி றார். அற்புதமான ஒரு அதிரடித் திரைப்படத்தில் இணைந்துகொள் வது தனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது என்று தனது கீச்சகப் (ட்ருவிற்றர்) பக்கத்தில் தெரிவித்திருக்கிறார் தனுஷ்.

தமிழ் நடிகரான தனுஷ் மீண்டும் ஆங்கிலத் திரைப்படத்தில் நடிக்கவுள்ளார். நெட்பிளிக்ஸ் நிறுவனம் தயாரிக்கும் 'தி கிரே மான்' என்கிற படத் தில் முக்கிய வேடம் தனுஷுக்கு. 'அவெஞ்சர்ஸ்', 'காப் டன் அமெரிக்கா' போன்ற படங்களை இயக்கிய ரூசோ சகோதரர்கள் இந்தப் படத்தை இயக்குகிறார்கள். மார்க் கிரேனியின் கிரே மான் என்கிற நாவலை அடிப் படையாகக் கொண்டு இந்தப் படத்தின் திரைக்கதை எழுதப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் ஜெசிக்கா

ஆட்டம் 2

உ	நா	ய	தீ
கை	யி	ண	ம்
ர்	நூ	ட்	ள்
ல்	டு	க	வா

மேலே பெட்டிகளில் தரப்பட்டுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி 2 முதல் 4 எழுத்துக்களில் உள்ள சொற் களைக் கண்டுபிடிக்கவேண்டும். குறைந்தது 13 சொற் களைக் கண்டுபிடிப்பவர்கள் வெற்றியாளர்கள். அதற்கு மேலும் கண்டுபிடிப்பவர்கள் சாதனையாளர்கள். முக் கியமான நிபந்தனை, உருவாக்கப்படும் சொற்கள் அனைத் தும் தூய தமிழ்ச் சொற்களாக இருந்தல் வேண்டும். பிற மொழிச் சொற்களைத் தமிழில் எழுதுவதாக இருத்தல் கூடாது. சொற்கள் அனைத்தும் 2 நிமிட நேரத்திற்குள் கண்டுபிடிக்கப்படுதல் வேண்டும். சரியான விடையை எழுதியனுப்புவர்களில் வெற்றியாளர்கள் ஐவரின் பெயர் கள் பத்திரிகையில் வெளியிடப்படும்.

செம்மண்

வாரமலருக்கு...

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!

அஞ்சல் /தபால்
செம்மண் வாரமலர்
551A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்
shemman.redsoil@gmail.com
தொடர்புக்கு: 021 492 7781

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வ ளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீல னைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

இந்த வார சுடோக்கு - 21

5			6		7			
	4		3		9	8		
3	7							1
4							3	
6	3		1	2	5		9	4
	1							8
8							7	6
		7	2		6		1	
			5		3			9

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்கு வதற்கானது. நேராகவும் கிடையாக வும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந் தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டி யினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடு களிலும் இரண்டாவது மற்றும் மூன்றா வது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட் டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர் களானால் அதனை அப்படியே வெட்டி

செம்மண்
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையங் கள். சரியாக எழுதி வெற்றிபெரும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்ற வரின் விவரங்களும் அடுத்தவார பத்தி ரிகையில் வெளியாகும். வெற்றிபெற்ற வர் பரிசுத் தொகையை செம்மண் அலு வலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக் கிற்கான விடை

2	8	9	4	7	5	1	3	6
5	7	6	1	8	3	4	2	9
3	1	4	2	9	6	8	5	7
7	6	2	5	1	8	3	9	4
4	5	1	9	3	2	6	7	8
9	3	8	6	4	7	2	1	5
6	9	7	8	2	1	5	4	3
8	2	3	7	5	4	9	6	1
1	4	5	3	6	9	7	8	2

குறிப்பு:

கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழி யர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

இது எங்கள் உற்பத்தி!

● குமரன்

போருக்குப் பின்னரான யாழ்ப்பாணம் நுகர்வுப் பண்டங்களின் குப்பையாக மாறிப் போயிருக்கிறது. தெற்கிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வரும் பொருள்களை நுகரும் பண்டங்களாக மட்டுமே யாழ்ப்பாணத் தமிழர்கள் வாழப் பழகிக்கொண்டு 10 ஆண்டுகளாகிவிட்ட நிலையில், அதிலிருந்து சமூகத்தையும் இந்தக் குட்டிக் குடா நாட்டின் பொருளாதாரத்தையும் மீட்பதற்குப் போராடுபவர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பமே!

"கை கிளீன்" உற்பத்திகளைத் தரும் சிவபாலசுந்தரம் நவநீதன் அவர்களில் ஒருவர். தூய்மைப் படுத்தும் திரவங்களை உற்பத்தி செய்து விற்கும் "என் பிளாஸ் சுப்பர் டிட்டர் ஜென்ட்" நிறுவனத்தின் உரிமையாளர் அவர்.

கொரோனாவிற்குப் பின்னரான காலம் அவரது வர்த்தகத்திற்கு போதுமான களச் சூழலை வழங்கியிருக்கிறது. ஆனால், கொரோனாவை இலக்கு வைத்து அவர் இந்தத் தொழிலுக்கு வரவில்லை. அதற்கு முன்பே யாழ்ப்பாணத்தில் தனது தொழிற்சாலையை நிறுவி விட்டார். அதற்கு முன்னர் தெற்கில் இதே தொழிற்சாலையை நிறுவியிருந்தார் எனினும் அதில் அவரால் வெற்றிபெற முடியவில்லை.

2014ஆம் ஆண்டு கோண்டாவில் கிழக்கு, நெசவுசாலை வீதியில் அவரது தொழிற்சாலை தொடங்கப் பட்டது. கிருமிநீக்கிகள், கைசுத்தப் படுத்தும் திரவங்கள், தரையைச் சுத்தப்படுத்தும் திரவம், வாகனங்களைத் தூய்மையாக்கப் பாவிக்கின்ற திரவங்கள், அதேபோல தூய்மைப்படுத்தலுக்குப் பாவிக்கின்ற பவுடர்கள் போன்ற தயாரிப்புகளை அவரது நிறுவனம் இப்போது உற்பத்தி செய்கின்றது.

"2010 கடைசியில கொழும்பில ராஜகிரிய எண்டிற இடத்தில் இந்த கிருமிநீக்கிகள், தூய்மையாக்கிகள் உற்பத்தி செய்யிற ஒரு தொழிற் சாலையை நிறுவி நடத்தினேன். இருந்தாலும் பெரியளவில் அது கைகொடுக்காததால யாழ்ப்பாணத்துக்க வந்திட்டன்" என்றார். செம்மண் அவரை அவரது அலுவலகத்தில் சந்தித்தது.

"50 லட்சம் ரூபாய் முதலீட்டோட உற்பத்திப் பிரிவில இரண்டு பேரையும், விற்பனைப் பிரிவில் இரண்டு பேரையும் வைச்சுக்கொண்டு தான் இந்த தொழிலத் தொடங்கினான். இப்ப இரண்டு பிரிவுகளிலையும் சேர்த்து 16 பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்திருக்கிறன். முதலீட்டில வந்த இலாபத்தை வைச்சு தொழிற் சாலையைப் பெருப்பிச்சுக் கொண்டு வாறன். அது மட்டுமில்லாமல் விற்பனைகளுக்குத் தேவையான வாகனங்களையும் கொள்வனவு செய்திருக்கன்.."

என்று தனது வெற்றிப் படிக்கட்டுக்களை அடுக்கிக் கொண்டே போனார்.

இதோடு நிற்பதல்ல அவரது திட்டம். இன்னும்... பெரிதாக.... இன்னுமின்னும் பெரிதாக.... அவரது கனவு விரிகின்றது. "தொழிற் சாலையை பெருப்பிச்சுக் கொண்டு வாறதால வாற வருசம் தைமாதம் நிச்சயம் இருபது பேருக்காவது வேலைவாய்ப்பு கொடுப்பேன்" என்கிறார் உறுதியாக.

வேலையின்றி இருந்தாலும் அரச வேலைக்கு மட்டுமே போவேன் என்று வேறு வாய்ப்புக்கள் எவற்றையும் திரும்பியும் பார்க்காது இருப்பவர்களின் மனப்போக்குக் குறித்த கவலையும் அவரிடம் கணிசமாகவே இருக்கின்றன. யாழ்ப்பாணத்து இளைஞர்கள் சந்தைப் படுத்தல் துறையில் (மார்கெட்டிங்) இன்னும் இன்னும் நிறைய முன்னேற்ற மடையும்போதே தன்போன்ற உள்ளூர் உற்பத்தி நிறுவனங்கள் இன்னும் வெற்றிகரமாக விற்பனையில் முன்னேற்றமடைய முடியும் என்கிறார் ஆதங்கத்துடன்.

"உற்பத்திப் பிரிவைவிட சந்தைப் படுத்தல் பிரிவிலதான் வேலை வாய்ப்புக் கூட. தேவை இருந்தும் சந்தைப்படுத்தல் துறையில வேலை தேடுற ஆக்கள் குறைவு எண்டுதான் சொல்லுவன்."



நவநீதனுக்கு வியாபாரத்தைத் தாண்டியும் கனவுகள் இருக்கின்றன. சமூக சேவை மீதும் அதிக நாட்டம் இருக்கின்றது. "வாற வருசத்தில இருந்து புற்றுநோயால பாதிக்கப்பட்டிருக்கிற எங்கட மக்களுக்குப் பல்வேறு உதவித்திட்டங்களை செய்யிற நோக்கில முக்கியமா வடமாகாணத்தை மையப்படுத்தி நிதியம் ஒன்று ஆரம்பிக்க இருக்கிறன். அதைவிட இந்த கொரோனா காலத்தில ஒருசில வைத்தியசாலைகள் நிறுவனங்களுக்கு எங்கடை உற்பத்திகளை இலவசமாகக் கூட வழங்கியிருக்கிறன்" என்றார்.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் அதில் அதிகளவில் நாட்டத்துடன் செயற்படாததற்கு சந்தைப்படுத்தலில் அவர்கள் எதிர்கொள்ளும் பெரும் சவால்களே காரணம் என்று சுட்டிக்காட்டும் நவநீதன், அதற்கான தீர்வாக உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றை விநியோகம் செய்யும் புதிய நிறுவனம் ஒன்றைத் தொடக்கும் திட்டத்துடன் உள்ளார்.

"எங்கட இடங்களில இருக்கிற பெரும்பாலான அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பல்வேறு வகையான பொருள்கள் தேவைப்படுது. அப்பிடியான தேவையான பொருள்களை எங்களைப் போல உள்ளூர் உற்பத்தியாளர்கள் மூலமாக கொள்வனவு செய்தினம் எண்டால் அவையின்ட தேவையும் நிறைவேறும், அதேநேரம் எங்களுக்கும் அதனால வருமானம் வரும். ஆனால் ஒரு சில தினைக்களங்களும் நிறுவனங்களும்தான் எங்களை மாதிரி ஆக்களிட்ட எங்கடை உற்பத்தியளை வாங்கீனம் மிச்சாக்கள் பெரும்பாலும் வெளியில இருந்து தான் எடுக்கினம்.." என்றும் குறைப்படுகிறார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு இது.

> உள்ளூர் உற்பத்தியாளர்கள் அதில் அதிகளவில் நாட்டத்துடன் செயற்படாததற்கு சந்தைப்படுத்தலில் அவர்கள் எதிர்கொள்ளும் பெரும் சவால்களே காரணம்.



சம்பிருந்தர் கடையடிச் சமா...

இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன!

விறுக்கு.. விறுக்கெண்டு கையை வீசிக் கொண்டு கடையடிக்கு வந்த அப்பனுக்கு கடும் புழுகம்போல.... முகத்தில முப்பத்தியிரண்டும் தெரிய வந்து நிண்டான்...

"என்னடாப்பா... ஒரே புழுகா இருக்கிறாய்! என்ன விசேசம்?" அவன்ர வாய்க்குள்ளாள விசியத்தை எடுக்க வேணும் எண்ணடதுக்காகக் கேட்டன்.

"என்னண்ணை உனக்குத் தெரியாமல் இருக்குமே... உன்ர வீட்டுக்காரருக்குக் கடும் அடியாம்? நல்லூரிலயும், மாநகரத்திலயும் வாங்கிக் கட்டிக் கொண்டுட்டினம் போல..."

எனக்கு சும்மாவே கஜன்ஸைக் கண்ணில காட்டக்கூடாது. அதுக்குள்ள மணிக்கு மணியடிச்சதில இன்னும் கடுப்பு... இப்ப இவன் வேறை என்னைக் கிளறுறான்...

"தம்பி.... உங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம்... பேப்பருகளில வாற விசியங்கள்தான்... நான் சொல்ல வெளிக்கிட்டா நாறிப் போவியள்... கொஞ்சம் அடக்கி வாசியுங்கோ....!

நல்லூரிலயும், மாநகரத்திலயும் பட்ஜெட் தோத்தது என்ன உங்கட கட்சிக்காரிரின்ர விசுவாசத்திலயே.... எங்கட கட்சிக்காரர் கட்சிக்குள்ளயே ஆளாளுக்கு ஆப்பு வைக்க வெளிக்கிட்டதாலதான் எண்டது உனக்குத் தெரியுமே?

நான் உங்கள் எல்லாருக்கும் கனக்கத் தரம் சொல்லிப் போட்டன் தானே... தமிழரசுக் கட்சியை அழிக்கிறதுக்கெண்டு முளைச்ச விசச் செடியளால தான் உவ்வளவும்....

சபை கவண்டது, தலைமை போனதெல்லாத்தயும் விடுவம்... அடுத்த தலைகள் ஆரெண்டு உங்களால சொல்ல முடியுமே? உங்களால என்ன.... ஆனானப்பட்ட மாவையராலேயே அதைச் சொல்ல முடியாத நிலைமை! தெரியுமே இப்ப....!

ரெண்டு சபையிலயும்.... தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குரிய கதிரையில் ஆரை இருத்திறதெண்டு தனிய மாவையர் மட்டும் முடிவெடுக்கேலா எண்டு சித்தரும், அடைக்கலமும் வரிஞ்சு கட்டிக் கொண்டு நிக்கினமாம்.

அது ஒரு புறமிருக்க... அது ரெண்டும் தழிரசுக் கட்சிக்கு உரிய சீற்... அதை வேற யாரும் உரிமை கொண்டாட ஏலாது எண்டு இங்கால மார்டின் றோட்டில இருக்கிற மூத்தோர், முதியோர் சொல்லுகினமாம்....

தமிழரசில ஆருக்குக் குடுக்கிறது எண்டுறதை என்னைக் கேட்டுத்தான் குடுக்க விடுவன் எண்டு ஒவ்வொரு பக்கத்தாலயும் மாவையருக்குக் கோலுக்கு மேல கோலாம்.... வழக்கம் போல... ஓம்... அண்ணன்...., பாப்பம் தம்பி...., நாங்கள் கதைப்பம்... எண்டு மாவையரும் ஒருத்தருக்கும் பிடிகொடுக்காம ஓடுடாராம்!

இதுக்குள்ள தங்கட சபையில - தங்களுக்குள்ள ஒருவரைத் தெரிவு செய்யுறதுக்கு எங்களைக் கூப்பிட்டெல்லோ கதைக்க வேணும் எண்டு ரெண்டு சபையிலயும் உறுப்பினர்களுக்குள்ள குசு, குசுப்பு ஒண்டும்போகுது..."

அவன் சீண்டினதில எனக்குக் கோவம் வந்து கடகடவெண்டு பொரிஞ்சு போட்டன்.

"அண்ணை.... மாநகரத்தில திரும்பவும் ஆனோல்டைத் தான் போடப் போகினமாம்...." திரும்பவும் என் வாயைக் கிளறினான் சுப்பன்.

"ஒந்தம்பி.... அப்பிடி ஒரு ஐடியா அவையளுக்கு இருக்குத்தானாம்.... ஆனா... எங்கட மணி இருக்குதுதானே... அவன் பெடியன் மாவையருக்குக் கோல் பண்ணி கொஞ்சம் விளங்கப்படுத்தியிருக்கிறானாம்....

ஐயா, கூட்டமைப்பின்ர பிடி விட்டுப் போகக் கூடாதெண்டா நீங்க அவரைத் திரும்பவும் போடுறதைப் பற்றி யோசிக்காதையுங்கோ.... நீங்க அவரைத் தவிர ஆரைப் போட்டாலும் நாங்கள் துணையா நிப்பம் எண்டவனாம்....

ஓந் தம்பி நாங்கள் உதைப்பற்றி கதைப்பம், நேரில சந்திப்பம் எண்டு மாவையரும் செல்லியிருக்கிறார். அநேகமா நாளைக்கு - ஞாயிற்றுக்கிழமை இந்தச் சந்திப்பு நடக்குமெண்டு நம்புறன்.

நல்லூரில மதுரையும், மாநகரத்தில தஞ்சாவூருமா ஆட்சி அமைப்பம் எண்டதுதான் மணியின்ர டீல் போல.... நல்லூரில அந்தப் பொம்பிளைக்கு செயாமன் போஸ்டைக் குடுத்திட்டா.... கஜன்ஸ் கூட்டம் மாநகரத்தில அடக்கி வாசிக்கும் எண்டுறது மணியின்ர கணிப்புப் போல.....

ஆனா... இஞ்சால கொஞ்சப் பேர்.... மறுபடியும் ஆனோல்ட்டைக் கொண்டு வந்து... பட்ஜெட்டைத் திரும்பவும் தேக்கடிச்சா... சபையே இல்லாமப் பண்ணிப் போடலாம் எண்டு நினைக்கினம் போல.... சபை கலைஞ்சுட்டா.... ஆனோல்ட்டத் தவிர ஆரும் முதல்வராயும் வர ஏலாதெல்லே.... அதே நேரம்... மணி, மயூரன்... எண்டு சபையை விட்டு நிப்பாட்டுறதுக்குத் தாங்கள் கேட்ட தடையும் தேவைப் படாது.... ஒரேயடியா மணியையும் தூக்கிரலாம் எண்டும் ஒரு பிளான் ஓடுதாம்....

எதுக்கு அந்தரப் படுகிறியள்.... இன்னும் ஒரு கிழமையில தெரியப் போகுது.... என்னப் போல.... கொஞ்சம் பொறுத்திருந்து வேடிக்கை பாருங்கோவன்....

இராமன் ஆண்டாலென்ன... இராவணன் ஆண்டாலென்ன.....?" நான் வெளிக்கிட்டிட்டன்.

- ஆதிரன்

மருதனார்மடம்....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வுகூறலாக இருக்கின்றது. ஆனால் உறுதிப்படுத்தப்பட வில்லை.

வெளித் தொடர்புகளை அதிகம் கொண்டுள்ள இந்த மருதனார்மடம் சந்தையுடன் தொடர்புபட்ட வர்கள்தான் சங்கானை, சுன்னாகம், திருநெல்வேலி போன்ற சந்தைகளிலும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளார்கள். எனவே மருதனார் மடத்திலிருந்து தொற்று ஏனைய இடங்களிற்குப் பரவியிருக்கக்கூடும் என்கிற ஊகம் முதல் கட்ட விசாரணைகளில் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இதனை உறுதிப்படுத்துவதற்கும் இன்னும் பல ஆதாரங்கள் தேவையாக உள்ளன அதிகாரிகளுக்கு.

மருதனார்மடத்திற்கும் வெளி மாவட்டங்களுக்கும் குறிப்பாக மேல் மாகாணத்திற்குமான அதிகரித்த தொடர்புகள் காரணமாகத்தான் அந்தச் சந்தையில் சுகாதார நடைமுறைகள் இறுக்கமாகப் பேணப்படவேண்டும் என்று சுகாதாரத்துறை அதிகாரிகள் வலியுறுத்தி வந்தார்கள். ஆனால், அதனை உரிய வகையில் கவனத்தில் எடுப்பதற்குப் பிரதேச சபை தவறிவிட்டது என்பதே முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு.

சந்தையில் இருந்தவர்கள் நாடிக்கு கீழே முகக் கவசத்தினை இழுத்துவிட்டுவிட்டு வியாபாரத்தில் ஈடுபட்டார்கள், வெத்திலையை மென்றுவிட்டு கண்ட இடங்களிலும் துப்புவதும் அதிகளவில் நடந்தது, சந்தை மறுசீரமைப்புக்காக ஒரு சிறிய பகுதியிலேயே வியாபாரம் நடந்தது என்பதால் சனநெரிசல் அதற்குள் அதிகமாக இருந்தது, சந்தைக்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் தனித்தனியான வாசல்கள் பயன்படுத்தப்படவில்லை, நுழையும் வாசலில் கைகழுவதற்கான வசதிகள் ஏதும் செய்யப்படவில்லை என்று காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

"பிரதேசசபைக் காரரிட்டயும், எங்கட சனத்திட்டையும், பீ.எச்.ஐ. வந்து எத்தினையோதரம் சொல்லிப்பாத்தார் ஒருபக்கத்தால போங்கோ ஒரு பக்கத்தால வாங்கோ, கை கழுவ உரிய ஏற்பாடுகளை செய்யுங்கோ, கண் காணிக்கிறதுக்கு ஆக்களை வச்சிருங்கோ எண்டு எல்லாம்.. ஆனால் ஒண்டும் நடைமுறையில இல்லை.. இப்பிடியிருக்கேக்க எப்பிடி கொரோனா பரவாமல் இருக்கும்.." என்று செம்மண்ணிடம் தெரிவித்தார் சந்தையோடு தொடர்புடைய ஒருவர்.

தொற்று பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தமையால் முன்னெச்சரிக்கையாக சுகாதாரப்பிரிவினரால் சந்தை அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபை சார்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் கவனத்தில்கொள்ளப்படாததை அடுத்து, நீதிமன்றத்திற்கு சுகாதார அதிகாரிகளால் அறிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டு கட்டளை பெறப்பட்டது. அதன் பின்னரும்கூட சந்தையின் சுகாதார நடைமுறைகளில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

நீதிமன்றக் கட்டளையை மதித்துச் செயற்படுவதற்குப் பதில் கட்டளை பெற காரணமாக இருந்த சுகாதாரப்பிரிவினர் மீது பல்வேறு அரசியல் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன என்பதையும் செம்மண் தனது விசாரணையில் அறிந்தது. ஒருவேளை நீதிமன்றக் கட்டளைக்குப் பின்னராவது போதிய



முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் தொற்று மேலும் பரவுவது கட்டுப்படுத்தப் பட்டிருக்கக்கூடும்.

இந்த நிலைமைக்கு பிரதேச சபையினரை மட்டும் காரணமல்லர், காவல்துறையினரும்கூட இந்தவிடயத்தில் தமது கடமைகளைச் சரிவரச் செய்திருக்கவில்லை என்பது கண்கூடு. சந்தையில் சுகாதார நடைமுறைகள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும்கூட சுன்னாகம் காவல்துறையினரால் அவர்களில் ஒருவருக்கு எதிராகவேனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

"இந்த விடயத்தில் ஒரு தரப்பை மட்டும் குற்றஞ்சாட்ட முடியாது. நிர்வாக ரீதியாக பல அமைப்புக்களதும் கூட்டுமுயற்சியின்மையே இன்றைய நிலைக்குக் காரணம்.." என்று செம்மண்ணுடன் தொடர்பிலிருக்கும் பெயர் குறிப்பிட விரும்பாத பொறுப்புவாய்ந்த அதிகாரியொருவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் குறைபாடுகளைக் களையாத வரையில் இனிவரும் காலங்களிலும் கொரேனாவைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் என எச்சரிக்கிறார்கள் சுகாதார அதிகாரிகள்.

வாங்க! வந்து பாருங்க! வுகான் மக்கள் எதற்கும் தயார்

உலகம் முழுவதையும் தன்முன் மண்டியிட வைத்து கோரத் தாண்டவம் ஆடும் கொரோனா பெருந் தொற்று முதன் முதலில் சீனாவின் வுகான் நகரில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு வருட காலத்திற்கு முன்னர் வுகானில் உள்ள உயிர்ச் சந்தையான குவானனில் விற்கப்பட்ட வௌவால்களில் இருந்தே கொவிட் - 19 வைரஸ் பரவியது என்று தொடக்கத்தில் நம்பப்பட்டது.

இதனால் கொரோனாவின் உற்பத்தியிடம் வுகானே என்கிற சர்ச்சை எழுந்தது. ஆனால், சீனா அதனை அடியோடு மறுத்தது. கொரோனாவைச் சமாளிக்க முடியாமல் அதற்கு 3 லட்சத்து 18 ஆயிரம் பேரைக் காவுகொடுத்த அமெரிக்காவோ வைரஸ் உருவாக்கத்திற்கு மீண்டும் மீண்டும் சீனாவையே குற்றஞ்சாட்டியது.

உலகின் மிகப் பெரிய வைரஸ் ஆய்வுகூடம் ஒன்று வுகானில் இருக்கப்போக, அதிலிருந்து கசிந்ததுதான் இந்தக் கொரோனா வைரஸ் என்கிற ஊகங்களும் கதைகளும் கிசுகிசுக்களாகத் தீவிரமாகப் பரவின.

ஆனால், இதில் எதற்கும் ஆதாரம் இல்லை என்றது உலக சுகாதார அமைப்பு. கொரோனா வைரஸ் வௌவால்களில் இருந்து வந்த, திரிந்த வடிவமாக இருக்கலாம் என்றாலும் அது குவானன் சந்தையில் இருந்து உருவாகிப் பரவியமைக்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று அறிவித்தது.

இதனால் கோபமடைந்த அமெரிக்க அதிபர் ட்ரம்ட், உலக சுகாதார அமைப்பு சீனாவிற்கு ஆதரவாக நடக்கின்றது என்று கொதித்ததுடன் அந்த அமைப்புக்கான அமெரிக்காவின் நிதிப் பங்களிப்பை நிறுத்துகின்றேன் என்றும் அறிவித்தார். போதாததற்கு கொரோனாவை சீன வைரஸ் என்றும் அழைத்துக் கடுப்பேற்றினார்.

அமெரிக்கா மட்டுமல்ல ஜேர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட மேற்கு நாடுகள் பலவும் கூட சீனாவை நம்பத் தயாராக இல்லை. கொரோனாவின் உற்பத்தியிடம் சீனா தான் என்பதை அவை விடாப்பிடியாக நம்பியதுடன் அது பற்றி முழுமையான உலகளவிலான விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் பிடிவாதம் பிடித்தன.

சீனா உலகளவிலான விசாரணை ஒன்றை ஏற்பதற்கு அடியோடு மறுத்தது. ஆனால் பக்கச் சார்பற்ற விசாரணைக் குழு ஒன்று அமையும் பட்சத்தில் உலக சுகாதார அமைப்போடு ஒத்துழைப்பதற்குத் தான் தயார் என்று அறிவித்தது. இதையடுத்து அடுத்த மாதத்தில் சீனாவிற்குத் தனது விசாரணைக் குழுவை அனுப்புவதற்கு உலக சுகாதார அமைப்பு முடிவெடுத்திருக்கிறது. அது பற்றிய அறிவிப்பு வியாழக்கிழமை வெளியிடப்பட்டிருக்கின்றது.

"அவர்கள் வரவேண்டும். நான் அவர்களை வரவேற்கின்றேன். ஒருவேளை அது (கொரோனா வைரஸ்) இங்கிருந்துதான் வந்தது என்றால் எப்படி உருவானது என்பதை நாமும் அறியவேண்டும். அது குவானன் சந்தையில் இருந்து வந்திருக்கும் என்று நான் நம்பவில்லை" என்கிறார் வான். வுகான் வாசி அவர்.

வுகான் வாசிகள் பலரது நிலைப்பாடும் அதுதான். தமது இடத்திலிருந்து கொரோனா வரவில்லை என்று அவர்கள் திடமாக நம்புகிறார்கள். அதனால் உலக சுகாதார அமைப்பு "வரட்டும். வந்து பார்க்கட்டும் அது இங்கிருந்து வரவில்லை என்பதை" என்கிறார்கள்.

உலக சுகாதர அமைப்பு தனது விசாரணைப் பயணத்தில் வுகானுக்கும் செல்லுமா என்பது தெளிவில்லை. இதுவரை அது பற்றிய அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. கடந்த ஆடி (ஜூலை) மாதம் சீனாவிற்குச் சென்ற இந்த அமைப்பின் இரு விசாரணை அதிகாரிகள் வுகானுக்குச் செல்லவில்லை என்பது கவனத்திற்குரியது.

வுகானில் தற்போது புதிய ஒழுங்கிற்குக் கீழ் முழுமையாக இயல்பு நிலை திரும்பிவிட்டாலும் அங்குள்ள குவானன் சந்தை கடந்தை மாதம் முதல் ஒரு வருட காலமாகச் சீன அதிகாரிகளால் மூடப்பட்டே இருக்கின்றது. இந்தச் சந்தையில் இருந்தே வைரஸ் பரவியது என்பதை ஏற்பதற்கு அறிவியல் ஆய்வுகள் இடந்தரவில்லை என்கின்றனர் சீன அறிவியலாளர்கள். அவர்களது கருத்துப்படி கொரோனா வைரஸ் குனானனுக்கு வருவதற்கு முன்பே அது இரண்டு பரவல் பாதைகள் மூலம் பரவத் தொடங்கியிருந்தது என்றும் சீனாவின் சில ஆய்வுகள் கூறுகின்றன.

சீன ஆய்வாளர்கள் சேகரித்து வைத்திருக்கும் விலங்குகள் மனிதமாதிரிகளில் இருந்து தமது விசாரணைகளைத் தொடங்க இருக்கும் உலக சுகாதார அமைப்பினர், அது எங்கிருந்து உற்பத்தியாகியது என்பதைக் கண்டறிய முயற்சிப்பார்கள் இந்தப் பயணத்தின்போது. ■

இன்ஸ்டாகிராமில் ஒளிப்படங்களை அதிகம் பதிவிடும் நடிகைகளில் ஒருவர் அக்ஷரா கவுடா. அடிக்கடி தனது கவர்ச்சி ஒளிப்படங்களை பதிவேற்றி இளசுகளைச் சூடேற்றி அதன் மூலம் பெரும் ரசிகர் பட்டாளத்தையே தன்னைத் தொடர வைத்திருப்பவர். பெங்களூரைச் சேர்ந்த மாடல் அவர் அண்மையில் திடீரென சேலை அணிந்தபடி ஒரு ஒளிப்படத்தைப் பதிவேற்றி இருக்கிறார். ஆச்சரியம் என்னவென்றால் அதற்கும் விருப்புகள் அள்ளுகின்றன. நடிகை அக்ஷரா கவுடா, சினேகனின். 'உயர்திரு 420' படம் மூலம் தமிழில் அறிமுக மானவர். தமிழில், விஜய்யின் துப்பாக்கி, இரும்பு குதிரை, சங்கிலி புங்குலி கதவ தொற போன்ற படங்களில் நடித்திருந்தார். விஷ்ணுவர்தன் இயக்கத்தில் அஜித், நயன்தாரா, ஆர்யா, டாப்ஸி நடித்த ஆரம்பம் படத்தில் முக்கிய வேடத்தில் நடித்திருந்தார். இதில் இடம்பெற்ற 'ஸ்டைலிஷ் தமிழச்சி' பாடல் மூலம் அதிக பிரபலம் அடைந்தார். லாக்டவுனுக்கு முன்பு, கார்த்திக் ராஜா இயக்கும் சூர்ப்பனகை படத்தில் நடித்து வந்தார். கன்னடம் மற்றும் தமிழில் சில படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிரீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.12.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781